

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | பிப். 02, 2012 | புரட்சி 11 | முழக்கம் 03 | விலை: ரூ.2.50


### பிலிப்பைன்ஸ் மாவோயிச விடுதலைப் போராளி பேட்டி

## ஈழத் தமிழர் இனப்படுகொலை குற்றங்களை – மனித உரிமை மீறல் எனும் சிமிழுக்குள் அடைத்து விடக் கூடாது

ஈழத்தில் தமிழர்கள் தங்கள் இறையாண்மைக்குப் போராடுவதற்கு முழு உரிமை படைத்தவர்கள். அது ஒன்றுதான் தமிழர்களை இனப்படுகொலையிலிருந்து பாதுகாக்கும் என்று பிலிப்பைன்சு நாட்டின் போராளியும், மார்க்சிய லெனினிய அறிஞருமான பேராசிரியர் ஜோஸ்பெரியா சிசன் கூறியுள்ளார். 'தமிழ்நெட்' இணையத்துக்கு அவர் சிறப்புப் பேட்டி ஒன்றை வழங்கியுள்ளார். 72 வயது மார்க்சிய-லெனினிய சிந்தனையாளரான சிசன், அமெரிக்க ஆதரவு பிலிப்பைன்ஸ் ஒடுக்குமுறை அரசுக்கு எதிராக போராடி வருகிறார். பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் தத்துவார்த்தவாதிகளில் ஒருவரான இவர், அந்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கியவர். மாவோயிச சிந்தனைகளை ஏற்றுக் கொண்ட அவரது பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி 1968 இல் உருவானது. அடுத்த ஆண்டே ஒடுக்குமுறை பிலிப்பைன்ஸ் அரசுக்கு எதிராக 'புதிய மக்கள் ராணுவம்' என்ற ராணுவ அமைப்பை உருவாக்கினார். அந்த மக்கள் ராணுவம் பிலிப்பைன்சுக்கு எதிராக போராடி வருகிறது. இக்கட்சியின் முன்னணி அமைப்பாக பிற இடதுசாரி கட்சிகள், சர்ச் நிறுவனங்களின் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட 'பிலிப்பைன்ஸ் தேசிய ஜனநாயக முன்னணி' அமைப்பு செயல்பட்டு வருகிறது. பிலிப்பைன்சு அரசுக்கும் போராடும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி, சமரசப் பேச்சுகளைத் தொடங்கிடும் முயற்சிகளில் 2011 இல் நார்வே இறங்கியது. ஒஸ்லோ நகரில் கடந்த ஆண்டு பிப்ரவரியில் பேச்சு வார்த்தைகள் தொடங்கியவுடனேயே, அமெரிக்கா பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியையும், அதன் மக்கள் ராணுவத்தையும் பயங்கரவாத அமைப்புகளாக அறிவித்ததால், பேச்சு வார்த்தை முடங்கியது. தொடர்ந்து அய்ரோப்பிய ஒன்றிய நாடுகளும் அமெரிக்காவைப் பின்பற்றி பயங்கரவாத அமைப்பாக அறிவித்தன.

முன்னணி அமைப்பான தேசிய ஜனநாயக முன்னணியின் செயல்பாடுகளை முடக்கும் நோக்கத்தோடு பேராசிரியர் சிசன் பயங்கரவாதத்தை ஆதரிப்பவர் என்று அமெரிக்கா 2002 இல் முத்திரை குத்தியது. அதைத் தொடர்ந்து நெதர்லாந்தில் அய்ரோப்பிய ஒன்றியத்துக்கான நீதிமன்றத்தில் பேராசிரியர் சிசனுக்கு எதிராக அமெரிக்காவின் தூண்டுதலில் பிலிப்பைன்சு சர்வாதிகார ஆட்சி வழக்குப் போட்டது. 2007 ஆம் ஆண்டில் இதற்காக பேராசிரியர் சிசன் கைது செய்யப்பட்டு இரண்டு வாரம் சிறையில் அடைக்கப்பட்டார். ஏழாண்டு காலம் வழக்கு நடந்தது. பேராசிரியர் சிசன் வலிமையான வாதங்களோடு வழக்கை எதிர் கொண்டார். இறுதி வெற்றி சிசனுக்குத்தான். 2009 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி அய்ரோப்பிய ஒன்றியங்களுக்கான நெதர்லாந்து நீதி மன்றம், பேராசிரியர் சிசன், பயங்கரவாதி அல்ல என்ற தீர்ப்பை வழங்கியது. தொடர்ந்து பயங்கர வாதிகள் பட்டியலிலிருந்து அவரது பெயர் நீக்கப்பட்டது.

"அய்ரோப்பிய நீதிமன்றம் வழங்கிய 'செப்.30' ஆம் தேதி தீர்ப்பு - வரலாற்றில் இடம்பெறத் தக்கதாகும். பேராசிரியர் சிசன் இதை எதிர்கொண்ட முறை மிகவும் நுட்பமான அறிவுத் திறனின் வெளிப்பாடு என்றே கூற வேண்டும். அய்ரோப்பிய ஒன்றிய நாடுகள் தங்கள் விருப்பம்போல் எந்தத்தனி மனிதரையும் பயங்கரவாதியாக சித்தரிக்கும் எதேச்சாதிகார போக்கிற்கு எதிரான மனித உரிமைக்குக் கிடைத்த வெற்றி" - என்று இத் தீர்ப்பு குறித்து மனித உரிமை அமைப்பான 'டிஃபெண்ட்' (Defend) அறிக்கை வெளியிட்டது.

பேராசிரியர் சைசன் 'தமிழ்நெட்' இணைய தளத்துக்கு அளித்த பேட்டியில் : பிலிப்பைன்ஸ் மக்கள் நடத்தும் போராட்டத்துக்கும், ஈழத் தமிழர்கள் நடத்தும் போராட்டத்துக்குமிடையே ஒற்றுமைகள் உண்டு என்று குறிப்பிட்டுள்ளார். இரண்டு போராட்டங்களும் தேசிய விடுதலையையும் ஜனநாயகத்தையும் இலக்குகளாகக் கொண்டுள்ளன. தங்களின் தேசிய இறையாண்மையை உறுதி செய்து கொள்வதற்காக சுதந்திரம், ஜன நாயகம், வளர்ச்சி, சமூகநீதி என்ற குறிக்கோளுக்காகப் போராடுகிறார்கள். நாங்கள் எங்கள் மக்களை ஒடுக்கி வரும் பெரும் முதலாளிகள், நிலப் பிரபுக்களுக்கு சாதகமான ஆட்சியை எதிர்த்துப் போராடுகிறோம். ஈழத் தமிழர்கள் சிங்கள காலணியத்தை எதிர்த்துப் போராடி வருகிறார்கள். ஈழத் தமிழர்களை தங்களின் நிரந்தர அடிமை களாக்கிக் கொள்வதற்கு சிங்கள காலனி ஆட்சி, ஒற்றை ஆட்சியைத் திணிக்கிறது" என்றார் பேராசிரியர் சிசன்.

சர்வதேச நாடுகள் இது தொடர்பாக மேற்கொள்ளும் 'பேச்சு வார்த்தைகள்' பற்றி கருத்து கூறுகையில், "இத்தகைய முயற்சிகளை சரியான அணுகுமுறையில் பயன்படுத்தினால், பயன் கிடைக்கும் என்றே கருதுகிறேன். சமரசப் பேச்சு வார்த்தை முயற்சிகளிலிருந்து; ஒதுங்கி நிற்பதை நான் ஏற்கவில்லை. புரட்சிகர சக்திகள் இத்தகைய சர்வதேச பேச்சுவார்த்தைகளில் பங்கேற்குமபோது தான் தங்கள் போராட்டத்துக்கான நியாயங்களையும் போராட்டத் திட்டங்களையும உலகத்தின் பார்வைக்குக் கொண்டுச்செல்லும்வாய்ப்பு கிடைக்கிறது. இந்த வாய்ப்பை விடுதலைப் புலிகள் இயக்கம் சரியாக பயன்படுத்திக் கொண்டது என்பதே என் கருத்து. போர் நிறுத்த ஒப்பந்தங்களை மீறியது சிறீலங்கா தான் என்பதும், எந்த சமரசத் தீர்வுக்கும் அவர்கள் முட்டுக்கட்டையாகவே இருந்தார்கள் என்பதும் நார்வே பேச்சுவார்த்தை முயற்சிகளின் வழியாகவே வெளிப்பட்டது. இது அவர்களின் தேசிய சுய நிர்ணய உரிமைப் போராட்டத்துக்கான நியாயங்களை மேலும் வலிமைப்படுத்தியது" என்றார் சிசன்.

மார்க்சிய லெனினிய கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டுள்ள இடதுசாரி அமைப்புகள், தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆதரிப்பதைத் தவிர வேறு வழி இல்லை. இடதுசாரி கொள்கைகளை

4 ஆம் பக்கம்

## என்னை கொல்லாமல் இருப்பதற்குக் காரணம்...

இன்றைய தினம் இந்த மதுரை மாநகருக்கு எனது கொள்கை பிரச்சாரத்திற்காக வந்த என்னை இந்த மதுரை மாநகராட்சி மன்றத்தார் அழைத்து வரவேற்பளித்து பெருமைப்படுத்தியதற்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ மக்களுக்காகத் தொண்டு செய்கிறவர்களை ஊக்குவிக்கவும்,பாராட்டவும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவது சாதாரணமானதேயாகும். என்னைப் போலொத்த பெரும்பான்மையான மக்களின் கருத்துக்கு மாறாக தொண்டாற்றுகின்ற எனக்கு வரவேற்பு கொடுப்பது என்பது சாதாரணமான காரியமல்ல.

புரட்சிகரமான கருத்து என்று சொல்லும்படியான பல மாறுதல் கருத்தை சொல்லி வருகிறேன். இது போன்று பெரும்பாலான, மிகப் பெரும்பாலான மக்களின் கருத்துகளை சொல்கிறவர்களை அதன்படி நடக்கிறவர்களை மக்கள் எதிர்ப்பது மட்டுமல்ல, கொலை செய்யப்படுவது இயற்கை. ஆனால், 40 ஆண்டுகளுக்கும் மேலாக பெரும்பாலான மக்களின் கருத்துக்கு, நடத்தைக்கு மாறாக இருந்து வருகிறேன் என்றாலும் இதுவரை என்னை யாரும் கொலை செய்யவில்லை என்பதோடு இந்த நகர மக்கள் எனக்கு வரவேற்பளிக்கிறார்கள் என்றால் மக்கள் அவ்வளவு பண்பாடு பெற்றிருக்கிறார்கள் என்பது தவிர இதனால் எனக்கொன்றும் பெருமை இல்லை.

யேசுநாதரை நாத்திகர் என்று சொல்லி அவரை சிலுவையில் அறைந்தார்கள். முகமது நபியை நாத்திகர் என்று சொல்லி ஓட ஓட அடித்து விரட்டினார்கள். அதுபோன்றே பவுத்தர்கள், சமணர்கள் எல்லாம் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சமுதாய சீர்திருத்தம் செய்ய முற்பட்ட ஆப்ரகாம் லிங்கனை சுட்டுக் கொன்றார்கள். கென்னடியை சுட்டுக் கொன்றார்கள். நமது நாட்டில் ஒன்றும் பெரிய மாறுதல் செய்யவில்லை. "கோயில்கள் எல்லாம் குச்சுக்காரி விடுதிகள்", "பார்ப்பனர் விலகிக் கொண்டு மற்றவர் படிக்க இடம் கொடுக்க வேண்டும்", "காங்கிரசில் அயோக்கியர்கள் பெருகி விட்டார்கள்; அதை கலைக்க வேண்டும்" என்று சொன்னதற்காக காந்தியை சுட்டுக் கொன்றார்கள். நான் கொல்லப்படாமல் இருப்பதற்கு காரணம் ஒன்று மக்கள் பக்குவம் பெற்றிருக்க வேண்டும் அல்லது எனது தொண்டினை மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளாமலிருக்க வேண்டும்.

நமது மக்கள் அறிவு பெற முடியாமல் நீண்டநாட்களாகத் தடுக்கப்பட்டு வந்ததன் காரணமாக உலகத்தில் நமது மக்கள் காட்டுமிராண்டிகளாக இருக்கிறார்கள். அறிவில் வளர்ச்சியடைய முடியாதவர்களாக, விஞ்ஞானத்தில் எந்த அதிசயத்தையும் கண்டுபிடிக்க முடியாதவர்களாக மற்ற வெளிநாட்டு மக்கள் காட்டுமிராண்டிகள் என்று அழைக்கும் வண்ணம் இருக்கிறோம். நமது நாட்டில் தெய்வீக சக்தி பொருந்தியவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள்.

பல மகான்கள், மகாத்மாக்கள், ஆனந்தாக்கள், தீர்த்தாக்கள் எல்லாம் இருந்திருக்கின்றனர். ஆனால், அவர்களில் எவரும் எந்த விஞ்ஞான அதிசய அற்புதத்தையும் செய்யவில்லை. அவர் என்னடா மகான் என்றால், "சாணியைத் தொட்டால் ஜவ்வாது வாடை வரும்", "கையை நீட்டினால் சாம்பல் வரும்" என்கின்றானே தவிர,இன்னதைச் செய்தான் என்று சொல்ல ஒன்றுகூட இல்லை. நமக்குள்ள நூல்கள் என்பவை எல்லாம் மனிதன் படித்தால் மோட்சத்திற்கு போகலாம். பக்தி வரும் என்றுசொல்ல முடியுமே தவிர, மனிதனுக்கு அறிவு வரும் என்று சொல்லும்படியான நூல் ஒன்றும் நமக்கு இல்லை. நான் குறை சொல்வதெல்லாம் 1000-ம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாக சொல்லப்படுகிறதைக் குறை சொல்கின்றேன். அதைப் பரப்பி நம் மக்களை காட்டுமிராண்டிகளாக்க முற்படுகிறவர்களைத்தான் குறை சொல்கின்றேனே தவிர, இன்றைக்கு இருப்பவனை இந்த ரயில், மோட்டார், மின்சார விளக்கு, மைக் போன்ற விஞ்ஞான சாதனைகள் செய்தவனைச் சொல்லவில்லை.

**(13.12.1969 அன்று மதுரையில் நடைபெற்ற நகராட்சி வரவேற்பில் தந்தை பெரியார் ஆற்றிய உரை – 'விடுதலை' 24.12.1969)**

# இந்தியாவில் நடப்பது-மதத்துக்கான அரசு

இஸ்லாம் மதத்தை விமர்சித்து நூல் எழுதியதற்காகவே சாலமன் ருஷ்டி, மதப் பயங்கரவாதிகளின் கோபத்துக்கு உள்ளானார். 20 ஆண்டுகளுக்கு முன் அவர் எழுதிய ‘சாத்தானின் வேதங்கள்’ என்ற நூலுக்கு முஸ்லீம் மதவாதிகளிடம் கடும் எதிர்ப்பு எழுந்தபோது, அதற்கு வருத்தமும் தெரிவித்துக் கொண்டார். அண்மையில் ராஜஸ்தான் மாநிலத்தின் இலக்கிய விழா ஒன்றில் பங்கேற்கவிருந்த அவர், விழாவில் பங்கேற்க விடாமல் தடுக்கப்பட்டார். அம்மாநில காங்கிரஸ் முதல்வர் அசோக் கெலாட், அவரது உயிருக்கு ஆபத்து இருப்பதாக காவல்துறை வழியாக ஒரு பொய்க் கதையை உருவாக்கி தடுத்து விட்டார். உ.பி.யில் நடைபெறவிருக்கும் தேர்தலில் முஸ்லீம்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே இப்படி ஒரு கபட நாடகத்தை காங்கிரசார் ஆடியிருப்பதாக ஊடகங்கள் குற்றம்சாட்டுகின்றன. மதங்களை விமர்சிக்கவே கூடாது என்ற மதவெறியை பகுத்தறிவாளர்களும், கருத்துரிமையை மதிப்போரும் ஒரு போதும் ஏற்க மாட்டார்கள். இது தொடர்பாக ‘இந்து’ நாளேட்டில் வெளிவந்த கட்டுரை ஒன்று இந்தியா - மதச்சார்பு நாடாக படிப்படியாக மாறி வருகிறது என்று குற்றம்சாட்டியிருக்கிறது. இந்திய அரசு ‘கடவுளை’ பொதுத்துறை நிறுவனமாக மாற்றி வருவதாக அக்கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

கட்டுரையில் இடம் பெற்ற சில முக்கிய கருத்துக்கள்:

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் கும்ப மேளாவுக்கு அரசுப் பணம் வீண்விரயமாக்கப் படுகிறது. 2001 ஆம் ஆண்டு அலகாபாத்தில் நடந்த ‘கும்பமேளா’ (கங்கையில் முழுக்குப் போடும் நிகழ்ச்சி)வுக்கு மாநில அரசு செலவிட்ட தொகை ரூ.1.2 மில்லியன். 2013 ஆம் ஆண்டு வரவிருக்கும் கும்பமேளாவுக்கு உ.பி. காவல்துறை - 2.26 பில்லியன் ரூபாயை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்குமாறு மாநில அரசுக்கு திட்டங்களை தந்துள்ளது. ஹஜ் பயணம் மேற்கொள்ளும் முஸ்லீம்கள், பாகிஸ்தானிலுள்ள குருத்வராவுக்கு பயணிக்கும் சீக்கியர்களுக்கு அரசு உதவித் தொகைகளை வழங்குகிறது. இந்துக்களுக்கும், அமர்நாத் போவதற்கும் ‘கைலாசமலை’ புனிதப் பயணத்துக்கும் பெரும் தொகையை வாரி வழங்குகிறது. உயர்கல்விக்காக ஒதுக்கப்படும் தொகையில், போலி அறிவியலான ‘சோதிடத்தை’ பயிற்றுவிப்பதற்கும் செலவிடப்படுகிறது. குஜராத் ஆட்சி, கோயில் அர்ச்சகர்களுக்கும் அரசுப் பணத்திலிருந்து ஊதியம் வழங்குகிறது.

அரசுப் பணத்தில் ‘கடவுள் பக்தியை’ வளர்க்கும் திட்டங்கள் தொடர்ந்து அமுல்படுத்துவதாக டில்லி மாநில ஆட்சி அதன் 2006 ஆம் ஆண்டு நிதிநிலை ஆய்வறிக்கையில் ஒப்புக் கொண்டது. கலாச்சாரம், பொழுது போக்கு, மதம் தொடர்பான நிகழ்வுகளுக்கு டெல்லி மாநில ஆட்சி 2003-2004 இல் 526.5 மில்லியன் ரூபாய் செலவிட்டது. 2006-2007 இல் இது ரூ.751 மில்லியனாக உயர்ந்தது. மதங்களை விமர்சிக்கும் நூல்களுக்கு தடை போடுகிறார்கள். சாலமன் ருஷ்டியின் “சாத்தானின் வேதங்கள்”, மேனன் எழுதிய ‘இராமாயணத்தின் மறுவாசிப்பு’, டி.என்.ஜா எழுதிய ‘புனிதப் பசு’, ஜேம்ஸ் லேய்ன் எழுதிய ‘சிவாஜியின் சரித்திரம்’, பவுல் கோர்ட்ரைட் தொகுத்த ‘இந்து தொன்மங்கள்’ போன்ற நூல்கள், அரசால் தடைபடுத்தப்பட்டன. அல்லது திரும்பப் பெறப்பட்டன. உணவிலும் அரசு மதத்துக்காக குறுக்கிடுகிறது. மாட்டுக்கறி உண்பதை குற்றம் என்கிறார்கள். மது அருந்துவதை தடை செய்ய வேண்டும் என்கிறார்கள். பொது மக்கள் வரிப்பணத்தில் நடக்கும் பள்ளிகளில் மாணவர்கள் மீது கட்டாய இறைவணக்கம் திணிக்கப்படுகிறது. அரசு விழாக்களில் இறைவணக்கம் பாடப்படுகிறது. அதை ஊக்கப்படுத்துகிறார்கள்.

கடவுளின் தரகர்கள் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றும் உரிமைகளை தாங்களே கையில் எடுத்துக்கொள்கிறார்கள். கடந்த வாரம், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் சில இஸ்லாமியர்களால் நடத்தப்படும் ஷரியத் நீதிமன்றம், கிறிஸ்தவ பாதியார்களை மாநிலத்தை விட்டு வெளியேற உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றமோ அரசியல் கட்சிகளோ, காவல்துறையோ, இதைத் தட்டிக் கேட்கவில்லை. பல வட இந்திய மாநிலங்களில் உள்ளூர் ஆதிக்கசாதியினரும், மதவெறியர்களும் சாதி மத மீறல்களை செய்வோருக்கு கடும் தண்டனை விதித்து வருகிறார்கள். இப்படி சட்டங்களை அவர்களே கையில் எடுத்துக் கொள்வதை அரசு தட்டிக் கேட்பதில்லை. 2010 ஆம்ஆண்டில் பில்லி சூன்ய நம்பிக்கைகளால் கொல்லப்பட்டவர்கள் 178 பேர். அரசின் ‘குற்றவியல் புள்ளி விவர மய்யம்’ இதை தெரிவிக்கிறது. இந்தியா மதச்சார்பற்ற நாடு என்ற கொள்கையிலிருந்து விலகிப் போய் மதச்சார்பு நாடாக மாறி வருகிறது என்ற கருத்துகளை இக்கட்டுரை பதிவு செய்துள்ளது. (‘இந்து’ 21.1.2012)

இது தவிர வேறு பல செய்திகளும் உண்டு. அண்மையில் சென்னை உயர்நீதிமன்றம் அரசு அலுவலகங்களில், காவல் நிலையங்களில் ஆயுத பூஜை போடலாம் என்றும், அது தமிழர்களின் பண்பாடு என்றும் தீர்ப்பளித்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும். ஆயுத பூஜைகளை தடை செய்து அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டதை சுட்டிக் காட்டி, பெரியார் திராவிடர் கழகம் தொடர்ந்த வழக்கில் அரசாணைகளை வலியுறுத்தி இதே உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ம.பி. மாநிலத்தில் நடக்கும் பா.ஜ.க. ஆட்சி, பள்ளிகளில் மாணவர்களுக்கு ஒவ்வொரு நாளும் ‘சூரிய நமஸ்காரம்’ செய்வதைக் கட்டாயப்படுத்துகிறது. தமிழ்நாட்டில் ஜெயலலிதா ஆட்சி இந்து பஞ்சாங்க அடிப்படையில் பின்பற்றப்பட்டு வரும் “தமிழ்ப் புத்தாண்டே” உண்மையான தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவித்து, தமிழ் அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்ற கருத்தை நிராகரித்து விட்டது. காங்கிரஸ் தலைவர் சோனியாவும், பிரதமரும் ‘ராமலீலா’ மைதானத்தில் நடக்கும் ‘ராமலீலா’வில் பங்கேற்கிறார்கள் திராவிடர்கள் மதித்துப் போற்றும் இராவணன், மேகநாதன், கும்பகர்ணனை எரிக்கும் விழாவில் பங்கேற்று, இந்து பார்ப்பனிய மேலாண்மைக் கருத்தியலை உயர்த்திப் பிடிக்கிறார்கள். தமிழ்நாட்டிலேயே பகுத்தறிவுப் பரப்புரைகளுக்கு தடை போடுகிறார்கள். காவல்துறை கடும் நெருக்கடிகளை செய்கிறது. பெரியார் பிறந்த தமிழ் மண்ணிலேயே இந்த நிலை வரத் தொடங்கிவிட்டது என்பதுதான் அவலம்!

## காகபுதூர் கிராமத்தில் தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் விழா

தமிழர் கலை இலக்கிய மன்றம் எனும் பெயரில் ஆண்டுதோறும் பொது மக்களை இணைத்துப் பொங்கல் விழா கொண்டாடி வருகின்றனர் காகபுதூர் கிளைக் கழகத் தோழர்கள். இந்தாண்டு மூன்று நாட்கள் நடைபெற்ற விழா ஊர் முழுவதும் களை கட்டியது.


திருவள்ளுவர், மறைமலையடிகள், கர்னல் பென்னிக்குக், புரட்சிக் கவிஞர் ஆகியோரது படத் திறப்பு நிகழ்ச்சி, கூட்டுப் பொங்கல், சமர்ப்பா குமரனின் எழுச்சி இசை நிகழ்ச்சி, மாணவர் கருத்தரங்கு, பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகள், உரி அடித்தல், வழுக்கு மரம் ஏறுதல், குடந்தை சிற்பிராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி, மாணவர்கள் கலை நிகழ்ச்சி, கருத்துப் பட்டறை, முல்லைப் பெரியாறு திரைப்படம் என மூன்று நாட்களும் விழாக் கோலம் பூண்டிருந்தது காகபுதூர் கிராமம்.

காணும் பொங்கலன்று நடைபெற்ற நிறைவு நாளன்று கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டினன் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிப் பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகளை வழங்கி கருத்துரையாற்றினார். மக்களை ஒன்றுபடுத்தி, சாதிமத பேதமற்ற மூடத்தனங்களற்ற பகுத்தறிவுச் சமுதாயத்தை உருவாக்க கழகம் ஆற்றிவரும் பணிகளை விளக்கிப் பேசினார்.

மூன்று நாள் நிகழ்ச்சியிலும் ஊர்ப் பொது மக்கள் நூற்றுக் கணக்கில் திரண்டு பங்கேற்றனர். சரியாக பத்தாண்டுகளுக்கும் முன்பு இதே ஊரில் கருப்பு சட்டை அணிவதற்கே தடை விதிக்கப்பட்டது. கழகத் தோழர்கள் சாதி ஆதிக்கவாதிகளால் கடும் அடக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். தோழர் காசு. நாகராசனின் குடும்பம் மூன்று முறை ஊர் விலக்கம் செய்யப்பட்டது. தோழர்கள் நடத்தி வந்த தாய்த் தமிழ்ப் பள்ளி தீக்கிரையாக்கப்பட்டது. ஆனால், அத்தனை இடையூறுகளையும் தாண்டி கழகத் தோழர்களின் சீரிய பணி காரணமாக இன்றைக்கு மக்கள் கழகத்தை அங்கீகரித்து பேராதரவு கொடுத்து வருகின்றனர். காகபுதூரில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் மக்களே செலவுகளை ஏற்று வருகிறார்கள். மூன்று நாட்கள் நடைபெற்ற இந்தப் பொங்கல் விழாவிற்கு ரூ25 ஆயிரம் வரை செலவாகியுள்ளது. பொது மக்கள் வழங்கிய நன்கொடை ரூ.30 ஆயிரம். 5000 ரூபாய் மிச்சமாகியுள்ளது. 100க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவியர் பெரியாரியல் கருத்துகளை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். காரணம், தோழர்களின் சலியாத உழைப்புதான்.

இந்தப் பொங்கல் விழா நிகழ்ச்சிக்கு கழகத் தோழர்களோடு தமிழர் கலை இலக்கிய மன்றம் சார்பாக தோழர்கள் சு.கந்தகுமார், மு.இராமகிருட்டிணன், சு. அப்புசாமி, க.தேவராசு, சு.கண்ணப்பன், சு.சின்னக்கண்ணன், மகேசு, மனோகரன், மு.குப்புராசு, கேபிள் மோகன், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பரமசிவம், மோ.செல்வி, செ.செல்வநாயகி, நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்கள் சு.நடராசன், ம.இராமலிங்கம் ஆகியோர் இணைந்து நிகழ்ச்சிகளை சிறப்புற நடத்தினர்.

## சேத்துப்பட்டில் செங்கொடி நினைவு கல்வெட்டு



15.1.2012 ஞாயிறு மாலை சேத்துப் பட்டில் ஆ.வ.வேலு ஒருங்கிணைப்பில் கா.சி.வாசன் தலைமையில் சேத்துப்பட்டு பகுதி கழகத் தோழர்கள் இணைந்து நடத்திய பொங்கல் விழாவில் கழக துணைத் தலைவர் ஆனூர் கோ. செகதீசன், சாகுல் அமீது (நாம் தமிழர் கட்சி), ஹாஜா கனி (தமுமுக), வழக்கறிஞர்கள் புகழேந்தி, வடிவாம்பாள், கயல் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

இவ்விழாவில் காஞ்சி மக்கள் மன்றத் தோழர் களின் கலை நிகழ்ச்சியும் தேனிசை செல்லப்பா இன எழுச்சி இசை நிகழ்வும் நடைபெற்றன. தோழர் செங்கொடி நினைவுக் கல்வெட்டினை தென் சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி திறந்து வைத்தார்.

வடசென்னை, தென் சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் பெருமளவில் பங்கேற்றனர். சேத்துப்பட்டு பகுதி கழகத்தின் சார்பாக கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு ரூ.3000 நன்கொடை வழங்கப்பட்டது.

### நன்கொடை

26.12.2011 அன்று இருகூர் பெரியார் படிப்பகம் தோழர் இ.ச. திருநாவுக்கரசு–ந.வசந்தி இணையர்க்கு பெண் குழந்தை பிறந்ததன் மகிழ்வாக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதியாக ரூ.1000 நன்கொடை வழங்கினர்.

மறைந்த கழகச் செயல்வீரர் இராயப்பேட்டை பத்ரி நாராயணன் மகள் யாழினி, மகன் அஜித் கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கியுள்ளனர். (நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். – ஆர்)

## வழக்கறிஞர் துரைசாமி அம்பலப்படுத்துகிறார்

# சிவராசன் எழுதிய நாட்குறிப்பில் அதிர்ச்சியூட்டும் தகவல்கள் (2)

***ராஜீவ் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடியவா பெரியார் திராவிடர் கழகத்தின் மூத்த வழக்கறிஞர் எஸ்.துரைசாமி. அவர் இப்போது ராஜிவ் கொலை வழக்கில் முறையாக விசாரணை நடத்தப் பெறாமல், பல உண்மைகள் மூடி மறைக்கப் பட்டதை, வெளியே கொண்டு வரும் நூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். விரைவில் அந்த நூல் வெளி வரவிருக்கிறது. இது தொடர்பாக 'டெகல்கா' வார ஏடு, வழக்கறிஞர் துரைசாமியின் பேட்டியை வெளியிட்டிருக்கிறது. அந்தப் பேட்டியின் தமிழ் வடிவம் இது.***

*கேள்வி : சிவராசன் போபால் நகரத்துக்குப் போனார் என்றும், 'TAG'க்கு ரூ.1.71 கோடி தந்ததாகவும் உங்கள் நூலில் குறிப்பிட்டுள்ளீர்கள். அது என்ன 'TAG'?*

*பதில்: எனக்கும் தெரியாது. வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஜெயக்குமார் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட சிவராசன் நாட்குறிப்பில், 1991 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் தேதியிட்ட நாளில் இவ்வாறு சிவராசனால் எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் தர வேண்டியது ரூ.45,000 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இந்த நாட் குறிப்பு, அரசு தரப்பு சாட்சி ஆவணம் எண்.எம்.ஓ.180) இது தொடர்பாக சிறப்பு புலனாய்வுக் குழு எந்த விசாரணையும் நடத்தவில்லை. அப்படி நடத்தியிருப்பார்களேயானால், ராஜீவ் கொலைச் சதியில் மறைந்திருக்கும் பல சதிகாரர்களை கண்டறிந்திருக்க முடியும். அப்படி எந்த விசாரணையும் நடக்காமல் போனது வேதனைக்குரியது. இதனால் அப்பாவிகள் தண்டிக்கப்பட்டு விட்டார்கள். அந்தப் பணம் காசோலையாக தரப்படவில்லை. ரொக்கமாக வழங்கப்பட்டிருக்கிறது. 1991 மார்ச் 8 ஆம் தேதி சிவராசன் ம.பி. மாநிலத்தில் இருந்ததாக தனது நாட்குறிப்பில் பதிவு செய்திருக்கிறார்.*

*"மத்திய பிரதேச மாநிலம்*
*குணா மாவட்டம்*
*சந்தேரி ஹில்ஸ்*
*மாளிகை உரிமையாளர்குவாலியர் ராணி*
*பீகாருக்கு மாற்றப்பட்டுள்ளது"*

*- என்ற குறிப்புகள் சிவராசன் நாட்குறிப்பில் இடம் பெற்றுள்ளன.*

*மற்றொரு செய்தியையும் குறிப்பிடவேண்டும். 1992 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் தேதி ஆதிரை என்ற பெண் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்தார். ஆதிரையும் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர். சிவராசன் பற்றி தனக்குத் தெரிந்த பல தகவல்களை தெரிவிக்க விரும்புவதாக, மனுவில் குறிப்பிட்டிருந்தார். ஆதிரை தாக்கல் செய்த மனுவில்:*

*"நான் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது சிவராசன் என்பவரை சந்தித்தேன். அவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து, பிறகு அதிலிருந்து வெளியேறி, அடிக்கடி இந்தியா போய் வந்து கொண்டிருப்பவர். எனவே, இந்தியாவிலிருந்து நான் ஜெர்மனிக்குப் போவதற்கு அவரது உதவியைக் கேட்டேன். நான் இந்தியா வந்து, சிவராசனுடன் தொடர்பு கொண்டேன். அப்போது சிவராசன் என்னிடம், 'ஒரு குறிப்பிட்ட பணியை காங்கிரஸ் தலைவர்கள் என்னிடம் ஒப்படைத்துள்ளனர். அதற்காக பெருமளவு பணம் தருவதாகவும், வெளிநாடு ஒன்றில் வேலை வாங்கித் தருவதாகவும் உறுதி கூறியிருக்கிறார்கள்' என்று என்னிடம் கூறினார். இந்த வேலையை செய்து முடிப்பதற்கு, தன்னோடு இணைந்து கொள்ளுமாறும், என்னை கேட்டுக் கொண்டார். நான் மறுத்து விட்டேன். அதற்குப் பிறகு, அவர் ரகசியங்களை உடைத்து என்னிடம் பேசினார். 'அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைமையகத்தில் நிர்வாகியாக உள்ள கல்யாணசுந்தரம், என்னிடம், இந்த வேலையை செய்து முடிக்குமாறு ஒப்படைத்துள்ளார்' என்று கூறியதோடு, (ராஜிவ் காந்தி மே 21 ஆம் தேதி ஸ்ரீபெரும்புதூர் வர இருப்பதாகவும், ஸ்ரீபெரும்புதூரிலேயே அவர் தங்கப் போவதாகவும் தெரிவித்தார். மே 22 ஆம் தேதி (ராஜிவ் கொலை நடந்த அடுத்த நாள்) சிவராசன் என்னிடம் தொடர்பு கொண்டு தாணுவின் உதவியோடு வேலையை செய்து முடித்துவிட்டதாக தெரிவித்தார். என்னிடம் டெல்லியில் கல்யாணராமனை சந்திக்கச் சொன்னார். அவர், எனக்கு ஜெர்மன் போவதற்கான கடவுட் சீட்டு, விசாவை பெற்றுத் தருவார் என்றார்" - ஆதிரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இந்த மனுவை, எவரும் கவனத்தில் கொள்ளவில்லை. ஆதிரை கூறியது உண்மைதானா என்பதைக் கண்டறியும் முயற்சிகளிலும் சி.பி.அய். இறங்கவில்லை. ராஜிவ் சுற்றுப்பயணத் திட்டம் வகுத்தத்திலிருந்து கொலை செய்யப்படும் வரை சதித் திட்டத்தின் பின்னணியாக வெளியே தெரியாத மர்ம நபர்கள் இருந்துள்ளனர்.*

*கேள்வி: பெங்களூரில் நடந்த கைது நாடகங்களை உங்கள் நூலில் விவரித்துள்ளீர்கள். அவற்றை எல்லாம் ஏன் மக்களிடம் கொண்டு சொல்லவில்லை?*

*பதில் : நான் இப்போது, அது பற்றி விரிவாகக் கூறுகிறேன். 1991 ஜூலை 29 ஆம் நாள் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவருக்கு, பெங்களூர் காவல்துறை ஒரு தகவலைத் தெரிவித்தது. சிவராசனும் அவரது அணியினர் சுபா உட்பட 7 பேர் பெங்களூர் இந்திரா நகரிலுள்ள வீட்டில பதுங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இந்தத் தகவல் தமிழக காவல்துறைக்கு ஏற்கனவே தெரியும். கோவையில் சாலை விதிகளை மீறியதற்காக விக்கி என்பவரை கைது செய்து விசாரித்தபோது அவரே, பெங்களூரில் சிவராசனும், அவரது தோழர்களும் பதுங்கி இருப்பதைக் கூறிவிட்டார். ஆனால், சிறப்புப் புலனாய்வுக் குழு நடவடிக்கைகளை மேற்கொள்ள நான்கு நாட்கள் தாமதப்படுத்தியது. ஜூலை 29 ஆம் தேதியே நடவடிக்கையில் இறங்கியிருப்பார்களேயானால் அதிரடிப்படை உதவியுடன் சிவராசனை உயிருடன் பிடித்திருக்க முடியும்.*

*மற்றொரு முக்கிய கேள்வி - சிவராசனுக்கு பெங்களூரில் பாதுகாப்பான வீட்டை பெற்றுத் தருவதற்கு முன்வந்தது யார் என்பதாகும். சிவராசன், விடுதலைப்புலிகளிடம் அந்த அமைப்பில் இருந்த காலத்தில் பயிற்சிப் பெற்றவர் என்பதால், வேதாரண்யம் போய், அங்கிருந்து கடல்வழியாக இலங்கைக்கு தப்பிச் செல்லும் வழிமுறைகள் நன்றாகவே தெரிந்திருக்கும். வழக்கத்துக்கு மாறாக அவர், பெங்களூர் சென்றது ஏன்? யாரோ, சிலர், பெங்களூர் பாதுகாப்பாக இருக்கும் என்று சிவராசனுக்கு உறுதி தந்திருக்கிறார்கள். அந்த வீட்டில், சிவராசன் பிணமாகக் கிடந்த இடத்தின் அருகே 9 எம்.எம். கைத் துப்பாக்கி மற்றும் ஏ.கே. 47 துப்பாக்கி கிடந்தது. அந்த ஆயுதங்களை சிவராசனுக்கு வழங்கியது யார்? இது பற்றி சிறப்புப் புலனாய்வுக் குழு எந்த விசாரணையும் நடத்தவில்லை. இறந்து போனவர் நீதிமன்றத்தில் வந்து பேச முடியாது அல்லவா?*

*கேள்வி : அப்படியானால், சிறப்புப் புலனாய்வுக் குழுவும், காங்கிரசும், கொலைக்குப் பின்னால் நடந்த சதியை மறைப்பதாகக் கூறுகிறீர்களா?*

*பதில்: ஆம், அப்படித்தான் நான் நம்புகிறேன். ராஜிவ் குண்டுவெடிப்பில் இறந்ததிலிருந்தே சாட்சிகளை முடக்குவதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தன. இது ஏதோ தற்செயலாக நடந்தவை அல்ல; திட்டமிட்டே நடந்துள்ளது. சம்பவம் நடந்த இடத்தில் காவல்துறை அரிபாபுவின் கேமிராவைக் கைப்பற்றியது. உடனே கேமிராவின் புகைப்படச் சுருளைக் கழுவிப் பார்த்தால், 5 மணி நேரத்துக்குள்ளேயே கொலையாளிகளைக் கண்டறிந்திருக்க முடியும். அப்படி எதுவும் செய்யவில்லை. ஆனால், நான்கு நாட்கள் கழித்து இந்த புகைப்படம், மே 25 ஆம் தேதி 'இந்து' நாளேட்டில் வெளி வருகிறது. எப்படி கிடைத்தது என்பது மர்மம். அதிலும் அந்தப் புகைப்படத்தில் சிவராசன் உருவம் மறைக்கப்பட்டது. மே 29 வரை சிவராசன் படத்தை 'இந்து' வெளியிடவில்லை. இந்த வழக்கில் மிகவும் முதன்மையான சாட்சி, ஆவணம், இந்தப் புகைப்படம் தான். இந்தப் படம், 'இந்து' ஏட்டுக்கு எப்படி கிடைத்தது என்பதை, எவருமே ஆராயவில்லை. அதற்குப் பிறகு என்ன நடந்தது? ஸ்ரீபெரும்புதூர் நிகழ்ச்சியை மூன்று பேர் தனித் தனியாக வீடியோவில் பதிவு செய்தார்கள். அந்த மூன்று வீடியோ பதிவுகளும் சிதைக்கப்பட்டு, காட்சிகள் நீக்கப்பட்டன. இதற்கு சிறப்புப் புலனாய்வுக் குழு தந்த விளக்கம் என்னவென்றால், ஏதோ தவறுதலாக காட்சிகள் அழிந்து விட்டன என்பதாகும். புலனாய்வுக் குழுவின் வலிமையே இல்லாத, இந்த விளக்கத்தை என்னால் ஏற்கவியலாது.*

*கேள்வி : சரி, 20 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போது ஏன், இதை நூலாக எழுத முன் வந்துள்ளீர்கள்?*

*பதில்: எனக்கு இப்போது வயது 69. நான் 1970 ஆம் ஆண்டிலிருந்து வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். ராஜிவ் வழக்கை முன் வைத்து ஒரு நூலை எழுத வேண்டும் என்பது எனது நோக்கம் அல்ல. இந்த வழக்கில் பல தி.மு.க.வினர் கைது செய்யப்பட்டு சட்டவிரோதமாக சிறையில் அடைக்கப்பட்டபோது, அவர்களுக்காக நான் வதாட முன் வந்தேன். சென்னை உயர்நீதிமன்றத்தில் சட்டவிரோத காவலில் இருப்பவர்களுக்காக 'ஆட்கொணரும்' (ஹேபியஸ் கார்பஸ்) மனுக்களை தாக்கல் செய்தேன். அந்த கட்டத்தில்தான், இந்த வழக்கில் என்னை இணைத்துக் கொள்ளும் சூழ்நிலை உருவானது. நான் தாக்கல் செய்த மனுவின் காரணமாக சட்டவிரோத காவலில் இருந்த தி.மு.க.வினர் விடுதலை செய்யப்பட்டனர். பின்னர், நளினி தனக்காக வாதாடுமாறு கேட்டுக் கொண்டார். நான் வழக்கை எடுத்துக் கெண்டபோதே இது வெற்றிப் பெற முடியாத வழக்கு என்று எனக்குத் தெரியும். காரணம், நீதிமன்றமே குற்றம்சாட்டப்பட்டவர்களை தண்டிக்க வேண்டும் என்ற மனநிலையில் இருந்தது. சட்டங்களுக்கு எல்லாம் மேலான சர்வ அதிகாரம் கொண்ட அமைப்பாகக் கருதியே புலனாய்வுத் துறையும் செயல்பட்டது. ஊடகங்களும் மக்கள் மனநிலையும்கூட உண்மைகளை பார்க்காமல், குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராகவே இருந்தது. நளினி வழக்கில், நான் நேர் நின்றபோது, நாளொன்றுக் ரூ.50 மட்டுமே எனக்கு தருவதற்கு அரசு முன் வந்தது. நான் வழங்கும் சட்ட உதவிக்கு ஓரளவு நேர்மையான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றத்தில் முறையீடு செய்தேன். 8 ஆண்டுகாலம் இந்த வழக்கிற்காக நான் போராடினேன். அனைத்து ஆவணங்களையும், சாட்சியங்களையும் முழுமையாகப் படித்தேன். 266 அரசு தரப்பு சாட்சியங்களையும் படித்தேன். இவை எளிமையான வேலைகள் அல்ல. இந்த காலத்தில் வேறு வழக்குகளில் நான் கவனம் செலுத்தியிருந்தால் ஒரு பிரபல வழக்கறிஞராக இருந்த நான், பெரும் தொகையை ஈட்டிருக்க முடியும். அதைப் பற்றி எல்லாம் கவலைப்படாது, எதிர்நீச்சல் போடவே முடிவு செய்தேன். இந்த வழக்கிற்காக எனது நேரத்தையும், உழைப்பையும் கடமையாக அர்ப்பணித்த நான், இந்த வழக்கு விசாரணையில் நடந்த முறைகேடுகளை உலகத்தின் பார்வைக்கு கொண்டு வர வேண்டும் என்று விரும்பியே இந்த நூலை எழுத முன் வந்தேன். 19 அப்பாவிகள் 8 ஆண்டுகாலம் பரோல் கூட மறுக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு, உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்கள். அதே நேரத்தில், ராஜிவ் கொல்லப்பட்டதில் எனக்கு இன்றளவும் உடன்பாடில்லை. அதை நான் ஏற்றுக் கொள்ளவும் இல்லை.*

**('தெகல்கா' 21.1.2012)**

## அடையாறு அரங்கநாதன், ஆவடி மனோகரன் படத் திறப்பு

*குத்தூசி குருசாமி – குருவிக்கரம்பை வேலு சுயமரியாதைப் பேரவை சார்பில் பெரியார் 38 ஆம் ஆண்டு நினைவு நாள் கூட்டம் சென்னை திருவான்மியூரில் நடைபெற்றது. 8.1.2012 ஞாயிறு காலை 10.30 மணி அளவில் மதுரை மருத்துவர் அ.சவுந்தரபாணடியன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் புலவர் இல.மா.தமிழ்நாவன் வரவேற்புரையாற்றினார்.*

*தந்தைபெரியாரின் படத்தை குடந்தை வழக்கறிஞர் பாலகுரு, ஆவடி மனோகரன் படத்தை இனமானக் கவிஞர் செ.வை.ர.சிகாமணியும், அடையாறு கோ. அரங்கநாதன் படத்தை புதுகை க. இராசேந்திரனும் திறந்து வைதது உரை நிகழ்த்தினர். பேராசிரியர் சரசுவதி இராசேந்திரன், 'பெரியாரும்–பெண்ணுரிமையும்' என்னும் தலைப்பில் அரிய ஆய்வுரை நிகழ்த்தினார். ஆவடி மனோகரன், குடும்பத்திற்கு மருத்துவர் அ. சவுந்தர பாண்டியன் வழங்கிய ரூ.5000, நிதியை அன்னாரது துணைவியாரும், மகனும் பெற்றுக்கொண்டனர். 1960களில் கூட்டுறவு முறையில் வெளிவந்த திராவிடர் கழக ஆதரவு ஏடான 'சுயமரியாதை' இதழின் ஆசிரியர் மா.அருள்முகம் (வயது 82) நன்றி கூறினார்.*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# சேலம் மேற்கு மாவட்டத்தில் கழகம் எழுச்சி

***தமிழர்களின் வாழ்வுரிமைக்கு எதிராக தொடர்ந்து செயல்படும் மத்திய அரசைக் கண்டித்து சேலம் மேற்கு மாவட்டம் முழுவதும் தொடர் போராட்டங்கள் கழக சார்பில் நடந்தன.***

**மேட்டூர் :** *ஈழத் தமிழர் பிரச்சினை, முல்லைப் பெரியாறு, கூடங்குளம் அணுமின் நிலையம் ஆகிய பிரச்சினைகளில் தமிழர்களின் வாழ்வுரிமைகளை பாதிக்கும் வகையில் நடந்து கொள்ளும் மத்திய அரசு, மற்றும் கேரள அரசைக் கண்டித்து மேட்டூரில் 11.12.2011 சனி மாலை 4 மணிக்கு மேட்டூர் பெரியார் பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் முல்லை வேந்தன், மாவட்ட செயலாளர் சூரியகுமார் முன்னிலை வகித்தனர். மாவட்ட அமைப்பாளர்கள் நங்கவள்ளி அன்பு, டைகர் பாலன் உரைக்குப் பின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டன உரையாற்றினார்.*

*ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசையும், கேரள அரசையும் கண்டித்து கண்டன ஒலி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தை விளக்கி துண்டறிக்கைகள் அச்சிடப்பட்டு, பொது மக்களிடம் விநியோகம் செய்யப்பட்டது. மாவட்ட பிரச்சாரக் குழு பொறுப்பாளர் கோவிந்தராசு நன்றி கூறினார்.*

*ஆர்ப்பாட்டத்தில் மேட்டூர், மேட்டூர் ஆர்.எஸ்., கொளத்தூர், நங்கவள்ளி, மல்லியகுந்தம் பகுதிகளைச் சேர்ந்த பொறுப்பாளர்களும் தோழர்களும் ஏராளமாக கலந்து கொண்டனர்.*

**நங்கவள்ளி:** *தமிழர்களின் வாழ்வுரிமைக்கு எதிராக தொடர்ந்து செயல்படும் மத்திய அரசைக் கண்டித்து நங்கவள்ளி கழகம் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் 25.12.2011 ஞாயிறு மாலை 5 மணிக்கு நங்கவள்ளி பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் கிருட்டிணன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் சூரியகுமார், அமைப்பாளர் டைகர்பாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க.வைச் சார்ந்த மொழிப்போர் தியாகி திருக்குமரன், நாம் தமிழர் கட்சியைச் சார்ந்த மணிகண்டன் ஆகியோர் உரைக்குப்பின் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, மாவட்டத் தலைவர்முல்லைவேந்தன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். நங்கவள்ளி கிளைக் கழகப் பொறுப்பாளர் இராசேந்திரன் நன்றி கூறினார். பல்வேறு பகுதிகளைச் சார்ந்த ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தை விளக்கிதுண்டறிக்கைகள் மக்களிடம் விநியோகம் செய்யப்பட்டது.*

**மேச்சேரி:** *28.12.2011 மாலை 5 மணிக்குமேச்சேரி பேருந்து நிலையம் அருகில் கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூடக் கோரியும், முல்லைப் பெரியாறு நீர் உரிமையை நிலைநாட்ட வலியுறுத்தி மத்திய அரசையும், கேரள அரசையும் கண்டித்தும் மேச்சேரி ஒன்றிய பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு காவை ஈசுவரன் தலைமை தாங்கினார். மாவட்ட பிரச்சாரக் குழு பொறுப்பாளர் கோவிந்தராசு, உலகத் தமிழர் பேரமைப்பின் சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தம்பி பழனிச்சாமி, மேட்டூர் வட்டார கேபிள் டி.வி. ஆபரேட்டர்கள் சங்கத் தலைவர் வெங்கடாசலம் ஆகியோர் முன்னிலை வகித்து உரையாற்றினர். மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, மாவட்ட தலைவர் முல்லை வேந்தன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். மேச்சேரி பகுதி பொறுப்பாளர் கோ.தமிழ் இளஞ்செழியன் நன்றி கூறினார். நங்கவள்ளி, மல்லியகுந்தம், மேட்டூர் பகுதிகளை சார்ந்த பொறுப்பாளர்களும், தோழர்களும், பெரியார் தொழிலாளர் கழகத்தைச் சார்ந்த பொறுப்பாளர்களும், தொழிலாளர்களும் கலந்து கொண்டனர். துண்டறிக்கைகள் விநியோகிக்கப்பட்டன.*

**குஞ்சாண்டியூர்:** *31.12.2012 சனி மாலை 5 மணிக்கு மேட்டூர் குஞ்சாண்டியூர் பேருந்து நிறுத்தம் அருகில் தமிழர்கள் வாழ்வுரிமைகளை பாதிக்கும் மத்திய அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கழக மாவட்டஇளைஞரணி அமைப்பாளர் சு.குமரப்பா தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை, மாவட்ட பொருளாளர் ஆசைத்தம்பி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்து உரையாற்றினர். மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, மாவட்ட தலைவர் முல்லைவேந்தன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.*

*ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசையும், கேரள அரசையும் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தை விளக்கி துண்டறிக்கைகள் பொது மக்களிடம் விநியோகம் செய்யப்பட்டன. பல்வேறு பகுதிகளைச் சார்ந்த ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை அருள்செல்வம், குஞ்சாண்டியூர் மனோகரன் ஆகியோர் சிறப்பாக செய்தனர். காந்தி நகர் அருள்செல்வம் நன்றி கூறினார்.*

**தாரமங்கலம்:** *5.1.2012 மாலை 4 மணிக்கு தாரமங்கலம் அண்ணா சிலை அருகில் மத்திய அரசையும், கேரள அரசையும் கண்டித்து தாரமங்கலம் ஒன்றிய கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பட்டத்திற்கு தாரமங்கலம் ஒன்றிய பொறுப்பாளர் சரவணன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர்சூரியகுமார், மாவட்ட இளைஞரணி தலைவர் விஜயகுமார், மாவட்ட அமைப்பாளர் அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோகுலக் கண்ணன் உரைக்குப் பின் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, மாவட்ட தலைவர் முல்லைவேந்தன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். கண்டன ஆர்ப்பாட்ட ஏற்பாடுகளை கே.ஆர். தோப்பூர் கண்ணன், பவளத்தானூர் மாரியப்பன், தனசேகர் சரவணன், குடந்தை பாலன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.*

*ஆர்ப்பாட்டததில் கொளத்தூர், எளம்பிள்ளை, நங்கவள்ளி, மேட்டூர், மேட்டூர் ஆர்.எஸ்.சிந்தாமணியூர் பகுதிகளைச் சார்ந்த பொறுப்பாளர்களும் தோழர்களும் கலந்து கொண்டனர். மேட்டூர் அனல்மின் நிலையம், நங்கவள்ளி ஸ்பின்னிங் மில் பெரியார் தொழிலாளர் கழக பொறுப்பாளர்களும் தோழர்களும் கலந்து கொண்டனர். கே.ஆர். தோப்பூர் கண்ணன் நன்றி கூறினார்.*

*ஒரே மாதத்தில் சேலம் மேற்கு மாவட்டத்தில் அய்ந்து ஊர்களில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.*

**செய்தி தொகுப்பு: முல்லைவேந்தன்**

முதல் பக்கத் தொடர்ச்சி

*ஏற்றுக்கொண்டுள்ளதாகக் கூறும் சில நாடுகள், சிறீலங்காவுக்கு ஆதரவு தெரிவிப்பது - தங்களது நாடுகளுக்கான 'ராஜதந்திர' அணுகுமுறைகளைச் சார்ந்திருக்கிறதே தவிர, அவர்கள் ஏற்றுக் கொண்ட கொள்கையைச் சார்ந்ததல்ல என்றார் பேராசிரியர் சிசன்.*

*சில குறிப்பிட்ட பிரச்னைகளில் சிறீலங்கா ஆட்சி ஏகாதிபத்திய காலனிய எதிர்ப்பு ஆட்சியாக இடதுசாரி கொள்கைகளை ஏற்றுக்கொண்ட நாடுகளுக்கு தோன்றலாம். அந்தப் பிரச்சினைகளில் மட்டும் சிறீலங்காவை அவர்கள் பாராட்டட்டும். அதற்காக தேசிய விடுதலைப் போராட்டங்களை ஒடுக்குவதற்கு துணைப் போகக் கூடாது. இப்போது நாடுகள் - அவை எந்தக் கொள்கையை ஏற்றுக் கொண்டவையாக இருந்தாலும் தங்கள் நாட்டுக்கான 'ராஜதந்திர'த்துக்குள் மூழ்கிக் கொள்ளவே விரும்பும் நிலை வந்துவிட்டது. எனவே புரட்சிகர அமைப்புகளுக்கு தொடர்ச்சியான ஆதரவை எதிர்பார்க்கவே முடியாது" என்றார்.*

*தமிழர் பகுதியில் நடக்கும் ராணுவ ஆக்கிரமிப்புப் பற்றி கூறுகையில், "சிறீலங்கா - தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை யுத்தத்தையே நடத்தியது. இதற்காக அவர்கள் மேற்கொண்ட அணுகுமுறை காட்டுமிராண்டித்தனமானது; வார்த்தைகளால் கூற முடியாத கொடூரம் நிறைந்தது". விடுதலைப் புலிகள் நடத்திய விடுதலைப் போரிலிருந்து மக்களைத் தனிமைப்படுத்த சிறீலங்கா மேற்கொண்ட நட வடிக்கைகள் மிகக் கொடூரமான வன்முறையாகும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளுக்காக அவர்களை அழிப்பதற்காக மக்களை பிரித்தெடுத்து, ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் குவித்து வைத்து, அவர்களை அச்சத்தின் பிடிக்குள் உறைய வைத்தார்கள். குளத்திலுள்ள மீன்களை சாகடிப்பதற்கு அநத மீன்கள் மூழ்கி மூச்சுவிட்டு நிற்கும் தண்ணீரையே வற்ற வைப்பதுபோல் மக்கள் ராணுவமான விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு குளத்திலிருநத தண்ணீரையே வெளியேற்றியது போல் மக்களைப் பிரித்தெடுத்தார்கள். மேற்கத்திய நாடுகளின் நவீன ராணுவ உதவிகள், சிறீலங்காவின் இனப் படுகொலை நடவடிக்கையை ஊக்கப்படுத்தின. ரசாயன குண்டுகளை பயன்படுத்தியது ராணுவம். ஈழத் தமிழின அடையாளத்தை முற்றாக ஒழிப்பதற்கான இனப்படுகொலை யுத்தம் இது" என்றார் பேராசிரியர் சிசன்.*

*இனப்படுகொலை யுத்தத்தை மனித உரிமை மீறல் என்ற சிமிழுக்குள் அடக்க முயற்சிப்பதை சிசன் கடுமையாக எதிர்த்தார்.*

*சிறீலங்கா அரசின் கொடூரமான பாசிச முகத்தை மறைக்கவே "மனித உரிமை மீறல்கள் - தவறை சரி செய்வதற்கான திட்டங்கள்" என்ற சொல்லாடல்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கான ஒரே தீர்வு சுதந்திர நாடு என்ற இறையாண்மைதான். அதுவே அவர்களுக்கான சரியான மனித உரிமையும் ஆகும்.*


*"தவறுகளை சரி செய்தல்" என்ற சொல்லாடல்கள், போர்க்குற்றங்களிலிருந்து சிறீலங்காவைக் காப்பாற்றும் முயற்சிகளே. போர்க் குற்றங்களுக்கான தண்டனைகளிலிருந்து தப்பிக்கவும், அதே நேரத்தில் ஈழத் தமிழர்கள் மீதான தங்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்திடவும், சிறீலங்கா மேற்கொள்ளும் தந்திர நடவடிக்கைகளே இவை என்றார் பேராசிரியர். மாவீரர் நாளில் ஈழத் தமிழ் இளைஞர்களால் முன்வைக்கப்பட்ட 'பாதிப்புகளுக்கு நீதி கேட்கும் இறையாண்மை'* (Remedial Soverigininy) *என்ற பிரகடனத்தை வரவேற்பதாகக் கூறிய அவர், "தங்களுக்கான தாயகத்தை உருவாக்கிக் கொள்ளும் ஈழத் தமிழர்களின் விருப்பத்தை ஒதுக்கிவிட முடியாது. மே 2009 இல் நடந்தது. ஒரு தற்காலிக பின்னடைவு தான். ஈழத் தமிழர்கள் தங்களுக்கான விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து முன் நகர்த்திச் செல்வார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்" என்றார் பேராசிரியர் சிசன். "ஒரு விடுதலைப் போராளி என்பவன் கவிஞனைப் போன்றவன்" என்று 1968 ஆம் ஆண்டு அவர் எழுதிய கவிதையை ஈழத் தமிழர்களுக்காக பேட்டியின் போது உருக்கத்துடன் படித்துக் காட்டினார்.*

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 2nd February 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2043 பிப். 09, 2012 புரட்சி 11 முழக்கம் 04 விலை: ரூ.2.50


## தமிழ்நாடு முழுவதுமிருந்தும் திரளுகிறார்கள்

# பிப்.26 – சென்னையில் அணுஉலை எதிர்ப்பு மாநாடு

கூடங்குளம் மக்களின் போராட்டத்தைத் திட்டமிட்டு அழிக்கத் துடிக்கும் மத்திய காங்கிரசு அரசைக் கண்டித்தும், கூடங்குளம் அணுஉலையை நிரந்தரமாக மூடக்கோரி தமிழக அரசை வலியுறுத்தியும் பிப்ரவரி 26 ஆம் நாள் ஞாயிறன்று சென்னையில் மக்கள் திரள் மாநாடு ஒன்றைக் கூடங்குளம் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தரும் அனைத்து சக்திகளின் ஒருமித்த ஆதரவோடு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து பல்வேறு அமைப்புகளின் சார்பாக கிட்டத்தட்ட 100 பேர் பங்கேற்ற கலந்தாய்வுக் கூட்டம் ஜனவரி 21 ஆம் நாள் சனிக்கிழமை திருச்சி அய்கஃப் அரங்கில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஜனவரி 27 ஆம் நாள் அய்கஃப் அரங்கில் மீண்டும் கூடிய தெரிவு செய்யப்பட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கீழ்க்காணும் முடிவுகள் ஒரு மனதாக எடுக்கப் பட்டன.

**கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாநாட்டு முதன்மை ஒருங்கிணைப்பாளராக செயல் படுவார்.**

மாநாட்டுக் குழுவில் இடம் பெறுவோர்: கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன், கண குறிஞ்சி (மக்கள் சிவில் உரிமைக் கழகம்), சோழ நாடன் (தமிழ்நாடு மக்கள் பேராயம்), குணா (பொதுமையர் பரப்புரை மன்றம்), அருண்சோரி (தமிழக இளைஞர் எழுச்சிப் பாசறை), பொன் சந்திரன் (அணுஉலைக்கு எதிரான மக்கள் இயக்கம்), ஜெயபிரகாஷ் நாராயணன் (தமிழர் குடியரசு முன்னணி), தபசி குமரன் (பெரியார் திராவிடர் கழகம்), சதீஷ் (தமிழக இளைஞர் எழுச்சிப் பாசறை), தங்கத் தமிழ்வேலன் (இ.க.மா.லெ. மக்கள் விடுதலை), அண்ணாமலை (பெரியார் திராவிடர் கழகம்).

நிதிக் குழு: கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன், கோ. திருநாவுக்கரசு (தாளாண்மை உழவர் இயக்கம்), எஸ்.ஆர். இராமலிங்கம் (அயோத்திதாசப் பண்டிதர் ஆய்வு நடுவம்), அரங்க. குணசேகரன் (தமிழக மக்கள் புரட்சிக் கழகம்), பொன். சந்திரன் (அணுஉலைக்கு எதிரான மக்கள் இயக்கம்), மோகன்ராஜ் (தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்), குணா (பொதுமையர் பரப்புரை மன்றம்), திருமுருகன் (மே 17 இயக்கம்), பூங்குழலி (தென்செய்தி), கண்ணன் (மாநாட்டு நிதிக் காப்பாளர் - தமிழ்நாடு மக்கள் பேராயம்) ஆகி யோரைக் கொண்ட நிதிக்குழு அமைக்கப்பட் டுள்ளது.

அரங்கக் கருத்தரங்கிற்கு தலைமை மனோ தங்கராஜ் (அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம்).

காலை 9 மணிக்கு சமர்ப்பா குமரன் எழுச்சிப் பாடல்கள். காலை 10 மணிக்கு கருத்தரங்கு.

நாம் தமிழர் கட்சி, தமிழர் வாழ்வுரிமை இயக்கம், ஆதித் தமிழர் பேரவை, சோசலிஸ்ட் யூனிட்டி சென்டர் - இந்தியா, மக்கள் சிவில் உரிமை கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும்,

தமிழேந்தி (மார்க்சிய-பெரியாரியப் பொது வுடைமைக் கட்சி), பானுமதி (மக்கள் உரிமைப் பேரவை-தமிழ்நாடு), மருத்துவர் புகழேந்தி (சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான மருத்துவர் குழு), மருத்துவர் ரமேஷ் (சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான மருத்துவர் குழு), கே.எம். செரீப் (தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சி), செல்வமணியன் (தமிழ்நாடு பொது வுடைமைக் கட்சி), பி.டி.சண்முகம் (இ.பொ.க.மா.லெ.), கண்ணன் (தமிழ்நாடு மக்கள் பேராயம்), எழிலன் (தமிழர் எழுச்சி இயக்கம்) ஆகியோர் கருத்தரங்கில் பேசுகிறார்கள்.

தமிழக குடியரசு முன்னணி ஜெயப்பிரகாசு நாராயணன் நன்றியுரையாற்றுகிறார்.

திருமதி சுந்தரி (அணுஉலைக்கு எதிரான மக்கள் இயக்கம்) தலைமையில் பிற்பகல் 3 மணியளவில் பேரணி தொடங்குகிறது. கோ. திருநாவுக்கரசு (தாளாண்மை உழவர் இயக்கம்) பேரணியை தொடங்கி வைக்கிறார். காஞ்சி மக்கள் மன்றத்தின் இசை முழக்கம் பேரணியில் இடம் பெறுகிறது.

மாலை 6 மணிக்கு நடைபெறும் பொதுக் கூட்டத்திற்கு கழத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்குகிறார். முரசு கலைக் குழுவின் கலை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அருண்சோரி (தமிழக இளைஞர் எழுச்சிப் பாசறை) வரவேற்புரையாற்றுகிறார்.

கருத்துரையாற்றுவோர்: வைகோ (மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்), பழ. நெடுமாறன் (உலகத் தமிழர் பேரமைப்பு), மருத்துவர் இராமதாசு (பாட்டாளி மக்கள் கட்சி), திருமாவளவன் (விடுதலைச் சிறுத்தைகள் கட்சி), ஜவாஹிருல்லா (மனிதநேய மக்கள் கட்சி), தியாகு (தமிழர் தேசிய இயக்கம்), சுப. உதயகுமார் (அணுஉலைக்கு எதிரான மக்கள் இயக்கம்), கே.கே.எஸ்.எம். தெகலான் பாகவி (இந்திய சோசலிஸ்ட் சனநாயகக் கட்சி-தமிழ்நாடு), கி. வெங்கட்ராமன் (தமிழ்த் தேசப் பொது வுடைமைக் கட்சி), அரங்க குணசேகரன் (தமிழக மக்கள் புரட்சிக் கழகம்), மீ.த. பாண்டியன் (இ.பொ.க.மா.லெ. மக்கள் விடுதலை), சந்திரபோசு (தியாகி இமானுவேல் பேரவை), நிலவன் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்), செல்வி (மக்கள் சனநாயகக் குடியரசுக் கட்சி).

செந்தில் (சேவ் தமிழ்ஸ்) நன்றி கூறுகிறார்.

## கூடங்குளம் போராளிகள் மீதான தாக்குதலை கண்டித்து ஆர்ப்பாட்டம்

கூடங்குளம் அணுஉலை பேச்சு வார்த்தைக்கு சென்ற சுப. உதயக்குமார் உள்ளிட்ட தோழர்கள் மீது தாக்குதல் நடத்திய காங்கிரஸ், இந்துத்துவ மதவெறி சக்திகளைக் கண்டித்து 3.2.2012 வெள்ளி காலை 11 மணி யளவில் சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பத்மநாபன் (உலகத் தமிழர் பேரமைப்பு), அன்பு தென்னரசு (நாம் தமிழர்), மேகலா (மக்கள் மன்றம்), திருமுருகன் (மே 17), ரஜினி காந்த் (சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி), மகேஷ் (மக்கள் மன்றம்), தீரன் (தமிழர் வாழ்வுரிமை கட்சி), சுப. இளவரசன் (தமிழர் நீதிக் கட்சி), தி. வேல்முருகன் (தமிழக வாழ்வுரிமைக் கட்சி), சீமான் (நாம் தமிழர் கட்சி), கொளத்தூர் மணி (பெரியார் திராவிடர் கழகம்) ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**பகுத்தறிவுப் போராளி – 2 ஆம் பக்கம்**


“புரட்சிப் பெரியார் முழக்கம்”

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535


## தலைநகரம் நோக்கி தமிழினம் குவியட்டும்

பிப். 26 இல் சென்னையில் அணுஉலை எதிர்ப்பு மாநாடு.

மக்களுக்கு எதிராக அணுஉலைத் திட்டத்தை திணிக்க துடிக்கிறது மத்திய காங்கிரஸ் ஆட்சியும் பார்ப்பன இந்துத்துவ சக்திகளும்.

போராட்டக் குழுவினர் தாக்கப்படுகின்றனர்.

துக்ளக், தினமலர், ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க., பார்ப்பன சக்திகள், அணு உலைக்கு ஆதரவாக களம் இறக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் –

மக்கள் குரலை ஒலிக்க

அதிகார மிரட்டலுக்கு அடிபணியோம் என்பதை அறிவித்திட –

தலைநகரில் திரளுவோம்!

அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம் நடத்தும் மாநாட்டுக்கு –

**தமிழர்களே, திரண்டு வாரீர்!**

# கூடங்குளம் எதிர்ப்புக்கு தலைமை தாங்கும் பகுத்தறிவுப் போராளி

*கூடங்குளம் அணுஉலை எதிர்ப்புப் போராட்டத்துக்கு தலைமையேற்று கடும் அடக்குமுறைகளுக்கு அஞ்சாது உறுதியாகப் போராடி வரும் சுப.உதயகுமார், தமிழக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளார். போராட்டத்தின் வழியாக தனது தலைமைத்துவத்தை வெளிக்கொண்டு வந்துள்ள இந்தப் போராளி, தன்னை ஒரு பகுத்தறிவாளராக நாத்திகராக ஒரு நிகழ்ச்சியில் அறிவித்தார். வன்முறை பக்கம் திரும்பிவிடாமல் அமைதி வழியில் போராட்டத்தின் தொடர்ச்சியில் கவனத்தைக் குவித்து வரும் இவருக்கு எதிராக அதிகார சக்திகளும் பார்ப்பன ஏடுகளும் ஆளும் காங்கிரசும் அவதூறு எனும் 'அஸ்திரத்தைக்' கைகளில் எடுத்துள்ளனர். நிலை குலையாத இந்தப் போராளியின் வாழ்க்கைக் குறிப்புகளை அவரது வாய்மொழியிலேயே பதிவு செய்கிறது, இக்கட்டுரை.*


தனிப்பட்ட வாழ்க்கையில் தனக்கு விவேகானந்தர் தான் ரோல் மாடல் என்கிற சுப. உதயகுமாரன் விவேகானந்தா கேந்திரத்தில் யோகா ஆசிரியர் பயிற்சியும் பெற்றவர். தனி நபர் மிரட்டல்கள, அரசின் மிரட்டல்கள் என்று இன்று எல்லாவற்றையும் கடந்து அணுசக்தியை எதிர்த்து அவர் நடத்திவரும் போராட்டம், இந்திய அளவில் பெரும் கவனத்தைப் பெற்றிருக்கிறது. "எனது சொந்த ஊர் நாகர்கோவிலில் உள்ள கோட்டாறு. பிறந்தது வளர்ந்தது படித்தது எல்லாம் அங்கேதான்.

எனது அப்பா பரமார்த்தலிங்கம். அம்மா பொன்மணி. எனது தாத்தா பெயர் சுப்ரமணியன். அவரது பெயரையும் எனது பெயருக்கு முன்னால் சேர்த்துக் கொண்டேன். அப்பா முழுநேர அரசியல் வாதி. பெரியாரையும் அண்ணாவையும் தீவிரமாகப் பின்பற்றி வருபவர். நாகர்கோவிலில் தி.மு.க. நகரச் செயலாளராகவும் இருந்துள்ளார்,. ஆரம்பத்தில் அப்பா சென்னை ஐ.சி.எப்.பில் வேலை பார்த்தார். உடல்நிலை சரியில்லாமல் போனதால் அங்கிருந்து நாகர்கோவில் வந்துவிட்டார். அம்மா சமூக நல அலுவலராக இருந்து ஓய்வு பெற்றவர். காந்திய கொள்கையில் தீவிர பிடிப்பு உள்ளவர். திருமங்கலம் அருகே உள்ள டி.கல்லுபட்டி காந்திய ஆசிரமத்தில் படித்தார். ஒரு பக்கம் காந்தியின் அகிம்சை; மற்றொரு புறம் பகுத்தறிவு கொள்கைன்னு இரண்டையும் பார்த்து நான் வளர்ந்தேன். எனக்கு இரண்டு சகோதரிகள்.

நாகர்கோவில் டி.வி.டி. மேல்நிலைப் பள்ளியில் தமிழ்வழியில் கல்வி பயின்றேன். பிறகு குமாரசுவாமி கல்லூரியில் பி.எஸ்.சி. கணிதம் மூன்றாண்டுகள். அப்பாவிற்கு நான் இன்ஜினியராக வேண்டும்ன்னு ஆசை. முதல் மதிப்பெண் எடுத்தும் எனக்கு அதில் பிடிப்பில்லை. இதனால் கேரளா பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. ஆங்கில இலக்கியம் சேர்ந்தேன்" என்று தன்னைப் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்கிறார்.

"அப்பாவின் பகுத்தறிவு கொள்கையும் அம்மாவின் காந்திய சிந்தனையும் எனக்கு நிறைய விஷயங்களை சிறு வயதிலிருந்தே கற்றுக் கொடுத்தன. மேலும் எனக்கு மார்க்சிஸ்ட் கருத்தியல் மீது அதிக தாக்கம் இருந்தது. அவர்கள் ஏழைகள், ஒடுக்கப் பட்டவர்களுக்காக போராடுவது ரொம்பப் பிடித் திருந்தது. மூலதனம் முழுவதும் படித்திருக்கிறேன். கல்லூரி வாழ்க்கையின்போது 1980களில் எறும்புகள் என்ற அமைப்பை நண்பர்கள் அனைவரும் இணைந்து ஆரம்பித்தோம். ஏனெனில் அப்போது நாகர்கோவிலில் எழுத்தாளர் சுந்தர ராமசாமி காகங்கள் என்ற இலக்கிய அமைப்பை நடத்தி வந்தார். அந்தக் கூட்டத்திற்கு நண்பர்களுடன் செல்வேன். ஆனால் அவர்கள் பேசியதை எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களின் இலக்கியம் உயர்வாக கூர்மையான பார்வையுடன் இருக்கும். இதனால் நாங்களே எறும்புகள் அமைப்பை தொடங்கி இலக்கியங்கள், சமூகப் பிரச்சனைகள் உட்பட விஷயங்களைப் பற்றி விவாதித்து வந்தோம்.

ஒருமுறை நாங்கள் நடத்திய கூட்டத்தில் ஈழப் பிரச்னை பற்றி விவாதிக்க சிறப்பு அழைப்பாளராக இலங்கையில் உள்ள சுதந்திரன் பத்திரிகையின் ஆசிரியரை அழைத்திருந்தோம். அவர் பேசிவிட்டு அங்கே சென்றதும் அது குறித்து கட்டுரையாக சுதந்திரனில் எழுதியுள்ளார். இதனால் இலங்கை அரசு இந்திய அரசுக்கு இதனை தெரியப் படுத்தியதால் காவல்துறை மூலம் எங்களுக்குப் பிரச்னைகள் வந்தன. எல்லாவற்றையும் பேசிச் சமாளித்தோம். பிறகு நான் கேரளாவில் எம்.ஏ. படிக்கும் போது இங்கு ஜி.பி.ஐ.ஓ. (Group for Peaceful Indian Ocean) என்ற அமைப்பை ஆரம்பித்தோம். அப் போது இந்துமகா கடலில் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் கப்பற்படைகள் நிலை கொண்டிருந்தன. இதனால் அணு ஆயுதப் போர் வந்து விடுமோ என பயந்து இந்த அமைப்பை ஆரம்பித்து அவர்களை வெளியேற வேண்டும் என குரல் கொடுத்தோம். அணு ஆயுதப் போர், அணு ஆயுதக் குறைப்பு ஆகியவற்றில் அப்போது ஆர்வமாக இருந்தேன்" என தனது பழைய நினைவுகளைக் குறிப்பிடுகிறார்.



"பிறகு எனக்கு எத்தியோப்பியா நாட்டில் பள்ளி ஆசிரியர் வேலை கிடைத்தது. 1981 இல் இருந்து 87 வரை ஆங்கில ஆசிரியராக அங்கே பணி புரிந்தேன். அதுவரை எனக்குள் இருந்த கம்யூனிஸ்ட் தாக்கம் அங்கே உடைந்து போனது. அங்குள்ள அரசு இறுக்கமாக மக்களை சுதந்தரமாகச் செயல்பட விடாதபடி இருந்தது. அங்கே நான் யுனெஸ்கோவின் கிளப் ஒன்றை ஆரம்பித்தேன். பிறகு யுனெஸ்கோ கூரியர் இதழில் சமாதானம் பற்றி விழிப்புணர்புக் கட்டுரைகளை எழுதினேன். இதனால் எத்தியோபியா அரசுக்கு எனது நடவடிக்கைகள் பிடிக்க வில்லை. பிறகு 88 இல் இந்தியா வந்துவிட்டேன். அப்போது நியூ இந்தியா மூவ்மெண்ட் என்ற இயக்கத்தை ஆரம்பித்தோம். அதன் வழியே கூடங்குளம் பிரச்னைகள் பற்றி அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றை கிராம மக்கள் மத்தியில் விநியோகம் செய்தோம். தொடர்ந்து கூடங்குளம் திட்டம் ரஷ்யாவின் வீழ்ச்சி, ராஜிவ் காந்தி படுகொலை போன்ற நிகழ்வுகளால் நின்று போனது. நான் எத்தியோப்பியாவில் இருக்கும்போது சர்வதேச சமாதான ஆய்வு மையம் இங்கிலாந்தில் மாநாடு நடத்தியது. அதில் எனது ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தேன். அங்கே ஆஸ்திரேலியாவில் இருந்து வந்த பெண்மணி எனக்கு அறிமுகமானார். பிறகு 89 இல் அவர் மூலம் நோட்டர்டேம் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. சமாதானம் பற்றிய படிப்புப் படிக்க வாய்ப்பு கிடைத்தது. அதில் 14 நாடுகளில் இருந்து வந்தவர்களில் 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதில் நானும் ஒருவன். இதனால் உலக நாடுகளில் நடக்கும் அனைத்துப் பிரச்னைகள் சிக்கல்கள் பற்றியெல்லாம் விவாதம் செய்யும் வாய்ப்புகள் கிடைத்தன. புதிய அனுபவங்கள் அங்கே ஏற்பட்டன.

> **அப்பாவின் பகுத்தறிவு கொள்கையும் அம்மாவின் காந்திய சிந்தனையும் எனக்கு நிறைய கற்றுக் கொடுத்தன.**

தொடர்ந்து அமெரிக்காவின் ஹவாய் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் படிப்பில் சேர்ந்தேன். எனது ஆய்வை அரசியல் அறிவியலில் செய்தேன். அதில் பா.ஜ.க., வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ். போன்ற இயக்கங்கள் எப்படி இந்திய சரித்திரத்தை சிதைத்து அரசியல் நோக்கங்களை மாற்றி எழுதினார்கள் என்பது பற்றி ஆய்வு செய்தேன். அந்த ஆய்வு Presentig the past என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்து. 96 வரை இந்த ஆய்வை செய்து டாக்டர் பட்டம் பெற்றேன். பிறகு நியூஜெர்சி மாநிலத்தில் ஓர் ஆண்டு பணி புரிந்தேன். பிறகு மினுசோட்டா பல்கலைக்கழகத்திலுள்ள சட்டக் கல்லூரியில் ஆய்வாளராகவும் தெற்காசிய துறையில் அரசியல் பாடம் எடுக்கும் ஆசிரியராகவும் பணி புரிந்தேன்.

1998 ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததும் பா.ஜ.க. கவர்ன்மெண்ட் வாட்ச் அதாவது பா.ஜ.க. அரசு கண்காணித்தல் என்ற அமைப்பை நிறுவி அதில் அரசின் திட்டங்கள், செயல்பாடுகள் பற்றி இந்திய மற்றும் உலகளாவிய ஆய்வாளர்களுடன் விவாதித்தோம். இணையதளத்தில் கட்டுரைகள் எல்லாம் எழுதினோம். அப்போதுதான் இந்து பத்திரிகையின் ஆசிரியர் என்.ராம் எனக்கு அறிமுகமாகி அவருடன் இணைந்து பல்வேறு விஷயங்களை விவாதித்தேன். எனது கட்டுரைகள் பல பத்திரிகைகளில் வெளிவந்தன. பிறகு 2001 ஆம் ஆண்டு இந்தியா வந்துவிட்டேன்" எனறவரிடம், இந்தியா வருவதற்கான காரணங்களைக் கேட்டோம்.

"தாய்நாடு எவ்வளவோ விஷயங்களைக் கொடுத்திருக்கிறது. நாம் அதை திருப்பித் தரவேண்டும் என நானும் எனது மனைவியும் நினைத்தோம். எனது மனைவி மீரா, எம்.ஏ., பி.எட். படித்துள்ளார். எனது அம்மாவின் தோழியின் மகள் எங்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் உள்ளனர். காந்தியின் வாய்மையே கடவுள் என்பதற்கு ஏற்ப ஒரு மகனுக்கு சூர்யா என்றும் இன்னொருவனுக்கு சத்யா என்றும் பெயரிட்டுள்ளேன்" என்ற அவர் தன் திருமணமும் மறக்க முடியாத சம்பவமாக நடந்தது என்கிறார்.

"1992 டிசம்பர் 13 ஆம் தேதி எனக்கு திருமணம் நடந்தது. அதற்கு ஒரு வாரத்திற்கு முன் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இதனால் நான் அமெரிக்காவில் இருந்து இங்கு வர நிறைய சிக்கல் ஏற்பட்டுவிட்டது. இங்குள்ள பிரச்னையால் பாங்காக்கில் விமானம் நிறுத்தப்பட்டது. பிறகு ஒரு வழியாக சென்னை வந்து திருமணத்திற்கு முன் தினம் இரவுதான் வந்து சேர்ந்தேன். எனது மனைவி மீராவும் பிறகு என்னோடு அமெரிக்காவில் இருக்கும்போது எம்.எஸ்.டபிள்யு. படித்தார். அவருக்கும் இந்தியா சென்று பள்ளி ஆரம்பித்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது. இதனால் எனது இரண்டாவது மகன் பிறந்ததும் இந்தியா வந்துவிட்டோம். இங்கு சம்பாதித்த பணத்தைக் கொண்டு நம் பகுதியில் பள்ளி ஆரம்பிப்பது எங்கள் திட்டமாக இருந்தது" என்கிறார். ஆனால் ஊருக்கு 2001 இல் வந்ததும் தனது தந்தை அவரை திமுககவில் உறுப்பினராகச் சேர்ந்து மக்கள் பணி ஆற்றுமாறு கூறினாராம். ஆனால் இவர் மறுத்துவிட்டார்.

"எனக்கு இங்குள்ள அரசியல் நிலைகள் பிடிக்க வில்லை. சரிப்பட்டு வராது என்று கூறிவிட்டேன். இதற்கிடையே 1998 ஆம் ஆண்டு இந்தியா வந்து போனபோது அணுஉலைக்கு எதிரான மக்கள் இயக்கத்தை ஆரம்பித்தேன். அதன்பின் நான் வெளிநாடு சென்றதால் இயக்கத்தின் செயல்பாடு மெதுவாகச் சென்றுக் கொண்டிருந்தது. நான் வந்த பிறகு மீண்டும் இயக்கத்தை வலுப்படுத்தினேன். அப்போதெல்லாம் கூடங்குளம் பகுதிக்குச் சென்றாலே மக்கள் எங்களை அடித்து விரட்டுவார்கள். அப்படி விரட்டும்போது ஓடிய அனுபவங்கள் நிறைய உள்ளன. ஏனெனில் அதிகாரிகள் இப்பகுதி பேச்சிப்பாறை அணை நீரால் வளம் பெறும், வேலை வாய்ப்பு என பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருந்தனர். இதனால் எங்கள் பேச்சுகளை அவர்கள் யாரும் கேட்கவில்லை. கடலோரப் பகுதி மக்கள் மட்டும் கொஞ்சம் ஒத்துழைப்பவர்களாக இருந்தனர். நான் அணுஉலை குறித்தும் அணு ஆயுதம் குறித்தும் கட்டுரைகள் எழுதி வந்தேன். இதற்கிடையே சாக்கர் என்ற மெட்ரிக் பள்ளியை ஆரம்பித்தேன். இது கிறிஸ்டியன் பள்ளி என இந்து அமைப்புகள் நினைத்துவிட்டனர். ஆனால் நான் சார்க் நாடுகளில் உள்ள குழந்தைகள் இங்கே வந்து படிக்க வேண்டும். இதன் மூலம் பலதரப்பட்ட கலாசாரப் புரிதல், நிறைய விஷயங்கள் கற்றுக் கொள்ள முடியும் என்று நினைத்து இந்தப் பெயரை வைத்தேன். இருந்தும் இன்று நிறைய முதல் தலைமுறை பள்ளிச் செல்லும் குழந்தைகள் இந்தப் பள்ளியில் படிக்கின்றனர். மீனவக் குழந்தைகள், இந்து, கிறிஸ்துவ குழந்தைகள் என பலரும் படிக்கின்றனர். தரமுள்ள கல்வி தர வேண்டும் என்பதுதான் எங்கள் நோக்கம்."

தொடர்ந்து அவரிடம் அமெரிக்க உளவாளி என்றெல்லாம் உங்கள் மீது ஏன் குற்றச்சாட்டுகளை வைக்கிறார்கள்? என்ற கேள்வியைக் கேட்டோம். "நான் தொடர்ந்து பன்னிரெண்டு ஆண்டுகள் அமெரிக்காவில் இருந்ததினால் இந்தக் குற்றச்

4 ஆம் பக்கம்

# 2011 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பொள்ளாச்சியில் கழகம் முன்னெடுத்த தொடர் களப்பணிகள்

செப்.17 - பொள்ளாச்சி, ஆனைமலை, கிணத்துக்கடவு பகுதிகளில் பெரியார் படத் திறப்பு, கொடியேற்று விழா நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அன்று மதியம் காகபுதூர் கிராமத்தில் சாதிமத வெறியர்களுக்கு சாவல் விடும் மாட்டுக்கறி விருந்து சிறப்பாக நடத்தப்பட்டது.

அக்டோபர் - உள்ளாட்சித் தேர்தலின்போது, கழகத்தின் செயல்பாடுகளுக்கு எப்போதும் துணை நிற்கும் பொள்ளாச்சி ஆனைமலை பகுதிகளைச் சேர்ந்த ம.தி.மு.க., அ.தி.மு.க. தோழர்கள் போட்டியிட்ட நகரமன்ற பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளில் கழகத்தின் ஆதரவை அவர்கள் பெரிதும் எதிர்பார்த்து வேண்டிக் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் தோழர்கள் வெள்ளிங்கிரி, காசு. நாகராசன் ஆகியோர் பரப்புரை நடத்தினர். தமிழீழ விடுதலைப் போராட்டம், மூன்று தமிழர் உயிர்காப்பு, தமிழக மீனவர் பிரச்சினை, கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு, சாதிமத எதிர்ப்புக் கருத்துகளை முன் வைத்து தோழர்கள் நிகழ்த்திய பரப்புரை மக்களிடையே பெரும் வரவேற்பை கொடுத்தது.

அக்டோபர் 22 - கிணத்து:க கடவு ஒன்றிய செயலாளர் நிர்மல் குமார் மீது சாதி வெறியர்கள் நடத்திய தாக்குதலைக் கண்டித்து கழகப் பொதுச் செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்ம் நடத்தப்பட்டது. ஒரே நாள் இடைவெளியில் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் கோவை-திருப்பூர் மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள் என 100-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கழகத்தின் எதிர் நடவடிக்கையைத் தொடர்ந்து தாக்குதல் நடத்திய சாதி வெறியர்கள் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டு தண்டத் தொகை செலுத்தினார்கள்.

நவம்பர் 22 - ஆனைமலை ஒன்யிம் காகபுதூா கிராம சுகாதார செவிலியர் வைத்தியம் பார்க்க வரும் நோயாளிகளிடம் சாதித் தீண்டாமை கடைப்பிடிக்கிறார் என பொது மக்கள் எழுப்பிய குற்றச்சாட்டினையொட்டி கழக ஒன்றிய செயலாளர் மு.சம்பத் தலைமையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் முற்றுகையிடப்பட்டது. கழகத்தின் போராட்டத்தைத் தொடர்ந்து மருத்துவர்கள், சுகாதாரத் துறை அலுவலர்கள் அடங்கிய குழு விசாரணையை மேற்கொண்டது. பிறகு சம்பந்தப்பட்ட செவிலியர் இட மாற்றம் செய்யப்பட்டதோடு அரசின் உதவித் தொகை கிடைக்கப் பெறாத தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கு உடனடியாக உதவித் தொகைகளும் வழங்கப்பட்டன.

நவம்பர் 26 - சாதி ஒழிப்பிற்கான சட்ட எரிப்புப் போராளிகள் மாவீரர் நாளும், நவம்பர் 27 தமிழீழ மாவீரர் நாளும் ஆனைமலை ஒன்றியக் கழகம் சார்பில் கடைபிடிக்கப்பட்டது. காகபுதூரில் உளள சாதி ஒழிப்பு மாவீரர் நாள் 50 ஆவது ஆண்டு நினைவுத் தூண் முன்பு நடைபெற்ற வீரவணக்க நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களும் கழகத் தோழர்களும் பங்கேற்றனர்.

டிசம்பர் 8 - "முல்லைப் பெரியாறு அணை நீரை 152 அடியாக உயர்த்து! கூடங்குளம் அணு உலையை இழுத்து மூடு!" என்கிற முழக்கங்களோடு பொள்ளாச்சியில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு நகர கழக செயலாளர் வே. வெள்ளிங்கிரி தலைமை தாங்கினார். கழகத் தோழர்களும் தோழமை இயக்கத்தவர்களுமாக 200 பேர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். கோவை மலையாள நிறுவனர் தாக்குதல் வழக்கில் கைது செய்யப்பட்டு பொள்ளாச்சி பாஸ்டல் சிறையில் வைக்கப்பட்டிருந்த 14 கல்லூரி மாணவர்களின் விடுதலை கோரி டிசம்பர் 12, 13, 14 மூன்று நாட்களும் துண்டறிக்கைப் பிரச்சாரம் நடத்தப்பட்டன.

டிசம்பர் 14 - கழக மாவட்ட செயலாளர் காசு. நாகராசன் தலைமையில் முல்லைப் பெரியாறு அணைப் பாதுகாப்பு இயக்கம் ஒருங்கிணைக்கப்பட்டு, அதற்கான கலந்துரையாடல் கூட்டம் ம.தி.மு.க. அலுவலகத்தில் நடத்தப்பட்டது. கூட்டத்தில் தொடர் போராட்டங்கள் திட்டமிடப்பட்டன.

டிசம்பர் 16 - முல்லைப் பெரியாறு அணைப் போராட்டத்தில் சிறைப்படுத்தப் பட்டுள்ள தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் மற்றும் பிற இயக்கத் தோழர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். தமிழர் உரிமைப் போராட்டங்களை தமிழர் அல்லாத பிற மாநில அதிகாரிகள் குறிப்பாக மலையாளிகள் கையாளக் கூடாது. தமிழக காவல்துறை, ஆட்சித்துறைகளிலுள்ள மலையாளிகளை உடனே மாற்ற வேண்டும் என்கிற முழக்கங்களை முன் வைத்து பொள்ளாச்சியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதில் கழகத் தோழர்கள் தோழமை இயக்கத்தின் முந்நூறு பேர் கலந்து கொண்டனர்.

டிசம்பர் 17, 18 - முல்லைப் பெரியாறு அணை நீரை 152 அடியாக உயர்த்து! கூடங்குளம் அணு உலையை இழுத்து மூடு! என்கிற முழக்கங்களோடு இரண்டு நாள் பரப்புரைப் பயணம், கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. கிணத்துக்கடவு ஒன்றியம், முத்துக்கவுண்டன்புதூர், கேரளா எல்லையில் தொடங்கி, கோபாலபுரம், மீனாட்சிபுரம், வளந்தாயபுரம் என 15 எல்லையோர கிராமங்களிலும் பொள்ளாச்சி நகரிலும் நடைபெற்ற பரப்புரைப் பயணம் ஆனைமலையில் பொதுக் கூட்டத்துடன் நிறைவடைந்தது. இப்பயணத்திலும், பொதுக் கூட்டத்திலும் நூற்றுக்கணக்கான மக்கள் கூடினார்கள். தி.மு.க., ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட பல்வேறு சமூக அரசியல் இயக்கத்தினர் பங்கேற்றுப் பேசினர். டிசம்பர் 21-ல் நடைபெறும் கேரள சாலைகள் முற்றுகைப் போராட்டத்திற்கு பொது மக்கள் வர வேண்டும் என்றும், அன்று முழு அடைப்பு நடத்த வேண்டும் என்றும் கழகப் பொதுச் செயலாளர் அழைப்பு விடுத்தார்.

டிசம்பர் 21 - கேரள சாலைகள் முற்றுகைப் போராட்டம் பொள்ளாச்சிப் பகுதியில் இரண்டு எல்லைகளில் நடைபெற்றது. கோபாலபுரம் சோதனைச் சாவடிக்கு பொள்ளாச்சி நகர செயலாளர் வெள்ளிங்கிரி தலைமையில் 50-க்கும் மேற்பட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர். வளந்தாயமரம் சோதனைச் சாவடியில் நடைபெற்ற போராட்டத்திற்கு கழகத்தின் பரப்புரைப் பயணத்தின் விளைவாக பொது மக்கள், தொழிலாளர் என சுமார் 500 பேர் 9 கிலோ மீட்டர் தூரம் பேரணியாகச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் கழகப் பொறுப்பாளர்கள் காசு. நாகராசன், மு.சம்பத், வே.அரிதாசு, கோ. மணிமொழி உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் பேரணியை வழிநடத்திச் சென்றனர். வளந்தாய மரம் போராட்டத்தில் கைது செய்யப்பட்டோரிடம் மாணவர்கள் வழக்கு நிதியாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ.20 ஆயிரத்தை ம.தி.மு.க. தோழர் தம்பு, கா.சு.நாகராசனிடம் வழங்கினார்.

டிசம்பர் 22 - சிறைப்பட்டிருந்த தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்களுக்கான பிணைத் தொகை ரூ.2 இலட்சத்தை மாவட்ட கழகத் தோழர்களின் உதவியோடு கழகப் பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் நீதிமன்றத்தில் செலுத்தினார். மாணவர் கழக அமைப்பாளர் ந. பன்னீர்செல்வம், மாணவர்கள் விடுதலைக்கான ஏற்பாடுகளை முன்னின்று செய்தார்.

டிசம்பர் 23 - தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் 20 பேருக்கும் பொள்ளாச்சி சிறை வாயிலில் மாணவர் கழக அமைப்பாளர் ந.பன்னீர்செல்வம் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான பள்ளி கல்லூரி மாணவர்கள், பெற்றோர்கள், தோழமை இயக்கத்தினர் அனைவரும் கலந்து கொண்டு சிறையிலிருந்து ம.தி.மு.க. அலுவலகம் வரை ஊர்வலமாகச் சென்றனர். ம.தி.மு.க அலுவலகத்தில் பாராட்டு விழா நடத்தி, மதிய விருந்துக்குப் பின் மாணவர்கள் தனி வாகனத்தில் கோவை அனுப்பி வைக்கப்பட்டனர். பொள்ளாச்சியை அடுத்து கிணத்துக்கடவிலும் மாணவர்களுக்கு சிறப்பான வரவேற்பும் தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டது.

மாணவர்கள் சிறைப்படுத்தப்பட்டதில் மன வருத்தம் அடைந்திருந்த பெற்றோர்கள் சிலர், வரவேற்பு மரியாதையையும் பிணைத் தொகை முழுவதையும் கழகமே பொறுப்பெடுத்துக் கட்டியதையும் அறிந்து மகிழ்ச்சி அடைந்தனர்.

டிசம்பர் மாதம் முழுவதும் பொள்ளாச்சிப் பகுதியில் பல்வேறு அமைப்பினர் தொடர் போராட்டங்களை நடத்த கழகத் தோழர்கள் அனைத்திலும் பங்கேற்று உரையாற்றினர். கழகத்தின் பணிகளை பல்வேறு இயக்கத்தவர்களும், பொது மக்களும் வெளிப்படையாகவே பாராட்டினர்.

**செய்தி: கா.சு. நாகராசன்**

# எல்லை மீட்பு: ராஜகோபாலாச்சாரிக்காக பல்டி அடித்த ம.பொ.சி.!

தேவி குளம், பீர்மேடு பகுதிகளை தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்ற போராட்டம் தொடர்பாக தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ.சிவ ஞானத்துக்கும் பெரியாருக்குமிடையே நடந்த கடிதத் தொடர்புகள் குறித்து பெரியார் நிகழ்த்திய உரை, 5.1.2012 மற்றும் 12.1.2012 இதழ்களில் வெளியிட்டிருந் தோம். தேவிகுளம், பீர்மேடு என்ற பகுதிகளை தமிழகத்தோடு இணைத்துக் கொள்வதையும் தாண்டி, தமிழ் நாட்டின் முழுமையான தன்னாட்சிக் கோரிக்கைகளாக, ராணுவம், வெளி நாடு உறவு நீங்கலாக, ஏனைய அனைத்து உரிமைகளும் தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட வேண்டும். இந்தியை தேசிய மொழியாக்கும் முயற்சியை கைவிட வேண்டும்; தமிழ்நாட்டின் எல்லைகளை நிர்ணயிப்பதில் எல்லை ஆணையம் செய்துள்ள ஓர வஞ்சனைகளை நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் போராட்டத்தில் இணைக்கப்பட வேண்டும் என்று பெரியார் வலியுறுத்தினார். இதை பெரியாரிடம் ஒப்புக் கொண்ட ம.பொ.சி., பிறகு, தனது போக்கை மாற்றிக் கொண்டதை பெரியார், அதில் விரிவாக விளக்கி இருந்தார். தொடர்ந்து பெரியார் உரையின் நிறைவு பகுதியை இங்கு வெளியிடுகிறோம்.

"இதையெல்லாம் நான் குறிப்பிடுவது இதற்குப் பின்னால் இனிமேல் ம.பொ.சி.யார் அடிக்கப் போகிற கரணத்தை (பல்டியை) விளக்குவதற்கே ஆகும்.

இப்படி எல்லாம் முதலில் கடிதம் மூலமாக நேரிலும் பேசி வந்தவர் சட்டென்று மாற்றமடைந்து விட்டார். பிறகு நான் சென்னைக்குச் சென்றவுடன் 26 ஆம் தேதி அன்றைய தினம் எனக்கு ஒரு அச்சடித்த "சர்வ கட்சித் தலைவர்களின் ஆலோசனைக் கூட்டம்" என்ற தலைப்பில் அழைப்பிதழ் வந்தது. அதில் தமிழக எல்லைப் பகுதியை மட்டும் குறிப்பிட்டு அதற்கென்று ஆலோசனைக் குழு நடத்தப் போவதாகவும் அக்குழு ஜனவரி 27 ஆம் தேதி மாலை 4 மணிக்கு 'உமா' பத்திரிகை அலுவலகத்தில் சககட்சித் தலைவர்களின் ஆலோசனையின் பேரில் கூடுகிறதென்றும் அதற்கு வர வேண்டும் என்பதாகவும் எழுதி அதில் நண்பர் ம.பொ.சி.யின் கையெழுத்து மட்டும் இருந்தது. முதலில் என்னென்னமோ எழுதினார். முதலில் எழுதிய கடிதம் ஒன்றுடன் இணைத்திருந்த சர்வகட்சி தலைவர்களுக்கு அழைப்பு தகவலில் 5 பேர்களுக்குக் கையெழுத்திட இடம் ஒதுக்கி இருந்தார். அதில் அவர் இரண்டாவதாக கையெழுத்திட்டிருந்தார். அப்படியிருந்தும் இன்றைக்கு திடீர் மாற்றமடைந்துவிட்டாரோ என்று யோசித்தேன். மேலும் முதலில் பேசியபடி எந்தெந்த விஷயங்கள் சம்பந்தமாக கிளர்ச்சி என்பதையும் விட்டு இப்போது ஒன்றுக்கு மட்டும் கிளர்ச்சி என்பதாகவும் மேலும் தனக்கு சவுகரியப்பட்ட 'உமா' பத்திரிகை அலுவலகத்தில் கூடுவது என்பதும் அவருடைய முழு மாற்றத்தையும் தெரிவித்தது.

இதற்கிடையில் அப்போது எங்கிலும் கிளர்ச்சிகள் நடந்து வருகின்றன. அங்கங்கே தந்திக் கம்பிகளை அறுப்பதும் தண்டவாளங்களை பெயர்ப்பதும் ரயிலை நிறுத்துவதும் சட்டசபை மறியலும் நடந்து கொண்டிருக்கின்றன. இத்தனையும் நடந்து கொண்டிருக்கையில் அரசினரிடம் நடவடிக்கை எடுக்க திட்டம் வகுக்கப்படுகிறதாம்.

இப்படி மக்களை திடீரென்று ஒருவித முன் யோசனையும் இன்றி தூண்டிவிட்டு இத்தனை அக்ரமங்களையும் செய்யச் சொல்லி அதனால் ஒருவித பயனும் இல்லாமல் உள்ளே தள்ளப்பட்டது தான் கண்ட பலனாக இருக்க திடீரென்று அன்றைய ஆலோசனைக் கூட்டத்தின் தீர்மானப்படி இப்போது நடத்தப்படும் கிளர்ச்சியை வாபஸ் வாங்கிக் கொண்டு இதன் சம்பந்தமாக கவனிக்க ஒரு கமிஷனை ஏற்படுத்தி அதற்கு தலைவராக சர் பி.டி. ராஜனைத் தேர்ந்தெடுத்து இனி அந்தக் கமிட்டியின்படி ஆலோசிக்கப்படும் என்று கூறி விட்டார்கள்.

நான் எனக்கு வந்த அழைப்பைக் கண்டவுடன் அழைப்பைக் கொண்டுவந்து கொடுத்த தோழர் உமாபதியிடம், "நண்பர் ம.பொ.சி. சொல்லுகிற வார்த்தைக்கு மாறாகத்தான் நடந்து கொள்ளுதல் வழக்கம்போல் இருக்கிறது" என்று கேட்டேன். அதற்கு அவர், "எனக்கு ஒன்றும் தெரியாதே என்னைக் கேட்கிறீர்களே அவரையே கேளுங்கள்" என்று தொலைபேசியில் ம.பொ.சி.யைக் கூப்பிட்டார். நான் அவரிடம், "நீங்கள் என்ன என்னிடம் சொன்னீர்கள் இப்போது என்ன செய்கிறீர்கள்" என்று கேட்டேன். அதற்கு அவர் ஒரு காரணம் கூறினார். எனக்கு அவர் எழுதிய 20 ஆம் தேதி கடிதம் 22 ஆம் தேதி கிடைத்ததால் உடனடியாக ஒன்றும் பதில் தெரிவிக்க முடியாமற் போனதால் அதை ஒரு குறையாகக் குறித்து நீங்கள் தான் நான் எழுதுகிற கடிதம் வந்து சேரவில்லையென்று கூறுகிறீர்கள்! நான் என்ன செய்வேன். மேலும் மற்றவர்கள் எல்லாம் நீங்கள் கூறுகிறவைகளின்படி ஏனையவைகளுக்கு சம்மதிக்க மறுக்கிறார்கள். எனவே நீங்கள் இக்குழுவில் கலந்துகொண்டு உங்கள் விருப்பத்தை தெரிவியுங்கள்" என்றார். நான் அங்கு வருவதாகவும் இல்லை உங்கள் தேவையும் அவசியமில்லை என்று கூறி முடித்தேன்.

இப்படி நண்பர் ம.பொ.சி. மாறுவதற்குக் காரணம் இருக்கிறது. ஆச்சாரியார் தட்சிணப் பிரதேசத்தை ஆதரித்துப் பேசி, தட்சிணப் பிதேசம் அமைக்கப்பட வேண்டியது அவசியம்தான் என்று கூறி இருக்கிறார். அன்றைய மறு தினமே நண்பர் ம.பொ.சி. மாறிவிட்டார். நம்முடன் கலந்தால் அதையெல்லாம் எதிர்க்க வேண்டுமே என்பதற்காக மிகத் தந்திரமாக இப்படி மாறிவிட்டார்.

ஆனால் தட்சிணப்பிரதேசம் அமைக்கப்பட்டால் இவர்கள் அத்தனை பேரும் ஆதரித்தாலும் சரியே. நான் மட்டும் விடப் போவதில்லை. அதை அறிவிக்கும் முயற்சியில் கடுமையாக திட்டமிட்டிருக்கிறேன்.

(29.1.1956 வேலூரில் பெரியார் பேசியது - 'விடுதலை' ஏட்டிலிருந்து)

# கூடங்குளம் போராளிகள் மீதான தாக்குதலுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டனம்

*பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை:*

கூடங்குளம் அணுஉலை தொடர்பாக நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜனவரி 31 ஆம் தேதி நடக்கவிருந்த பேச்சுவார்த்தைக்கு விடுக்கப்பட்டிருந்த அழைப்பை ஏற்று அதில் கலந்து கொள்ளச் சென்ற போராட்டக் குழுவின் தலைவர் சுப.உதயக்குமார், புஷ்பராயன், மைபா ஆகியோர் மற்றும் மகளிர் உள்ளிட்ட போராட்டக் குழுவினரை இந்து முன்னணி, காங்கிரஸ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள்ளேயே கடுமையாகத்தாக்கியுள்ளனர். போராட்டக் குழுவினரின் வாகனமும் தாக்கப்பட்டுள்ளது.

பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்ட நேரத்திலேயே பேச்சு வார்த்தைக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த இடத்திலேயே ஒரு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள்ளேயே போராட்டக் குழுவினர் தாக்கப்பட்டிருப்பதும், தாக்குதல் நடந்து முடிந்த பின்னரே காவல்துறை வந்து தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதும் தற்செயலாக நடந்தவைகள் அல்ல.

போராட்டத்தைச் சீர்குலைக்க சாதி ரீதியாகவும், மத ரீதியாகவும் போராட்டக் குழுவைப் பிளவுபடுத்தும் முயற்சிகளை மேற்கொண்டது ஆளும் வர்க்கம். அதன் பிறகு தனி மனித தாக்குதல்களை நடத்தி போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் பரப்புரைகளை மேற்கொண்டது. அடுத்த கட்டமாக போராடும் மக்கள் மீது வன்முறையை ஏவுகிறது.

இந்தத் தாக்குதலின் நோக்கம் வெறும் தாக்குதலாக மட்டும் இருக்காது. தாக்கப்பட்ட மக்கள் தாக்கியவர்கள் மீது எதிர்வினை ஆற்றுவார்கள். அதன் பிறகு வன்முறையைக் கட்டுப்படுத்தப் போகிறோம் என்ற பெயரில் காவல்துறையை வைத்து அணுஉலைக்கு எதிராகப் போராடும் மக்களை முடக்கி விடலாம் என்ற நோக்கில் நடத்தப்பட்ட முயற்சி என்றே கருத வேண்டியுள்ளது.

அணுஉலைக்கு ஆதரவாக போராட விரும்புபவர்கள் அறவழியில் போராடலாம்; அல்லது அணுஉலை எதிர்ப்புப் போராட்டக் குழுவினர் கேட்கும் கேள்விகளுக்கு அறிவியல் ரீதியாக பதில் அளிக்க முயற்சிக்கலாம். அதை விட்டு விட்டு அமைதியாகப் போராடும் மக்கள் மீது பேச்சு வார்த்தைக்குச் சென்ற இடத்தில் தாக்குதலை நடத்தும் காங்கிரஸ் மற்றும் இந்து முன்னணி அமைப்புகளை வன்மையாகக் கண்டிக்கிறோம். அறவழியில் போராடும் மக்களுக்கும் அணுஉலை எதிர்ப்புப் போராட்டக் குழுவினருக்கும் உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம் என்று அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

## நம்பியூரில் கண்டன ஆர்ப்பாட்டம்

கூடங்குளம் அணு உலையை மூடக் கோரியும் முல்லைப் பெரியாறு அணையை இடிக்க முயலும் கேரள அரசைக் கண்டித்தும், தமிழகத்திற்கு துரோகம் இழைக்கும் மத்திய அரசைக் கண்டித்தும் கழகத்தின் நம்பியூர் ஒன்றியம் சார்பாக 1.1.2012 அன்று நம்பியூர் பேருந்து நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட அமைப்பாளர் செல்வக்குமார் தலைமையேற்க நம்பியூர் ஒன்றிய அமைப்பாளர் ரமேசு முன்னிலை வகித்தார். கழகத்தின் தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர் இரத்தினசாமி, மாவட்ட தலைவர் நாத்திகசோதி, ம.தி.மு.க. ஒன்றிய செயலாளர் சுப்பிரமணியம், விடுதலை சிறுத்தைகள் ஒன்றிய பொறுப்பாளர் பழனிசாமி, நாம் தமிழர் கட்சி வெங்கட், தே.மு.தி.க. நகர பொறுப்பாளர் அல்லாபிச்சை, எலத்தூர் பேரூர் கழக செயலாளர் கதிர்வேல், புரட்சிகர விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர் முன்னணி இராமக்குட்டி, தலித் விடுதலைக்கட்சி மாவட்ட செயலாளர் முருகன் (எ) அப்துல்லா, உழவர் சிந்தனை பேரவை பரமேஸ்வரன் ஆகியோர் மத்திய காங்கிரசு அரசின் துரோகத்தையும் கேரள அரசின் விரோத போக்கினையும் கண்டித்து கண்டன உரை நிகழ்த்தினனர். அழகிரி நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை அருளானந்தம், ரமேசு, செல்வக்குமார் மற்றும் நம்பியூர் மற்றும் கூடக்கரை தோழர்கள் ஏற்பாடு செய்து இருந்தனர். ஆர்ப்பாட்டத்தில் பெரியார் தி.க., நாம் தமிழர், ம.தி.மு.க., தே.மு.தி.க. தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

*2 ஆம் பக்கத் தொடர்ச்சி*

சாடுகளை வைக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எனக்கு அமெரிக்க கொள்கையின்மீது திருப்தியில்லை. அதனை எதிர்த்து அங்கேயும் போராட்டம் நடத்தியிருக்கிறேன். ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தபோது எங்கள் பல்கலைக்கழகத்திற்கு ஜார்ஜ் புஷ் வந்தார். அவரை எதிர்த்து அங்கே ஆர்ப்பாட்டம் நடத்தினேன். சாலை மறியல் போராட்டமும் செய்துள்ளேன். அமெரிக்க உளவுத் துறையின் பட்டியலில் என் பெயரும் கண்காணிப்பில் உள்ளது. அதனால் கூடங்குளம் போராட்டத்தை திசை திருப்பச் செய்யும் ஒரு முயற்சியாகவே என் மீது குற்றம் சுமத்துகிறார்கள்" என்றார்.

ஜெயபிரகாஷ் நாராயணன் அமெரிக்காவில் படித்தவர்தான். சுவாமி விவேகானந்தர் அமெரிக்கா சென்று வந்த பிறகு தான் இந்தியாவில் தெரியலானார். அதற்காக அவர்கள் எல்லோரும் அமெரிக்காவின் உளவாளிகளா? என்று ஆதங்கமாக கேள்வி எழுப்பியவர், "அணுஉலை எவ்வளவு ஆபத்து என்பது இங்குள்ள மக்களுக்கு நன்கு புரிந்துள்ளது. இப்போது அனைவரும் நல்ல ஒத்துழைப்பை எங்களுக்கு வழங்குகின்றனர். அதுபோல் உலகில் 90 சதவிகித பணிகள் முடிவடைந்த நிலையில் உள்ள அணுஉலைகள்கூட மக்களின் போராட்டத்தால் மூடப் பட்டுள்ளன. அதுபோன்ற நிலை கூடங்குளத்திலும் ஒரு நாள் வரும். அதுவரை எங்களது மென்முறை போராட்டம் தொடரும்" என்கிறார் அழுத்தமான குரலில் அமைதியாக.

# பாரதிதாசன் பல்கலை பார்ப்பனியத்தைக் கண்டித்து பிப். 10 இல் திருச்சியில் ஆர்ப்பாட்டம்

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் மிக முக்கிய துறையாக இயங்கி வரும் மகளிரியல் துறைக்கு பேராசிரியர் முனைவர் மணிமேகலை தலைவராக செயலாற்றி வருகிறார். இத் துறை மூலம் எண்ணற்ற மகளிர்சுய உதவிக் குழுக்களுக்கு தரமான, முழுமையான தொழிற் பயிற்சிகளை வழங்கி வருகிறார். பயிற்சிகளோடு அவர்களை விட்டுவிடாமல் மகளிர் தொழில் முனைவோருக்கு அகில இந்திய அளவில் வணிக வாய்ப்புகளையும், சந்தைப்படுத்துதலையும் ஏற்படுத்திக் கொடுத்து பெண்கள் சுயமரியாதையாகவும், சுதந்திரமகவும் வாழ வழிவகை செய்து வருகிறார். தனது துறை சார்ந்த மாநாடுகளிலும், கருத்தரங்குகளிலும் பெரியாரியலைப் பரப்புவதில் அக்கறை செலுத்துகிறார். ஆய்வறிஞர் எஸ்.வி. இராஜதுரை இதே பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பெரியார் உயராய்வு மையத்தின் இயக்குநராகப் பணியாற்றி வந்தார்.

அதேபோல தமிழ்நாடு அரசு சார்பாகவே குடிஅரசு தொகுப்பு நூல்கள் வெளிவர தேவையான முயற்சிகளைச் செய்து கொண்டிருந்த பெரியாரியலாளர் இராமர் இளங்கோ, பாரதிதாசன் உயராய்வு மையத்தின் தலைவராகப் பணியாற்றி வந்தார். எஸ்.வி. இராஜதுரை, இராமர் இளங்கோ, முனைவர் மணிமேகலை ஆகியோர் இணைந்து தொடர்ந்து பெரியாரியலைப் பரப்பும் வகையிலான பல நிகழ்வுகளை நடத்தி வந்தனர். இந்த நிலையில் கடந்த ஆண்டு இப்பல்கலைக் கழகத்திற்கு மீனா என்ற ஒரு பார்ப்பன அம்மையார் துணைவேந்தராகப் பொறுப்பேற்றார். பொறுப்பேற்றவுடன் முதற்காரியமாக எஸ்.வி.இராஜ துரைக்குப் பிறகு பெரியார் உயராய்வு மையத்தின் இயக்குநராகப் பணியாற்றி வந்த நெடுஞ்செழியன் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து இராமர் இளங்கோ பதவி நீக்கம் செய்யப்பட்டார். தொடர்ந்து மகளிரியல் துறையின் தலைவரான மணிமேகலையையும் பதவி நீக்கம் செய்ய முயற்சிகளை மேற் கொண்டார். செய்தி அறிந்த கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திருச்சியிலேயே பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தி துணைவேந்தரைக் கண்டித்தார். அதனால் முனைவர் மணிமேகலையின் பதவி நீக்க நிறுத்தி வைக்கப்பட்டது. அதே சமயம் அவரைப் பதவி நிக்கம் செய்ய கடந்த ஒரு வருடமாக தொடர்ந்து திட்டமிட்டு பல்வேறு தொல்லைகளைக் கொடுத்து, தற்போது 4.2.12 அன்று தற்காலிக நீக்கம் செய்துள்ளாார் துணைவேந்தர் மீனா அம்மையார்.

தான் பதவியேற்ற நாளிலிருந்து பெரியார் உயராய்வு மய்யம், மகளிரியல் துறை, பாரதிதாசன் உயராய்வு மய்யம் ஆகிய மூன்று துறைகளையும் திட்டமிட்டு முடக்கிவிட்ட பார்ப்பன மீனா அம்மையாரை வன்மையாகக் கண்டித்தும், பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறைகளுக்கு முரணாக தற்காலிக நீக்கம் செய்யப்பட்ட முனைவர் மணிமேகலையின் தற்காலிக நீக்க ஆணையை ரத்துக் கோரியும் வரும் 10.2.2012 வெள்ளிக் கிழமை மாலை 10 மணியளவில் திருச்சி புகைவண்டிச் சந்திப்பு அருகே காதிகிராஃப்ட்டில் பெரியார் திராவிடர் கழகம் ஒருங்கிணைக்கும் அனைத்துக் கட்சிக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது. தொடர்ந்து பல்கலைக்கழக வாயிலிலும் போராட்டங்கள் நடைபெறும்.

## வடசென்னையில் காந்தி படுகொலை கண்டனக் கூட்டம்

30.1.2012 அன்று வடசென்னை மாவட்ட கழக சார்பில் சென்னை அயன்புரம் பகுதியில் காந்தியார் படுகொலை செய்யப்பட்டது ஏன்? எதற்கு? எப்படி? என்ற தலைப்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அயன்புரம் பகுதி அமைப்பாளர் சி.மணிவண்ணன் தலைமையில் மாவட்ட தலைவர் எ.கேசவன் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வடசென்னை மாவட்ட அமைப்பாளர் வி.ஜனார்த்தனன் வரவேற்புரை ஆற்றினார். கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், மூத்த வழக்கறிஞர் செ. துரைசாமி, மாவட்ட செய லாளர் வழக்கறிஞர் சு. குமார தேவன் ஆகியோர் சிறப்புரை யாற்றினர். பரசு ராமன் நன்றியுரை யாற்றினார்.




நிகழ்ச்சியின் தொடக்கத்தில் சம்பூகன் கலைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. பாடகர்கள் அருள்தாஸ், நாத்திகன், கீர்த்தி ஆகியோர் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 9th February 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | பிப். 16, 2012 | புரட்சி 11 | முழக்கம் 05 | விலை: ரூ.2.50

## பாரதிதாசன் பல்கலை கழகத் துணைவேந்தரின் பார்ப்பனப் போக்கைக் கண்டித்து

# திருச்சியில் கழகம் ஆர்ப்பாட்டம்



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் மகளிரியல் துறை இயக்குநர் பேராசிரியர் முனைவர் மணிமேகலையை தற்காலிக நீக்கம் செய்ததைக் கண்டித்தும், தற்காலிக நீக்க ஆணையை ரத்து செய்யக் கோரியும், பாரதிதாசன் உயராய்வு மையம், பெரியார் உயராய்வு மையம் ஆகியவற்றை முடக்க முயற்சி செய்ததைக் கண்டித்தும் பெரியார் திராவிடர் கழகம் திருச்சியில் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. 10.02.2012 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் திருச்சி புகைவண்டி சந்திப்பு எதிரே பெரியார் திராவிடர் கழக மாவட்டத்தலைவர் எஸ்.எஸ். முத்து தலைமையில் பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்து இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பார்ப்பன அம்மையாரான துணைவேந்தர் மீனா அவர்கள் பொறுப்பேற்ற நாளில் இருந்து தொடர்ந்து செயல்படுத்திவரும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு விரோதமான செயல்பாடுகளை விளக்கி கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் உரையாற்றினர்.பெரியார் தி.க மாவட்டச் செயலாளர் கந்தவேல் குமார் வரவேற்புரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் மனோகரன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்தினார். இந்நிகழ்ச்சியில் பாரதிய முஸ்லீம் மகிளா அந்தோலன் என்ற இசுலாமிய மகளிர் அமைப்பின் மாநில ஒருங் கிணைப்பாளர் கமீலா, சமூக ஆர்வலர் அம்பிகா நடராசன், தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்டப் பொறுப்பாளர் நடராசன், ஜெயம் நாக் இன்பவல்லி, தாழம்பூ, மகளிர் சுய உதவிக் குழுவின் தலைவர் காளீஸ்வரி, மகளிர் தொழில் முனைவோர் சங்கத்தின் ஜான்ஸி, சமூகப் பணியாளர்கள் ஜெயந்தி, இந்திராணி, பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் ஆய்வு மாணவர் காமாட்சி, அறிவியல் இயக்கத்தின் மாநிலக்குழு உறுப்பினர் நீலா, ஆகியோரும் தொழிலாளர் கல்வி மற்றும் மேம்பாட்டு மய்யம், தேசிய தபால் ஊழியர் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளும் முனைவர் மணிமேகலை அவர்களின் முயற்சியில் உருவான மகளிரியல் துறையால் பயன்பெற்ற பல்வேறு மகளிர் அமைப்புகளைச் சேர்ந்த 200 க்கும் மேற்பட்ட பெண்கள் கைக்குழந்தைகளுடனும் குடும்பத்துட னும் முழுமையாக இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

### பணி நீக்கம் ரத்து; கோரிக்கை வெற்றி!

பார்ப்பன துணை வேந்தர் மீனா, முனைவர் மணிமேகலையை பணி நீக்கம் செய்து பிறப்பித்த ஆணையை தமிழக ஆளுநர் பல்கலை வேந்தர் என்ற முறையில் ரத்து செய்துள்ளார். கழகம் போராட்டம் நடத்திய அன்றே இந்த வெற்றிச் செய்தி கிடைத்துள்ளது. இதே கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாடு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ஆளுநர் மாளிகையில் நேரடியாக கோரிக்கை மனுவை வழங்கினர். பல்வேறு தரப்புகளிலிருந்து தரப்பட்ட அழுத்தங்களின் காரணமாக கோரிக்கை வெற்றிப் பெற்றுள்ளது.

மேலும் ஆதித்தமிழர் பேரவையின் பொறுப் பாளர் விடுதலை வெங்கட், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டப் பொறுப்பாளர் தமிழாதன், புதிய தமிழகம் கட்சி மாவட்டப் பொறுப்பாளர் சங்கர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் இந்திரஜித், மக்கள் உரிமைப் பேரவை அமைப்பாளர் வழக்கறிஞர் பானுமதி, நாம் தமிழர் கட்சி மாவட்ட அமைப்பாளர் வழக்கறிஞர் பிரபு, தமிழக ஒடுக்கப் பட்டோர் விடுதலை இயக்கப் பொறுப்பாளர் நிலவழகன்,தமிழ் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் கவித்துவன், பெரியார் பாசறை அமைப் பாளர் சீனி.விடுதலை அரசு ஆகிய தோழர்கள் தங்கள் அமைப்புகளைச் சார்ந்த தோழர்களுடன் போராட்டத்தில் பங்கேற்றனர்.

முனைவர் மணிமேகலை தற்காலிக நீக்கம் செய்யப்பட்ட உடனேயே கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஓரிரு நாட்களுக்குள்ளேயே போராட்டத்தை அறிவித்தார். அறிவித்த குறுகிய இடைவெளியில் திருச்சியிலுள்ள அனைத்து அமைப்புகளையும் திரட்டி 300 க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்கும் வகையில் எழுச்சிகரமான போராட்டத்தை திருச்சி பெரியார் தி.க தோழர்கள் நடத்தினர். நிகழ்ச்சியில் அரசியல் சட்ட எரிப்பு வீரர்கள் இலால்குடி முத்துச்செழியன், இளந்தாடி துரையரசன், மாவட்ட அமைப்பாளர் ஆரோக்கிய சாமி, கரூர் மாவட்டச் செயலாளர் காமராஜ், கரூர் மாவட்ட தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் மலைக்கொழுந்தன், குணராஜ், பழனி, பொன்னுச்சாமி, அசோக், தாமரைக்கண்ணன், ஜெகநாதன், திண்டுக்கல் இராவணன் உட்பட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர். இறுதியாக மாவட்ட இணைச் செயலாளர் புதியவன் அடுத்தகட்டப் போராட்டத்தை அறிவித்தார். உடனடியாக முனைவர் மணிமேகலையின் தற்காலிக நீக்க ஆணையை ரத்து செய்யாவிட்டால் வரும் பிப்ரவரி 28 ஆம் நாள் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் ஆயிரம் பெண்களுடனும் தோழர்களுடனும் பல்கலைக்கழகத்தை முற்றுகை யிடும் போராட்டம் நடைபெறும் என குழுமியிருந்த பெண்களின் பலத்த கரவொலிகளுக்கிடையே அறிவித்தார்.

## கடவுள் மறுப்பு சிந்தனைக்கு கோயில் கட்டலாமா?

கடவுள் - மதங்களை முற்றாக மறுக்கும் கோட்பாடு நாத்திகம். அது அறிவின் எல்லை. உலகம் முழுதும் கடவுள், மத நம்பிக்கைகளின் இறுக்கம் தளரத் தொடங்கி வருவதாகவே ஆய்வுகள் கூறுகின்றன. இந்த பின்னணியில் நாத்திக சிந்தனையை மறுப்புகளின் தொகுப்பாகவே மாற்றி விடாமல், ஆக்கத்தின் சிந்தனையாக மாற்றிட வேண்டும் என்ற சிந்தனை, கடவுள் மறுப்பாளர் களால் முன் வைக்கப்படுகிறது. அப்படி ஆக்கபூர்வ நாத்திக சிந்தனையை எப்படி முன்னெடுப்பது என்பதில் நாத்திக சிந்தனையாளர்களிடையே உரத்த விவாதங்கள் தொடங்கியுள்ளன. பிரிட்டனில் மிகவும் புகழ் பெற்ற நாத்திக சிந்தனையாளர்கள் அலெய்ன் டேபோட்டன் மற்றும் ரிச்சர்ட் டாக்கின்ஸ் ஆகியோர்.

லண்டனில் சர்ச்சுகள் அதிகம் நிறைந்த, பரபரப்பான நிதிப் பரிமாற்றங்கள் நடக்கும் ‘ஸ்கொயர் மைல் நகரம்’ எனுமிடத்தில் 1 மில்லியன் டாலர் செலவில் 151 அடி உயரத்தில் ‘நாத்திக கோபுரம்’ ஒன்றை அமைக்க திட்டமிட்டுள்ளார் அலெய்ன் டெ போட்டன். இதை நாத்திகர்களுக்கான கோயில் என்றே இவர் கூறுகிறார். இந்த கோபுரத்தில் 300 மில்லியன் ஆண்டுகளாக மனிதகுலம் கடந்து வந்த வரலாறு, அறிவியல் பார்வையில் விளக்கப்பட இருக்கிறது. நாத்திகர்களுக்கான நட்பு, அன்பு, அமைதி மற்றும் சிந்தனையின் வடிவமாக இதை அமைக்க விரும்புவதாகக் கூறும் போட்டன், இது நாத்திகத்தை மூர்க்கமான சிந்தனையாக்கிவிடாமல் தடுப்பதற்கான முயற்சி என்கிறார். தங்களை

6 ஆம் பக்கம்

**தலையங்கம்**

# வகுப்பறையில் வன்மம்!

சென்னையில் பள்ளி ஒன்றில் 9 ஆம் வகுப்பு மாணவன் வகுப்பறையில் மறைத்து வைத்திருந்த கத்தியால் பள்ளி ஆசிரியரை குத்திக் கொலை செய்த செய்தி, நாட்டில் அதிர்ச்சி அலைகளை உருவாக்கியிருக்கிறது. இது தொடர்பாக காட்சி ஊடகங்களும் அச்சுஊடகங்களும் விரிவான விவாதங்களை நடத்தி வருகின்றன. மாணவர்களை வன்முறைக்குத் தூண்டும் சமூகச் சூழல், அவர்கள் மீது திரைப்படங்கள், இணையதளங்கள் திணிக்கும் வன்முறை கலாச்சாரம், குடும்பங்களில் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்குமான இடைவெளி, மனப்பாடம் - மதிப்பெண் போட்டிகளை ஊக்குவிக்கும் கல்வி முறை, ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய அணுகுமுறைகள் என்று பல்வேறு தளங்களில் விவாதங்கள் நடந்து வருகின்றன. சமூகம் சார்ந்த இந்த விவாதங்கள் அனைத்தும் வரவேற்கப்பட வேண்டியவைதான். இப்படி ஏதேனும் கடுமையாக உணர்வுகளைப் பாதிக்கக்கூடிய நிகழ்வுகள் நேரும்போது மட்டும், இத்தகைய விவாதங்கள் தலைதூக்கி, பிறகு படிப்படியாக மறைந்து போய் விடுவது வாடிக்கையாகிவிட்டது என்பதே உண்மை.

முதலில் இப்படி ஒரு நிகழ்வை முன் வைத்து அதையே பொதுவான சமூகப் போக்கு என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது. இது, ஒரு 'தனித்துவமான' வழமைக்கு மாறான விரும்பத்தகாத, நடக்கக்கூடாத ஒரு செயல்பாடு என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். 9 ஆம் வகுப்பு மாணவர்கள் எல்லாம் மன அழுத்தத்திற்கு உள்ளாகும்போது கத்தியை கையில் எடுத்துவிடுவார்கள் என்ற முடிவுக்கு வந்து விடவும் கூடாது.

சோகமான - கொடூரமான முறையில் உயிரைப் பறி கொடுத்துவிட்ட ஆசிரியை, மாணவன் 'ஒழுங்காக' படிக்கவில்லை என்பதை மாணவனுக்கு தெரியும் வகையில் மாணவர் குறிப்பேட்டில் எட்டுமுறை பதிவு செய்து பெற்றோருக்கு தெரிவிக்க, அதுவரை ஆடம்பரமான வாழ்க்கை முறையில் சீராட்டப்பட்ட சிறுவனுக்கான வாய்ப்பு வசதிகளை மறுத்த பெற்றோர்கள், கண்டிக்கத் தொடங்கிய நிலையில் குடும்பம், பள்ளி இரண்டிலும் அவமதிப்புக்கு உள்ளான மன அழுத்தத்தில் பாதிக்கப்பட்டு விட்டான், இந்த சிறுவன். ஆசிரியை மரணமடைவார் என்றோ, தான் கைது செய்யப்படுவோம் என்றோ தமக்குத் தெரியவில்லை என்று மாணவன் போலீசாரிடம் கூறியதாக செய்திகள் வருகின்றன. '10 ஆம் வகுப்புக்கு தேர்வு ஆக மாட்டாய்' என்று ஆசிரியை கூறிய எதிர்மறையான கருத்து மாணவனை கடுமையாக பாதித்ததின் மோசமான விளைவாகவே இதை பார்க்க வேண்டியிருக்கிறது.

ஆண்டுக்கு குறைந்தது ரூ.10 லட்சம் ஊதியம், கார், சொகுசு வீடுகள் வசதியுடன் வாழ்வதற்கான கல்விப் போட்டிக்கான மைதானத்தில் மாணவர்கள் பெற்றோர்களால் களம் இறக்கப்படுகிறார்கள். வகுப்பறைகள் - மதிப்பெண்கள் - கிரேடுகளில் தான் மாணவர்களின் தகுதியை நிர்ணயிக்கின்றன. குழந்தைகள் - மாணவர்கள் மகிழ்ச்சியான மனநிலையில் பள்ளிக்குச் செல்லும் சமூகச் சூழல் இல்லாமலே போய்விட்டது. பள்ளி முடித்துவிட்டு வீடு திரும்பியவுடன் சீருடையை கழற்றாமலே தொலைக்காட்சியின் 'கார்ட்டூன்'களைப் பார்க்க 'ரிமோட்டை' கையில் எடுக்கும் குழந்தைகளைத்தான் பெரும்பான்மையான இல்லங்களில் காண முடிகிறது. குழந்தைகளின் மன அழுத்தத்தின் வெளிப்பாடாகவே இதைப் பார்க்க வேண்டும். விடுமுறைகளை விரும்பாமல், குழந்தைகள், மாணவர்கள் பள்ளிக்குப் போவதற்கு ஆர்வம் காட்டும் கல்வி, வகுப்பறைச் சூழல் உருவாகும்போதுதான் கல்வி அமைப்பு வெற்றிப் பெற்றதாகக் கருத முடியும்.

இந்த மாணவனுக்கு இந்திப் பாடம் வரவில்லை; அதில் அவன் பெற்ற மதிப்பெண் வெறும் சுழி; ஆசிரியை அதைத்தான் கண்டித்திருக்கிறார். அதே மாணவன் ஒரு இந்திப் படத்தை பலமுறை பார்த்து, அதில் கொலை செய்யப்படும் காட்சியை மனத்தில் பதியச் செய்திருக்கிறான். இந்திப் பாடம் கசக்கிறது, இந்திப் படம் இனிக்கிறது என்ற மனநிலையை இது காட்டுகிறது. கல்வி முறையில் மாற்றத்தின் தேவையையே இது உணர்த்துகிறது. அந்த ஒரு திரைப்படமே மாணவனை குற்றவாளியாக்கிவிட்டதாகக் கூற முடியாது. மாணவனின் குற்ற மன நிலைக்கு உவப்புடையதாக அத் திரைப்படக் காட்சி அமைந்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். அந்தப் படம் பார்த்த அனைவருமே கத்தியைத் தூக்கவில்லையே!

எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இதைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இளைய தலைமுறைக்கு எதிர்கால வாழ்க்கையை உறுதி செய்யும் கடமை பொறுப்புகளிலிருந்து அரசு முற்றாக தன்னை விடுவித்துக் கொண்டு, பொருளாதாரம் - அரசியல் - சமூகத்தை சந்தைப் பொருளாதார மைதானங்களில் தள்ளிவிட்டதுதான்!

பரம்பரை பரம்பரையாக பார்ப்பனியம் சமூகத்தில் திணித்து வைத்திருந்த குலத் தொழில்களை விட்டொழித்து, சமூக நீதி தளத்தில் காலூன்றி, முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கத் தொடங்கியுள்ள இரண்டாவது அல்லது மூன்றாவது தலைமுறையை சிதைத்து, சின்னாபின்னமாக்கி "முடிந்தால் போட்டியிட்டு வா" என்ற பார்ப்பனிய கொள்கையை பன்னாட்டு நிறுவனங்களுடன கை கோர்த்துக் கொண்டு இந்திய அரசு திணித்துவிட்டது. திசை தெரியாத இலக்குகளை நோக்கி நமது இளைய சமுதாயம் அல்லாடுகிறது. அமெரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் உலக வங்கியிலும் அதிகார மய்யங்களிலும் அமைச்சகத் துறைகளிலும் உட்கார்ந்துக் கொண்டு ஆணவத்தோடு இந்த சீரழிவுகளைப் பார்த்து "அவாள்கள்" குதூகலிக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இளைஞர்களுக்கு 'கடவுள் பக்தி' குறைந்ததுதான் இவற்றிற்கெல்லாம் காரணம் என்று 'தினமணி' பார்ப்பன ஏடு சந்தடி சாக்கில் தலையங்கம் தீட்டுகிறது. கடவுள் பக்தியின் மொத்த உருவமான சங்கராச்சாரியே கொலை வழக்கில் சிக்கி, நீதிமன்றத்துக்கு அலைந்து கொண்டிருப்பது 'தினமணி'க்கு தெரியாதா?

இன்றைய இளைஞர்களுக்குத் தேவை அறிவியல் சார்ந்த பொது ஒழுக்கம்; ஆர்வமுடன் தங்களைத் தாங்களே வடிவமைத்துக் கொள்ளத்தக்க கல்விமுறை. சக மனிதர்களின் கவலையில் பங்கேற்று, அவர்களுக்கு உதவக்கூடிய சமூகம் சார்ந்த கவலை உணர்வுகள், அதை வடிவமைக்கக் கூடிய கல்விமுறை, பொதிந்து கிடக்கும் ஆற்றல், திறமைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தக் கூடிய வகுப்பறைச் சூழல், பெற்றோர்கள் ஆசிரியர்களுடன் தோழமையுடன் உணர்வுகளையும் கருத்துகளையும் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புகள், இவைகளைப் பற்றித் தான் சிந்திக்க வேண்டுமே தவிர, கடவுள், புராணங்களின் மீது கவனத்தைத் திருப்பி மீண்டும் 'அக்கிரகார அடிமை யுகத்துக்கு' திருப்பிவிடத் துடிக்கக் கூடாது.

அனைவருக்கும் சம வாய்ப்புகளை வழங்க ஆட்சிகள் வராமல், வலுத்தவன் போட்டியிட்டு வெற்றிப் பெறட்டும் என்ற கொள்கைகளைப் பின்பற்றத் தொடங்கியதே அனைத்து சமூக முரண்பாடுகளுக்கும் குழப்பங்களுக்கும் அடிப்படையான காரணம். சமத்துவத்தை மறுத்து, சமூகத்தை ஏற்றத் தாழ்வு அடுக்குகளுக்குள் திணித்து, முடிந்தால் முன்னேறிப் பார் என்று சவால் விடும் பார்ப்பனிய கொள்கையே இன்றைய ஆட்சிகளின் கல்விக் கொள்கையாக பொருளாதாரக் கொள்கையாகியிருக்கிறது. அவை உருவாக்கும் சமூக முரண்பாடுகள், சீரழிவுகளின் தொடர்ச்சியாகவே கல்வி அமைப்பும் மாறி நிற்பதுதான், இந்த அவலங்களுக்குக் காரணம்.

# அறிவார்ந்த காதலை வரவேற்போம்

"ஒரு பெண்ணும் ஆணும் சேர்ந்து பழகி ஒருவரை யொருவர் அறிந்து கொண்ட பிறகுதான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். ஆண்களோடு சாதாரணமாகப் பெண்களைப் பழகச் சொல்ல வேண்டும். யோக்கியனா? கோபக்காரனா? பைத்தியக்காரனா? வேடக்காரனா? குடி காரனா? என்று பெண்ணுக்கு முன்னரே தெரிய வேண்டாமா?

பழகினால்தானே தெரியும்? திடீரெனறு ஒருவரை ஒருவர் முடிச்சுப் போடலாமா? அன்பு, குணம், பழக்க வழக்கம் இவைகள் உணர்ந்து ஒருவருக்கொருவர் நண்பர்களாகப் பழக வேண்டும். உடல் சேர்க்கை வேண்டும் என்று நான் கூறவில்லை. இதுதான் நான் சொல்லும் காதல் - ஆசை - இஷ்டம்."

**- பெரியார் ('விடுதலை' 24.5.1947)**

- விடலைப் பருவ உணர்ச்சிக் காதல் - வாழ்க்கைக்குப் பயன் சேர்க்காது.
- அறிவார்ந்த சாதிகளைக் கடந்த புரிந்துணர்வு காதலை வரவேற்போம்.
- அறிவியலுக்கு எதிரான 'சோதிடப் பொருத்தம்' வாழ்க்கைப் பயணத்தில் ஒற்றுமையை உருவாக்கி விடாது என்பதற்கு குடும்பநல நீதிமன்றங்களில் குவியும் விவாக ரத்து வழக்குகளே சான்று; அத்தனை திருமணங்களும் நாள் பார்த்து, சோதிடம் பார்த்து நடந்த திருமணங்கள் தானே?
- பழந்தமிழர் பண்பாடே காதல் வாழ்க்கை தான். ஒருவரை யொருவர் புரிந்த வாழ்க்கையே சிறப்பானது என்று, சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. "நீயும், நானும், உன் சுற்றமும், என் சுற்றமும் யார் என்றே தெரியாமல், அன்பினால் நாம் மண்ணில் நீர் கலப்பதுபோல் (செம்புலப் பெயனீர் போல) கலந்து விட்டோம்" என்று சங்க இலக்கியம் 'குறுந்தொகை' கூறுகிறது.
- அறிவார்ந்த - ஒருவரையொருவர் புரிந்து கொண்ட காதலை வரவேற்போம்; பெண் - ஆண் சமத்துவத்தை வளர்ப்போம்; சாதி - மூடநம்பிக்கைகளை தகர்ப்போம்.

**வாழ்க்கை இப்படி அமையட்டும்!**

"நடு நிசியில்
அழும் குழந்தைக்காக
அதட்டி..... அடித்து
எரிச்சலுடன் எழுப்பி விடாது
தொட்டிலைச் சற்று
இழுத்து விடுவாயா?

என்னை
நீயாக்காமல்
இருப்பாயா நீ?

.....................

நெகிழ்ந்து போகிறேன்
உன்னோடு பேசிக் கொண்டிருப்பதைவிட
உன்னைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதில்
இன்னும் கூடுதலாய்.

.........................

பாரதிதாசன்
பெண்களைக்
குடும்ப விளக்கென்று
சொன்னாலும்...... சொன்னார்
நம்மவர்கள்
எண்ணெய் ஊற்றி
எரித்தே விடுகிறார்கள்.

அடுக்களை நெருப்பில்
அன்றாடம் நின்றும்
நம் உணர்வுகள் இன்னும்
சூடேறவில்லையடி?

**- கவிஞர் இளம்பிறை**

# புதுவையில் சாதி மறுப்பு மண விழா

புதுவை அரியாங்குப்பம் 'தீர்க்க சுமங்கலி' திருமண நிலையத்தில் 22.1.2012 காலை 8 மணியளவில் டாக்டர் ம.பா. மதிவாணன், எம்.டி. (த.பாண்டுரங்கன்-பா.மல்லிகா இணையரின் மகன்) - டாக்டர் சு.சிவரஞ்சனி, எம்.எஸ்., (கே.சுப்ரமணியன் - சு.ஜெயா இணையரின் மகள்) ஆகியோர் சாதி மறுப்பு மணவிழா கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் சிறப்புடன் நடந்தது. புதுவை கழகத் தலைவர் லோகு. அய்யப்பன் வரவேற்றுப் பேசினார்.

# நீதி கேட்கும் 21 ஆண்டுகாலப் போராட்டம்!

***21 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டு தூக்குத் தண்டனையை எதிர்நோக்கியுள்ள பேரறிவாளன், முருகன், சாந்தனை நேரில் சந்தித்தார், இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டின் செய்தியாளர் கோபு மோகன். நீதி கேட்டு போராடி வரும் இந்த மூன்று தமிழர்களின் மன உணர்வுகளை நேர்மையாக மனித உரிமைப் பார்வையில் பதிவு செய்திருக்கிறார், செய்தியாளர். 'இந்தியன் எக்ஸ்பிரசின்' புதுடில்லி வாரப் பதிப்பில் (பிப்.12-18) வெளியான இந்தக் கட்டுரையின் தமிழாக்கம்.***


அந்த சிறை அதிகாரியின் சிறையில் ஒருவர் பின் ஒருவராக வரிசையில் நிற்கிறார்கள். அதிகாரிகள் கேட்கும் கேள்விகளுக்கு விடை தருகிறார்கள். பிறகு அவர்களுக்கு உடல் அடையாளங்கள் பரிசோதிக்கப் படுகின்றன. சில படிவங்களில் கைரேகையை பதிவு செய்கிறார்கள். சிறைக் கதவு திறக்கப்படுகிறது. அவர்கள் இப்போது சுதந்திரமாக வெளியே போகலாம். இந்தக் காட்சிகளை ஒவ்வொரு நாளும் அதே அறையில் எங்கள் முன்னால் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கும் இந்த இளைஞன், இப்படி சுதந்திரமாக விடுதலைப் பெற்று வெளியேறுவோரை பார்த்துக் கொண்டே இருக்கிறார். அவரது மனநிலை எப்படி இருக்கும் என்பதை நாம் உணர முடிகிறது. அதைப் புரிந்து கொள்வது ஒன்றும் அவ்வளவு கடினமானது அல்ல. சிறையிலிருந்து விடுதலைப் பெற்று வெளியில் வாழக்கூடிய வாழ்க்கையின் உன்னதங்களையும் மதிப்புகளையும் உணரக்கூடிய ஒருவர் இருக்கிறார் என்றால், வேறு எவருமல்ல; அது ஏ.ஜி. பேரறிவாளன்தான். அந்த இளைஞர் 21 ஆண்டுகாலமாக சிறைக் கதவுகளுக்குள் கழித்திருக்கிறார். வெளியில் சுதந்திர மனிதனாக வாழ்ந்த காலத்தைவிட இரண்டு மடங்கு காலம், கூடுதலாக அவரது வாழ்க்கை சிறையில் கடந்திருக்கிறது.

பலருக்கும் சுதந்திரம் என்பது ஒரு கருத்தியல் தான். அவர்களின் புரிதல், அந்த எல்லையோடு முடிந்துவிடும். ஆனால், அந்த சுதந்திரத்தை இழக்கும்போதுதான், அதன் மேன்மை புரிய வரும். அதை எந்த தருணத்திலும் இழந்துவிடவே முடியாது என்பதை உணர முடியும். அதே போன்றதுதான் உண்மை. நீதி என்பவையும். 1991 மே 21 ஆம் தேதி ராஜீவ் காந்தி, குண்டு வெடிப்பில் உயிரிழந்ததைத் தொடர்ந்து, நடத்தப்பட்ட தீவிர தேடுதல் வேட்டையில் கைது செய்யப்பட்டவர் பேரறிவாளன். இந்த கொலை சதியில் அவருக்கு தொடர்பு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டது. இதில் அவருக்கு கிடைத்தது மரண தண்டனை. இந்த வழக்கு விசாரணையில் முதன்மையாக பலியிடப்பட்டது, 'உண்மை'தான், என்கிறார் பேரறிவாளன். இந்த வழக்கில் என்னதான் நடந்தது? தொடக்கத்திலிருந்தே உண்மைகளை மனம் திறக்க விரும்பினார், அவர்.

அனைவராலும் 'அறிவு' என்று அழைக்கப்படும் அந்த இளைஞனை மத்திய சிறப்பு புலனாய்வுத் துறையினர் கைது செய்தபோது, அடுத்த இரண்டு மாதங்களில் அவர் 20 வயதை எட்டுவதற்கு இருந்தவர். ஜூன் 10 ஆம் தேதி நள்ளிரவில் ஜோலார்பேட்டையில் உள்ள அவரது இல்லத்துக்கு அவரைத் தேடி, புலனாய்வுத் துறையினர் வந்தனர். அடுத்த நாள் காலை அவரது தந்தை டி.ஞானசேகரன் (குயில்தாசன்), தாயார் கே. அற்புதம், மகன் அறிவு இருந்த சென்னைக்கு புறப்பட்டார்கள். திராவிட கட்சிகளின் தாய்க் கழகமான திராவிடர் கழகத்தின் தலைமையகமான பெரியார் திடலில் அறிவை சிறப்புப் புலனாய்வுத் துறையினரிடம், அவரது பெற்றோர்கள் ஒப்படைத்தனர்.

"ஈழத் தமிழர்களின் போராட்டத்தில் பங்கேற்றவர்கள், ஆதரவு தெரிவித்தவர்கள், ஏன், அனுதாபிகள் கூட எல்லோரையும் ஏதோ விசாரிக்கப் போகிறார்கள்; அவர்களுக்கு இதுபற்றி தகவல்கள் தேவைப்படுகிறது போலும்; அடுத்த நாளே எங்களை விடுவித்து விடுவார்கள் என்றுதான் நாங்கள் நம்பினோம்" என்றார் அறிவு. அப்படி 21 ஆண்டுகளுக்கு முன், அவர் கைது செய்யப்பட்ட நாள் ஒரு செவ்வாய்க்கிழமை.

இப்போது, பல சிறை மாற்றங்களுக்குப் பிறகு அவர் 12 ஆண்டுகளாக வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். வேலூரிலிருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில்தான் அவரது சொந்த வீடு இருக்கிறது. பூட்டப்பட்ட கொட்டடியில் இருக்கும் அவரால் குறுகிய தூரத்திலுள்ள அவரது வீட்டை தனது கற்பனைகளில், எண்ணங்களில்தான் சென்றடைய முடியும். ஆனால், அவரது தாயார் அற்புதத்துக்கு, அப்படி இல்லை. அறிவு கைது செய்யப்பட்ட மூன்றாம் நாளிலிருந்து அவரது பயணமும், அலைச்சலும் தொடங்கியது. 20 ஆண்டுகளாகவே, அவர் அலைந்து கொண்டே இருக்கிறார். சிறையில் அடைபட்டவர்களின் நிலை என்னவாகுமோ என்ற சிந்தனை உலகின் பார்வையில் படிப்படியாக மங்கிப் போன நிலையிலும், அற்புதம் அம்மாளின் பயணம் மட்டும், தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அவருக்கு இப்போது வயது 65. சிறைகள், நீதிமன்றங்கள், அரசியல் தலைவர்களின் வீடுகள், தூக்குத்தண்டனைக்கு எதிராக ஆதரவாளர்கள் நடத்தும் பொதுக் கூட்டங்கள், போராட்டங்கள், பத்திரிகையாளர் சந்திப்புகள், குடியரசுத் தலைவருக்கு தனது நியாயங்களை விளக்கி வேண்டுகோள் மடலாக, பேரறிவாளன் எழுதிய நூல் அறிமுக நிகழ்ச்சிகள் என்று அவர் அலைந்து



கொண்டும், ஓடிக் கொண்டும் இருக்கிறார். அவரது உணர்வுகளும், உறுதி தளராமையும் விவரிக்க முடியாத அளவுக்கு ஆழமானது. அவரது மகனுக்கு ஈடு இணையற்ற ஒரே சக்தி, அற்புதம் அம்மாள் மட்டுமே! ஒவ்வொரு வியாழக்கிழமையும் சிறையை நோக்கிய அவரது பயணம் தொடங்கிவிடும். அவரது தோள் பையில் அண்மையில் வெளிவந்த ஆங்கில, தமிழ் பத்திரிகைகளை அறிவுக்காக சுமந்து செல்வார். சந்தித்துத் திரும்பி வரும்போது அறிவு படித்துவிட்டு, அடையாளக் குறியிட்ட செய்திகள், வழக்கு தொடர்பான செய்திக் குறிப்புகள், மரண தண்டனைக்கு எதிரான செய்திகள் - அத்தனையும் எடுத்து வருவார். அவைகளை வெட்டி, ஒட்டி ஆவணப்படுத்த வேண்டும்.

ஒரு செவ்வாய்கிழமையில் நாம் அறிவை சந்தித்தோம். பார்வையாளர்கள் வாரம் இரு முறை சந்திப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நாளில் - அது ஒன்று. அன்று தான், குடும்ப உறுப்பினர்கள் அல்லாத தோழர்களை, ஆதரவாளர்களை, தமிழ் உணர்வாளர்களை சந்தித்துப் பேசுகிறார். ஒவ்வொரு சந்திப்பிலும் புதியவர்கள் வருகிறார்கள். தன்னுடைய கடந்தகால கதையையும், எதிர்காலத்தையும் அறியவே அவர்கள் வருகிறார்கள் என்பது அறிவுக்கு தெரியும். தூக்கு தண்டனை நீங்கி, விடுதலையாகி வெளியே வந்தால், என்ன செய்யத் திட்டம் என்ற கேள்வியை பலரும் அவரிடம் கேட்கிறார்கள். இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் பல நூறு முறை அறிவு பதில் தந்தாகி விட்டது. ஆனாலும், சலிப்படையாமல் தனது கருத்துகளையும், விளக்கங்களையும் முறையாக ஒழுங்குபடுத்தி, கோர்வையாக தொடர்ச்சிக் குன்றாமல் எடுத்துரைக்கிறார்.

'ராஜீவ் கொலையாளி' என்று தன்னை அழைப்பதை அவர் முற்றாக வெறுக்கிறார். தன்னை சந்திப்பவர்களிடம் தன் மீது புனையப்பட்டது பொய்யான வழக்கு என்பதற்கான காரணங்களை, தேதி வாரியாகவும், சட்டப் பிரிவுகள், பல்வேறு நீதிமன்றத் தீர்ப்புகளை மேற்கோள் காட்டியும் விரிவாகப் பேசுகிறார். அவர் கோருவது எல்லாம் நீதியைத்தான்; கருணையை அல்ல.

இத்தனைக்கும் இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் பட்டியலில் அவர் குறியிடப்பட்டது 18வது இடத்தில்தான். ஆனாலும்கூட மின்னணு மற்றும் தகவல் தொடர்புத் துறையில் அவர் பெற்றிருந்த டிப்ளோமா பட்டம்தான், அவரைக் கடுமையான குற்றவாளியாக மாற்றிவிட்டது. கைது செய்யப்பட்ட பலரில் ஓரளவு மின்னணு தொடர்பான தகவல் தெரிந்த ஒரு சிலரில் அறிவும் ஒருவர். மூத்த புலனாய்வு அதிகாரி இராதா வினோத் ராஜீ (அப்போது டி.அய்.ஜி. நிலையில் இருந்தவர்; அதன் பிறகு, தேசிய புலனாய்வு நிறுவனத்தின் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார்), அறிவிடம் கேட்ட முதல் கேள்வியே, "நீதான் வெடிகுண்டை தயாரித்தாயா?" என்பதுதான்.

"நான் படித்த மின்னணு கல்வி, எனக்குப் பயன்பட்டதோ இல்லையோ, இந்த வழக்கில், என் மீது பொய்யாகக் குற்றம்சாட்டி, என்னை தூக்குக் கொட்டிலுக்கு இழுத்துக் கொண்டுவர, இந்தக் கல்வி உறுதியாகப் பயன்பட்டிருக்கிறது" என்றார் பேரறிவாளன். குடியரசுத் தலைவருக்கு அவர் எழுதிய மடலிலும், இதைப் பதிவு செய்திருக்கிறார். "வெடிகுண்டை தயாரித்தவன்" என்ற பெயர் சூட்டி, ஊடகங்கள் முழுதும் பரப்பினார்கள். ஆனால், கைது செய்யப்பட்ட 26 பேர் மீதும், 1908 ஆம் ஆண்டு வெடிபொருள் சட்டத்தின் 3, 4 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டாலும், குற்றப் பத்திரிகையில் வெடிகுண்டை தயாரித்தவன் என்ற குற்றச்சாட்டு என் மீது இடம் பெறவில்லை. சிறப்புப் புலனாய்வுக் குழுவின் முதன்மை விசாரணை அதிகாரியான கே. இரகோத்தமன், பின்னாளில் ஒரு உண்மையை ஒப்புக் கொண்டார். வெடிகுண்டை தயாரித்தது யார் என்ற புதிருக்கு இறுதிவரை விடை கிடைக்கவில்லை என்றார் இரகோத்தமன். அதற்கு பதிலாக வெடிகுண்டை வெடிக்கச் செய்வதற்கான 9 வோல்ட் பேட்டரியையும், 'ஒயர்லெஸ்' கருவியை இயக்குவதற்கான கார் பேட்டரியையும் வாங்கித் தந்ததாக அறிவு மீது குற்றம்சாட்டப்பட்டது.

20 ஆண்டு காலம் சிறையில் ஓடிவிட்டது. உச்சநீதி மன்றம் தூக்குத் தண்டனையை உறுதி செய்து 12 ஆண்டுகள் கடந்து விட்டன. இந்த வழக்கில் கவலை கொண்ட ஒவ்வொருவருமே தீர்ப்பின் ஓட்டைகளை சுட்டிக் காட்டுகிறார்கள். இவ்வளவுக்குப் பிறகும் சந்திப்பு அறையில் தூய்மையான வெள்ளை டி சர்ட், கால்சட்டையுடன் அமர்ந்து பேசும் அறிவு, உணர்ச்சிகளுக்கு இடம் தராமல், அறிவார்ந்த வாதங்களையே முன் வைத்துப் பேசுகிறார்.

4 ஆம் பக்கம்

## பேரறிவாளன் எழுப்பும் கேள்வி

1987 ஆம் ஆண்டில் தடா சட்டத்தின் கீழ் இந்த வழக்கு நடத்தப்பட்டதாலேயே நான் குற்றக் கூண்டில் நிறுத்தப்பட்டேன் என்றார் அறிவு. காவலில் விசாரணை கைதி தரும் ஒப்புதல் வாக்குமூலத்தை அவருக்கு எதிராக நீதிமன்றம் பயன்படுத்தக் கூடாது என்று 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிகள் சட்டம் கூறுகிறது. ஆனால் தடா சட்டமோ, காவலில் பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்கலாம் என்று கூறுகிறது. தடா சட்டத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்தான் தன்னை குற்றமற்றவர் என்று நிரூபித்துக் கொள்ள வேண்டும். 60 நாட்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் என்று தடா சட்டம் கூறுகிறது. எனவே 59வது நாள் கடும் சித்திரவதைகளுக்குப் பிறகு, பேரறிவாளனின் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது.

இந்த வழக்கு பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் வராது என்பதால், தடா சட்டம் பொருந்தாது என்று உச்சநீதிமன்ற நீதிபதி டி.பி.வாத்வா தனது தீர்ப்பில் கூறினார். ஆனால், 'தடா' சட்டத்தின் கீழ் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டு தண்டனையை உறுதி செய்துவிட்டது.

இந்த கொலை சதி பற்றி சிவராசன், தனு, சுபா மூவருக்கு மட்டுமே தெரியும் என்று சி.பி.அய். தரப்பில் சான்றாதாரமாக முன் வைக்கப்பட்ட ஆவணம் கூறியது. அதற்கு நேர் மாறாக இந்த சதியில் எனக்குப் பங்கு உண்டு என்று தண்டனை வழங்கிவிட்டார்கள். நான் வாங்கியதாக குற்றம்சாட்டப்பட்ட 9 வால்ட் பேட்டரி எல்லா கடைகளிலும் விற்கப்படுவதுதான்; எவருமே வாங்க முடியும்" - என்று தனது தரப்பின் நியாயங்களை விளக்கினார் 'அறிவு'.

**'இந்தியன் எக்ஸ்பிரஸ்'**

# பெரியார் இயக்கத்தின் வெற்றி

# சாதி – மத மறுப்பு திருமணங்கள் அதிகரிப்பு

தமிழ்நாட்டில் சாதி-மத மறுப்புத் திருமணங்கள் அதிகரித்து வருகின்றன. அகமண முறையில் இறுக்கமாக நிலவி வரும் சாதி அமைப்பு, மெல்ல மெல்ல உடைபடத் தொடங்கிவிட்டதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. பெரியார் இயக்கம் தொடங்கி வைத்த சாதி எதிர்ப்பு மற்றும் கல்வி உரிமைப் போராட்டங்களுக்கு கிடைத்த வெற்றியாகவே இதை கருத வேண்டும். நகர்ப்புறத்தில் குறிப்பாக சென்னையில் சாதி-மத மறுப்பு திருமணங்கள் அதிகரித்துள்ளன. வேகமாக மாறி வரும் இந்த சமூகப் போக்கு சமூக செயல்பாட்டாளர்களிடையே வியப்பையும் மகிழ்ச்சியையும் உருவாக்கி யிருக்கிறது என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு (பிப்.14) எழுதியுள்ளது. அந்நாளேடு வெளியிட்டுள்ள செய்தி:

2010-2011 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 77,000 திருமணங்கள் இந்து திருமணச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதாக திருமணப் பதிவு அலுவலக தகவல் தெரிவிக்கிறது. இதில் சிறப்புதிருமணப் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் 7,601. மதம் கடந்து நடக்கும் திருமணங்களே இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. மொத்த திருமணப் பதிவுகளில் 10 சதவீதம் மதம் கடந்த திருமணங்களாக நடந்துள்ளன. 2009 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியில் கட்டாய திருமணப் பதிவு சட்டம் கொண்டு வரப்பட்டது. பல சாதி மறுப்புத் திருமணங்கள் இந்த சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. இந்து திருமண சட்டத்தின் கீழும், சாதி மறுப்பு திருமணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களில் சாதி குறித்து பலரும் குறிப்பிடாத நிலையில் சாதி மறுப்பு திருமணங்கள் பற்றிய சரியான புள்ளி விவரங்கள் கிடைக்கவில்லை என்றாலும் ஒவ்வொரு ஆண்டும் சாதி மறுப்புத் திருமணங்கள் அதிகரித்து வருவது உண்மை என்கிறார், ஒரு மூத்த அதிகாரி. 2011-12 இல் முதல் 3 மாதங்களில் பதிவு செய்யப்பட்ட மதம் கடந்த திருமணங்கள் 2969. அதற்கு முந்தைய ஆண்டு அதே காலகட்டத்தில் நிகழ்ந்த மத மறுப்பு திருமணங்களைவிட இது இரண்டு மடங்கு அதிகமாகும்.

சென்னையில் 20-11-2012 இல் இந்து திருமண சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் 52,303.

இதில் மதம் கடந்து சிறப்பு திருமணப் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவை 5716.

சென்னையில் தமிழ்நாடு கட்டாய திருமண பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் 30,141.

முதல் 3 மாதங்களில் இந்து திருமண சட்டததின் கீழ் பதிவு செய்யப்பட்ட திருமணங்கள் 24,351. இதில் மதங்களைக் கடந்த சிறப்பு திருமண சட்டத்தின் கீழ் பதிவானவை 2949.

தமிழ்நாடு கட்டாய திருமண சட்டத்தின் கீழ் பதிவானவை 14,557.

இவை சென்னையைத்தழுவிய புள்ளி விவரங்கள்.

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

பார்வையாளர்களை சந்திக்காத நாட்களில் சிறைக்குள் உள்ள பள்ளிகளிலும், படிப்பிலும் அவர் கவனம் செலுத்துகிறார். ஒவ்வொரு காலைப் பொழுதிலும் தனது சக தோழர்களுடன் கூடைப் பந்து, கைப் பந்து விளையாடுகிறார். “நான் செய்யாத ஒரு குற்றத்துக்காக பொய் வழக்குகளை எதிர் கொண்டு தூக்குத் தண்டனைக்கு உள்ளாகிய சூழலில், சோர்வும், அயர்வும் என்னைச் சூழ்ந்து மனம் உடைந்தேன். பிறகு இவற்றிலிருந்து விடுபட வேண்டி முக்கியத்துவத்தை, படிப்படியாக உணர்ந்து வழக்கை எதிர்த்துப் போராடும் மனநிலைக்கு தயாரானேன். சிறைக்குள்ளேயே நான் படித்து பி.சி.ஏ. மற்றும் எம்.சி.ஏ. பட்டங்களையும், 6 பட்டயப் பயிற்சிகளையும் முடித்தேன். இப்போது ‘எம்.பில்.’ ஆய்வுக்கு பதிவு செய்ய எண்ணியுள்ளேன்” - என் கிறார் அறிவு. இளம் வயதில், அவரிடம் ஒரு கிட்டார் இசைக் கருவி இருந்தது. ஆனால், அதை வாசிக்கும் பயிற்சி எடுப்பதற்கு நேரம் இல்லை. இப்போது சிறையில் வாசிக்கப் பழகிக் கொண்டார். சிறையில் உருவான இசைக் குழுவில் அறிவு தான் கிட்டாரை மீட்டும் கலைஞன். கடந்த கிறிஸ்துமஸ் விழாவில் இந்த இசைக்குழு நிகழ்ச்சியை சிறைக்குள் நடத்தியது.

சிறைக்குள் இருக்கும் சக தோழர்களை படிப் பதற்கு அறிவு ஊக்கப்படுத்துகிறார். சிறைக்கம்பி களுக்குள் வாழும் காலத்தை வீணடிக்கக்கூடாது என்று வலியுறுத்துகிறார். சிறைக்குள்ளே செயல் படும் ஒரு பள்ளிக்கு, அறிவுதான் ஆசிரியர்களில் ஒருவர். சிலர் அவரை ‘கல்வி அமைச்சர்’ என்று அழைக்கிறார்கள். இப்படி ஆசிரியராக வேண்டும் என்ற ஆர்வத்துக்கு அவரது தந்தை காரணமாக இருக்கலாம். அறிவின் தந்தை ஒரு பள்ளி ஆசிரியர். தமிழ் ஆர்வலர்; இலக்கிய வட்டத்தில் அவரது பெயர் குயில்தாசன். திராவிடர் கழகத்தை நிறுவிய பெரியார் ஈ.வெ.ராமசாமியின் தீவிரமான தொண்டர். அதனால்தான் தனது ஒரே மகனுக்கு பழந்தமிழ் இலக்கியமான திருக்குறளிலிருந்து பேரறிவாளன் என்று பெயரைத் தேர்வு செய்தார். சிறைக்குள்ளே எல்லோருமே அறிவின் கருத்துகளை ஏற்றுக் கொண்டவர்களாகக் கூற முடியாது. ஆனால் அறிவு எடுத்துரைக்கும் கருத்துகளை ஆர்வத்துடன் செவி மெடுக்கிறார்கள். சிறை ஊழியர்கள், அதிகாரிகள், அறிவிடம் மென்மையாகவே நடந்து கொள் கிறார்கள். சில நேரங்களில் மரியாதையை வெளிப்படுத்துகிறார்கள்.

சிறிது நேரத்துக்குப் பிறகுதான் அந்த அறையில் இருந்த மற்ற இருவரை நாம் கவனிக்க நேர்ந்தது. ஒருவர் வெள்ளை கால் சட்டையிலும், மற்றவர் வெள்ளை வேட்டியிலும் இருந்தார். அவர்கள் சிறீதரன் என்ற முருகன் மற்றும் சாந்தன். இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர்கள். மூவருமே தூக்குத் தண்டனையை எதிர் நோக்கியிருப்பவர்கள். அறிவைப் போலவே இவர்களும் தங்கள் எதிர்காலத்துக்காக காத்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள், இலங்கைத் தமிழர்கள்; வேறு நாட்டுக் காரர்கள் என்று வண்ணம் பூசப்பட்டு, அதே கண்ணோட்டத்துடன் சிலரால் பார்க்கப்படு கிறார்கள். (இப்படி ஈழத் தமிழர்களை வேறுபடுத்திப் பார்ப்பது குறித்து அறிவு தனது நூலில் எழுதி யிருக்கிறார். விசாரணையில் இருந்த காலத்தில் ஒரு ஆய்வாளர், அறிவின் கன்னத்தில் அடித்து, ‘ஏனடா, என்ன துணிவு இருந்தால், கடல் கடந்து எங்கள் நாட்டுக்குள் வந்து, எங்கள் தலைவரை கொலை செய்வாய்?’ என்று அறிவை ஈழத் தமிழர் என்று நினைத்து கூச்சல் போட்டிருக்கிறார். அந்த ஆய்வாளர் பெயர் மோகன்ராஜ். சில மாதங்களுக்கு முன் ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஏட்டுக்காக, அவரிடம் பேசினோம். அப்போது, இந்த சம்பவம் குறித்து கேட்டபோது, தனக்கு நினைவில்லை என்று கூறினார். 20 ஆண்டு காலத்துக்குப் பிறகு கடந்த ஆண்டு ஆகஸ்டு 18 ஆம் தேதி ஆய்வாளர் மோகன்ராஜ், வேலூர் சிறைக்குச் சென்று மூன்று பேரையும் சந்தித்து ஆறுதல் கூறினார். அப்போது, “நான் தூக்குத் தண்டனைக்கு எதிரானவன் அல்ல. ஆனால், இந்த வழக்கில், இம் மூவரைப் பொறுத்த வரை, இவர்கள் சதியில் தொடர்பில்லாதவர்கள் என்று எந்த நீதிமன்றத்திலும் வந்து கூறத் தயாராக இருக்கிறேன்” என்று கூறியுள்ளார். இதை ‘இந்தியன் எக்ஸ்பிரசிடம்’ அவர் தெரிவித்தார்.)

வழக்கில், 2 மற்றும் 3வது குற்றவாளியாக்கப்பட்ட சாந்தன், முருகன் இருவருமே ஆன்மிகப் பாதைக்கு திரும்பிவிட்டனர். சிறையிலுள்ள கோயிலுக்கு சாந்தன்தான் பொறுப்பு. சபரிமலை போகும் காலங்களில் இருவருமே விரதம் இருக்கிறார்கள். முருகனின் மனைவி நளினி இந்த வழக்கில் முதல் குற்றவாளியாக்கப்பட்டவர். அவரது தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டு விட்டது. முருகனின் கவலை எல்லாம் அவரது மகள் அரித்திரா எனும் மேகராவைப் பற்றித்தான். தப்பிக்க இப்போது முயற்சித்த காலத்தில், இவர்கள் திருமணம் செய்து கொண்டவர்கள். மகள் சிறைச் சாலைக்குள் பிறந்தவர். அரித்திரா அய்ரோப்பிய நாடு ஒன்றில் படிக்கிறார். “பெற்றோர்கள் ஆதர வின்றியே அவர் வளர வேண்டியவராகிவிட்டாரே என்பதே என் கவலை. மனம் தளர வேண்டாம் என்று நான் அவரிடம் கூறி வருகிறேன். “வாழ்க்கை சோதனையில் நாங்கள் தோற்றுவிட்டோம் அந்த நிலை என் மகளுக்கு நேரிடக் கூடாது” என்று கவலையை வெளிப்படுத்துகிறார் முருகன். விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவைச் சார்ந்தவர் என்பதும் இவர் மீதான குற்றச்சாட்டு. இதுவரை இருமுறை இவரை மகள் சந்தித்திருக்கிறார். இறுதியாக சந்தித்தது 2006 ஆம் ஆண்டில்தான்.

தூக்குக் கொட்டடியில் இருக்கும் இவர்களுக்கு ஆதரவாக பலரின் குரல் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. இந்த வழக்கை தலைமையேற்று விசாரித்து, சிறப்புப் புலனாய்வுக்குழுவின் தலைவராக செயல்பட்ட டி.ஆர். கார்த்திகேயன், உச்சநீதிமன்றத்தில் தூக்குத் தண்டனையை உறுதி செய்த நீதிபதிகளில் ஒருவரான கே.டி.தாமஸ் (ஆனால், நளினியின் தூக்குத் தண்டனைக்கு எதிராக தீர்ப்பு எழுதியவர்) ஆகியோர் இவர்களுக்கு தூக்குத் தண்டனை வேண்டாம் என்று கூறுகிறார்கள். உச்சநீதிமன்ற நீதிபதி முன்னாள் கேரள சட்ட அமைச்சர் வி.ஆர். கிருஷ்ணய்யர், பிரபல வழக்கறிஞர் ராம் ஜெத்மாலனி மற்றும் கோலின் கோன்சால்வஸ் உள்ளிட்ட பலரும் இவர்களுக்காக வாதாடி தூக்குத் தண்டனையை எதிர்த்து வருகிறார்கள். சந்திப்புக்கான நேரம் முடிவுக்கு வந்தது. பேரறிவாளன், சாந்தன், முருகன் மூவரும் நம்பிக்கையுடன் விடை பெற்றபோது கூறியது இதுதான் -

“சிறைக்கு வெளியே மீண்டும் சந்திப்போம்”.

**– தமிழில் ‘இரா’**

## “பேய்” புரளிக்கு ப.குமாரபாளையத்தில் கழகத் தோழர்கள் தந்த பதிலடி

சில தொலைக்காட்சிகள் முன் ஜென்மம் ஒன்று இருப்பதாகவும் பேய்கள் நடமாடுவதாகவும் விஞ்ஞானத்துக்கு எதிரான மூடநம்பிக்கைகளை பரப்பும் முயற்சியில் வெட்கமின்றி மனித விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. ‘விஜய்’ தொலைக்காட்சி இதில் இப்போது முன்னிலையில் உள்ளது. நாமக்கல் வட்டத்திலுள்ள ப. குமாரபாளையத்துக்கு விஜய் தொலைக்காட்சிக் குழு வந்து ‘பேய்’களைப் படம் பிடிப்பதாக ஊரில் செய்திகளைப் பரப்பியது. பயந்து போன பொது மக்கள் பேய் நடமாட்டம் இருப்பதாக நம்பிக் கொண்டு கடந்த பிப்ரவரி 1 ஆம் தேதி முதல் 4 ஆம் தேதி வரை அஞ்சி நடுங்கி வீட்டிலேயே பதுங்கி இருந்தனர். மரத்தில் இருந்த பேயை விஜய் தொலைக்காட்சிக் குழு படம் பிடித்துச் சென்றதாக வதந்தி பரவியது. இதை சவாலாக ஏற்று பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் களத்தில் இறங்கினர்.

‘பேய்’ மூடநம்பிக்கைகளை நம்ப வேண்டாம் என்று மக்களிடம் எடுத்துக் கூறி விளக்கினர். ஒரு அலைபேசி காமிரா வழியாக அங்குள்ள சில பெண்களை படம்பிடித்து பிறகு அந்தப் பெண்களோடு ‘பேய்’ உருவம் இருப்பதுபோல காட்டினர். பிறகு அந்த பேய் உருவ பொம்மைகள் இணையதளம் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்டு, அலைபேசி காமிராவில் படம் பிடித்துப் பெண்களோடு இணைக்கப்பட்டதையும் செய்து காட்டி தொலைக்காட்சிகள் இப்படித்தான் ஏமாற்றுகின்றன என்பதை விளக்கினர். உண்மையில் ‘பேய்’ இருப்பதாக எவராவது நிரூபித்தால் ஒரு லட்சம் ரூபாய் பரிசு தருவதாகவும் அறிவித்தனர். அதற்குப் பிறகுதான் மக்களிடம் அச்சம் நீங்கியது. இது காமிராவைக் கொண்டு, இணையதளத்திலிருந்து எடுக்கப்பட்ட படங்களால் நடததப்பட்ட விளையாட்டு என்பதை மக்கள் புரிந்து கொண்டனர்.

தோழர்கள் கேப்டன் அண்ணாதுரை, மாதுராஜ், தண்டபாணி, மாதேசுவரன், பகலவன், மு. சாமிநாதன், வெங்கிடு (நாம் தமிழர்) ஆகியோர் இந்த பகுத்தறிவுப் பணியை செய்தனர்.

## பசு மாட்டுக்கும் சமஸ்கிருதத்துக்கும் பல கோடி ரூபாய் பாழடிப்பு

# பாஜக ஆளும் மாநிலங்களில் பார்ப்பனிய ஆட்சி

***பா**ர்ப்பன இந்துத்துவ சக்திகள் ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி, பல்வேறு மாநிலங்களில் பார்ப்பனியப் பண்பாட்டை சட்டங்களால் திணித்து மீண்டும் 'ராமராஜ்யத்தை' உருவாக்க முயன்று வரும் அதிர்ச்சியான தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் சிறப்பாக நிர்வாகம் நடக்கிறது என்றும், வளர்ச்சிப் பாதையில் நடை போட்டு வருகின்றன என்றும் 'துக்ளக்' போன்ற பார்ப்பன ஏடுகள், பரப்புரை செய்து வருகின்றன. ஆனால் இங்கே என்ன நடக்கிறது?*

நித்தின் கட்காரி என்ற ஆர்.எஸ்.எஸ்.காரர் - பா.ஜ.க.வின் தலைவரான பிறகு ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வை தனது கட்டுப்பாட்டுக்குள் முழுமையாகக் கொண்டுவந்துவிட்டது. இதற்காக ஆர்.எஸ்.எஸ். நடத்தும் பல்வேறு 'சங் பரிவாரங்களின்' பிரதிநிதிகளும் பா.ஜ.க.வினரும் அவ்வப்போது கூடிப் பேசும் நிகழ்வுகள் திட்டமிடப்பட்டு நடத்தப்படுகின்றன. 'சமன்வயா பைதாக்' (இணைந்து நிற்போம்) என்ற பெயரில் நடக்கும் இந்த கூட்டங்களில் பா.ஜ.க. ஆட்சியில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆக.2011 இல் உஜ்ஜயின் நகரில் நடந்த இந்த 'இணைப்பு' கூட்டத்தில் ஒரு முக்கிய சூழ்ச்சிகரமான முடிவு எடுக்கப்பட்டது. அதாவது, பா.ஜ.க.வின் தேசிய தலைமை அன்னா அசாரே, ராம்தேவ் போன்றவர்களுடன் இணைந்து ஊழல் எதிர்ப்பு பற்றி பேசிக் கொண்டே, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் மதவெறி சட்டங்களை தீவிரமாகக் கொண்டு வந்துவிட வேண்டும் என்றும், இதனால் ஊடகங்கள் மக்களின் கவனம், ஊழல் எதிர்ப்பில் மட்டும் திருப்பி விடப்படுவதால், 'இந்துத்துவ' சட்டங்களை கவனக் குவிப்பு இல்லாமல், அமுல்படுத்தி விட முடியும் என்றும் முடிவு செய்துள்ளனர். இந்த செயல்முறை வேகமாக அரங்கேறி வருகிறது.

ம.பி.யில் சிவராஜ் சிங் சவுகான் தலைமையில் நடக்கும் பா.ஜ.க. ஆட்சி, 2004 ஆம் ஆண்டு முதல் அங்கே அமுலில் உள்ள 'பசுவதை தடுப்புச் சட்ட'த்தில் கடுமையான திருத்தங்களைச் செய்துள்ளது. இதன்படி மாட்டுக் கறி சாப்பிடுவதே குற்றமாக அறிவிக்கப்பட்டுள்ளது. பசு மாட்டை வெட்டுவதாக புகார் வந்தால், 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை என்று சட்டத் திருத்தம் கூறுகிறது.

தடா, பொடா போன்ற காட்டுமிராண்டி சட்டங்களைப்போல் குற்றம்சாட்டப்பட்டவர்தான் தன்னை குற்றவாளியல்ல என்று நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்று இந்தச் சட்டம் கூறுகிறது. ஒரு தலைமை போலீஸ்காரரே ஒரு வீட்டுக்குள்ளோ, உணவு விடுதிக்குள்ளோ நுழைந்து மாட்டுக்கறி சாப்பிட்டார் என்று ஒருவரைக் கைதுசெய்து வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க முடியும். இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் 'பசுவதைத் தடுப்பு' என்ற பார்ப்பனிய சட்டம் அமுலில் உள்ளது. **ஆனால், சாப்பிடுகிறவர்களையும் குற்றவாளியாக்கும் சட்டம் எந்த ஒரு மாநிலத்திலும் இல்லை. மற்றொரு செய்தியையும் குறிப்பிட வேண்டும்.**

குஜராத்தில் கேசுபாய் பட்டேல் தலைமையில் பா.ஜ.க. ஆட்சி நடந்தபோது (1998-2001) மாட்டுக் கறியை சாப்பிடுவதையே குற்றம் என்று அரசாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டது. அப்போது மத்தியில் வாஜ்பாய் பிரதமர். மத்திய பா.ஜ.க. ஆட்சியே இந்த அரசாணையை திரும்பப் பெறுமாறு கேட்டதற்கிணங்க கேசுபாய் அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். ஆனால், இப்போது 'மதச்சார்பின்மை' பேசிக் கொண்டிருக்கும் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் குடியரசுத் தலைவர் இந்த பார்ப்பனிய சட்டத்துக்கு கடந்த 2011 டிசம்பர் 22 ஆம் தேதி ஒப்புதல் வழங்கியுள்ளார். மத்திய பிரதேச அரசிதழிலும் இது வெளியிடப்பட்டு விட்டது. ம.பி. மாநிலத்தில் எதிர்க்கட்சியாக இருக்கும் காங்கிரஸ் கட்சியும், சட்டசபையில் மென்மையான எதிர்ப்பை பதிவு செய்து, ஒதுங்கிக் கொண்டுவிட்டது.

ம.பி.யில் போபாலிலும் ஏனைய நகரங்களிலும் மாட்டுத் தொழுவம் போன்ற குடிசைகளில்தான் முஸ்லீம்கள் வாழ்ந்து வருகிறார்கள். கடந்த 8 ஆண்டுகளாக இந்த மாநிலத்தில் நடக்கும் பா.ஜ.க. ஆட்சியில் இப்படி வாழும் முஸ்லீம்களின் 'தொழுவங்கள்' பல மடங்காக அதிகரித்து விட்டது.

முதலமைச்சர் சவுகான், 2006 இல் 'பசு புனிதமான மிருகம்' என்று அறிவித்து, 200 ஹெக்டர் நிலப் பரப்பில் கிழடு தட்டிப் போன பசு மாடுகளைப் பராமரிக்கும் 'கவுசலா'க்களை அரசு செலவிலேயே அமைத்துள்ளார். 'பசு பாதுகாப்பு வாரியம்' ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. அரசு நிதி உதவியோடு மாநிலம் முழுதும் ஏராளமான பசு பாதுகாப்பு மய்யங்கள் உருவாக்கப்பட்டு, பல கோடி பணம் செலவிடப்படுகிறது. இதில் ஊழல் தலைவிரித்தாடுவதாக பல தொண்டு நிறுவனங்களும் எதிர்கட்சிகளும் குற்றம்சாட்டி வருகின்றன.

பசுவுக்கு மட்டும் பாதுகாப்பு தரும் ம.பி. அரசு எருதுகளை வெட்ட அனுமதித்துள்ளது. இந்தியாவிலிருந்து எருதுகளைஏற்றுமதி செய்வதில் முதலிடம் ம.பி. மாநிலம்தான். 'பசு', 'பிராமணன்' ஆகவும், 'எருது', 'சூத்திரன்' ஆகவும் கருதப்படுகிறது. எனவே தான் பார்ப்பனர் மாடு வளர்த்தால் பசு மாட்டை வளர்ப்பார்களே தவிர எருதுகளை வளர்க்க மாட்டார்கள்.

அதுமட்டுமல்ல, அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்.



ம.பி. முதல்வர் சவுகான் பசு மாட்டுக்கு மாலையிட்டு வழிபடுகிறார்

சில் சேரலாம். அது கலாச்சார அமைப்பு என்று ம.பி. அரசு 2006 பிப்ரவரியில் அறிவித்தது.

அரசுத் திட்டங்களின் பெயர்கள்கூட 'இந்துத்துவ' கண்ணோட்டத்திலேயே சூட்டப்படுகின்றன. பெண் குழந்தைகள் மேம்பாட்டுக்கான திட்டத்துக்கு 'லாட்லி லட்சுமி' என்றும், நீர்வள மேம்பாடு திட்டத்துக்கு 'ஜலாபிஷேக்' என்றும் கல்வி மேம்பாடு திட்டத்துக்கு 'தேவ் புத்ரா' என்றும் பெயர்சூட்டியிருக்கிறார்கள்.

ம.பி.யில் அரசு பள்ளிகளில் ஒவ்வொரு நாளும் மாணவர்களுக்கு 'சூரிய நமஸ்காரம்' 2007 ஆம் ஆண்டு முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் மதிய உணவு சாப்பிட வரும் குழந்தைகள், உணவுக்கு முன் 'போஜன் மந்திரா' என்ற சமஸ்கிருத மந்திரத்தை உச்சரிக்க வேண்டும். கீதையின் மய்யக் கருத்துகள் பள்ளிகளில் கட்டாயமாக கற்றுத் தரப்படவேண்டும் என்று 2011 இல் மாநில முதல்வர் உத்தரவிட்டுள்ளார். இதை எதிர்த்து சில அமைப்புகள் நீதிமன்றம் போனாலும், மாநில உயர்நீதிமன்றம் அரசு உத்தரவு செல்லும் என்று தீர்ப்பு கூறிவிட்டது.

புராணங்களில் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படும் மகேசுவர், உஜ்ஜயின் போன்ற நகரங்களை 'புண்ணிய நகரங்களாக' அறிவித்துள்ளதோடு அதற்கு இந்து புராணப் பெயர்கள் சூட்டப்படுகின்றன.

ஆர்.எஸ்.எஸ். அரசு உதவியோடு நடத்தும் 'ஏகல் வித்யாலயா' பள்ளிகளில் சரசுவதி வந்தனம், சமஸ்கிருத சுலோகங்களை ஓதுவது அனைத்து மதப் பிரிவு மாணவர்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளில் ஆர்.எஸ்.எஸ். நடத்தும் கல்வி நிறுவனங்கள் எண்ணிக்கை ஏராளமாக அதிகரித்துள்ளது.

அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் பல்கலைக் கழகங்களும் சங்பரிவார் பரப்புரை மய்யங்களாக மாற்றப்பட்டுள்ளன. பழங்குடி மக்கள் வழிபட்டு வந்த ஆண், பெண் கடவுள்களும் 'இந்து' கடவுள்களாக மாற்றப்பட்டுவிட்டன.

கிறிஸ்தவர்கள் நடத்தும் நிறுவனங்கள் பற்றி கணக்கெடுப்பு நடத்துமாறு மாவட்ட நிர்வாகத்துக்கு அரசு 2010 இல் ரகசிய உத்தரவு பிறப்பித்தது. ஊடகங்களில் இந்த செய்தி வெளியானவுடன் அரசு உத்தரவை திரும்பப் பெற்றது.

மதமாற்றத்தைத் தடை செய்யும் கடுமையான சட்டம் ஒன்று சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சிறப்பு ராணுவ அதிகாரச் சட்டங்களைப் போல் கடுமையான பிரிவுகளை உள்ளடக்கியிருக்கிறது இந்த சட்டம்.

அரசின் பசு பாதுகப்பு சட்டத்தால் முஸ்லீம்கள், தலித்துகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். இறந்த பசு மாட்டுத் தோல் மற்றும் கொழுப்புகளைப் பயன்படுத்தி அந்தத் தோலைக் கொண்டே செருப்புகளை தயாரிக்கிறார்கள். 'சாமர்' என்ற தலித் பிரிவினர்; அவர்கள் வாழ்வாதாரம் பறிக்கப்பட்டு விட்டது.

இந்தியாவில் மக்கள் அதிகமாக சாப்பிடுவது மாட்டிறைச்சிதான். ஆண்டுக்கு 26 லட்சம் டன் மாட்டிறைச்சியை இந்தியர்கள் சாப்பிடுகிறார்கள். 6 லட்சம் டன் ஆட்டிறைச்சியும், 14 லட்சம் டன் பன்றி இறைச்சியையும், இந்தியர்கள் சாப்பிடுவதாக அய்.நா.வின் கால்நடை குறித்த தகவல், பகுப்பாய்வு மய்யம் கூறுகிறது. உலகில் மாட்டிறைச்சி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இந்தியா 3வது இடத்தில் இருக்கிறது. ஆண்டுக்கு 1.28 மில்லியன் டன் மாட்டிறைச்சி ஏற்றுமதியாகிறது. இதே ம.பி. மாநிலம் போபாலில் தான் இந்தியாவின் மிகப் பெரிய எருது மற்றும் ஆடு வெட்டும் நிறுவனங்கள் உள்ளன. இதை நடத்துகிறவர்கள், இந்து 'பனியா'க்களும் 'ஜெயின்' பிரிவினரும் தான்.

அமெரிக்காவில் வாழும் பார்ப்பனர்களும் பனியாக்களும் 'விசுவ இந்து பரிஷத்' அமைப்பை உருவாக்கி, 'இந்திய வளர்ச்சி மற்றும் புனர்வாழ்வு நிதியம்' (India Develop and Relief Fund) என்ற தொண்டு நிறுவனத்தின் வழியாக பல ஆயிரம் கோடி டாலர்களை இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கு திருப்பி விடுகிறார்கள்.

இயற்கையை வழிபடும் பழங்குடி மக்களை 'இந்து'க்களாக மாற்றும் 'ஷுருதி மேளா' (தூய்மைப் படுத்தும் சடங்கு)க்களை விசுவ இந்து பரிஷத் நடத்தி வருகிறது. உ.பி., அரியானா, ஜார்கன்ட் மாநிலங்களில் இந்த மதமாற்ற சடங்குகள், கடந்த சில ஆண்டுகளில் நடத்தப்பட்டுள்ளன. 2011 டிசம்பரில் உ.பி. மாநிலம் ஷாஜான்பூரில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் 1200 பழங்குடிமக்கள் - 'இந்து'க்களாக மாற்றப்பட்டுள்ளனர். இந்துக்களான பிறகு இவர்கள் எந்த சாதிப் பிரிவில் சேர்க்கப்படுவார்கள்? நிச்சயமாக இந்துமதம் 'அவர்ணஸ்தர்களாக' அறிவித்துள்ள தாழ்த்தப்பட்டோர் பிரிவில்தான் இவர்களுக்கு இடம் வழங்கப்பட்டிருக்கும்.

### பசுவுக்கு ஆணையமாம்!

இந்தியாவில் 35000 கிராமங்களில் ஆர்.எஸ்.எஸ். நடத்தும் வித்யாபாரதி மற்றும் ஏகல் வித்யாலயா பள்ளிகள் நடக்கின்றன என்று ஒரு ஆய்வு கூறுகிறது. இதில் 'இந்துத்துவ' கோட்பாடுகளே பாடங்களாக்கப்பட்டுள்ளன.

சத்தீஸ்கர், உத்தரகாண்ட் மாநிலங்களில்

6 ஆம் பக்கம்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/12-14 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# மாட்டுக்கறியை உண்பதே குற்றமாம்!

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

நடக்கும் பா.ஜ.க. ஆட்சிகள், 'இந்துத்துவ' ஆட்சிகளாகவே செயல்படுகின்றன. உத்தரகான்ட் மாநிலத்தில் 'கோமாதா' (பசு வணக்கம்) வழிபாடும், சமஸ்கிருதப் பாடங்களும் மாணவர்களிடம் கட்டாயமாக்கப்பட்டுள்ளன. உத்தரகாண்ட்டில் பசு பாதுகாப்புக்காக முழு அதிகாரத்துடன் நிர்வாக அமைப்புகளோடு, ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு பசு பாதுகாப்பு சட்டம் கொண்டு வரப்பட்டு, பசுவை வெட்டுவதையும், கடத்துவதையும் குற்றமாக்கியுள்ளனது. மாநிலம் முழுதும் 'கோ சாதனா' என்ற பெயரில் பசு காப்பு மய்யங்கள் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்படும் மய்யங்களுக்கு அரசு விருதுகளை வழங்கி வருகிறது.

பசு மாட்டு மூத்திரத்தை ஆராய்ச்சி செய்யும் சோதனைச் சாலைகளை இம்மாநில அரசு நடத்துகிறது. பல ஆராய்ச்சி நிலையங்களுக்கு பசு மாட்டு மூத்திரத்தை மாநில அரசே சேகரித்து அனுப்பி வருகிறது. டேராடூம் மாவட்டத்தில் கால்சி எனும் பகுதியில் பசு மூத்திரத்தை பதப்படுத்தும் மய்யம் ஒன்று செயல்படுகிறது. யோகா மய்யம் நடத்தும் பாபாராம்தேவ் தனது நிறுவனத்தின் மருந்து உற்பத்திக்காக ஒவ்வொரு மாதமும் இந்த மய்யத்திலிருந்து 40 லிட்டர் பசு மூத்திரத்தை லிட்டர் ரூ.20 என்ற விலைக்கு வாங்குகிறார்.

உத்திரகாண்ட் ஆட்சி ரிஷி கேஷத்தில் 'பசு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆய்வு நிறுவனம்' ஒன்றை நிறுவியுள்ளது. இதற்கு ரூ.20 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**உத்தரகாண்டில்....**

கடந்த பத்தாண்டுகளாக உத்திரகாண்டில் பா.ஜ.க. ஆட்சியே நடக்கிறது. 100 சமஸ்கிருத பள்ளிகள் மற்றும் கல்லூரிகளை உருவாக்கி, வேதம் தொடர்பான பார்ப்பன சடங்குகளைப் பயிற்றுவித்து வருகிறது. இந்தக் கல்லூரிகளுக்கு அரசு நிதி உதவி வழங்குவதோடு ஆசிரியர்களுக்கும் அரசு ஆசிரியர்கள் பெறும் ஊதியமே வழங்கப்பட்டு வருகிறது. சமஸ்கிருதம் - அன்றாடம் பயன்படுத்தப்படும் வழக்கு மொழியாக மாற வேண்டும் என்பதே அரசின் நோக்கம் என்று ஒரு மூத்த அதிகாரி கூறுகிறார்.

சமஸ்கிருதத்துக்காக தனிப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளதோடு, நான்கு பல்கலைக்கழகங்களில் சமஸ்கிருதம் பயிற்றுவிக்கப்படுகிறது. சமஸ்கிருத பள்ளிகளுக்கு இலவச மதிய உணவு, பாட நூல்கள், கணினிகளை வழங்கி, மாணவர்களுக்கு உதவித் தொகைகளையும் அரசு வழங்குகிறது. சமஸ்கிருத வளர்ச்சிக்காக சிறப்பு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட் டுள்ளார். அரசு ஆவணங்கள் சமஸ்கிருத மொழிகளிலேயே கிடைத்து விடுகின்றன. சமஸ்கிருதத்திலேயே உரையாட பயிற்சி வகுப்புகள் நடக்கின்றன. ஒரு லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் இதுவரை பயிற்சி பெற்றுள்ளனராம். சமஸ்கிருத மொழி வழியாகவே சமஸ்கிருத பாடங்கள் நடத்தப்படுகின்றன.

### சமஸ்கிருதம் - ஆட்சி மொழி

அரசின் இரண்டாவது ஆட்சி மொழியாக சமஸ்கிருதத்தை உத்தரகாண்ட் அரசு அறிவித்துள்ளது. இந்தியாவிலேயே இப்படி அறிவித்துள்ள முதல் ஆட்சி உத்தரகாண்ட்தான். அரசு தலைமைச் செயலகத்தில் பெயர்ப் பலகைகளில் சமஸ்கிருதம் இடம் பிடித்துவிட்டது. அரசு இரண்டு கிராமங்களை தேர்வு செய்து (தம் தோலா மற்றும் சிமோத்தா) சமஸ்கிருத கிராமமாகவே மாற்றும் முயற்சிகளை முடுக்கிவிட்டு, அன்றாடம் பேசும் மொழியாகவே சமஸ்கிருதத்தை மாற்றப் போகிறார்களாம். அரித்துவார் மற்றும் ரிஷிகேஷ் நகரங்கள் சமஸ்கிருத நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வேதம், புராணங்களில் பயிற்சிப் பெற்ற (பார்ப்பன) புரோகிதர்களின் தேவை அதிகரித்து வருகிறது என்றும், அதற்கு 'புரோகிதர்களை' உருவாக்கும் தங்களின் முயற்சிகள் நல்ல எதிர்காலத்தை உருவாக்கும் என்றும் சமஸ்கிருத பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான சுஷில் உபாத்யாயா என்ற பார்ப்பனர் கூறுகிறார். ராணுவத் துறையில்கூட பார்ப்பன பண்டிதர்களுக்கான தேவைகள் இருப்பதாகவும் அதற்கும் பண்டிதர்களை அனுப்பவிருப்பதாகவும் அவர் கூறுகிறார். குப்தர் ஆட்சி காலத்தில் நடந்ததுபோல் பார்ப்பனர்கள் பா.ஜ.க. ஆட்சியில் கொழுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சத்தீஸ்கர் மாநிலத்தில் கிறிஸ்துவ மதத்தினருக்கு பாதுகாப்பு இல்லை. 'தரம் சேனா' போன்ற ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் மதமாற்றம் நடக்கிறதா என்பதை சோதனையிடப் போவதாகக் கூறி, கிறிஸ்தவ வழிபாட்டுத் தளங்களுக்குள்ளும் கிறிஸ்துவ கல்வி நிறுவனங்களுக்கும் அத்துமீறி நுழைந்து விடுகிறார்கள். சர்ச்சுக்குப் போகிறவர்கள் தாக்கப்படுவது வழக்கமாகிவிட்டது. ஒவ்வொரு நாளும் அச்சத்தின் பிடியிலேயே வாழ்வதாக சத்தீஸ்கர் கிறிஸ்தவ கழகத்தின் தலைவர் அரண்பண்ணலால் என்பவர் கூறுகிறார். கிறிஸ்துவர்கள் நடத்தும் கான்வென்ட் பள்ளி வளாகத்துக்குள் அத்துமீறி நுழைந்து ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் சரசுவதி பூசைகளை நடத்துகிறார்கள். காவல்துறையில் புகார் தந்தால் எந்த நடவடிக்கையும் இல்லை என்றும் கூறுகிறார்கள். பாதிரியார்களும் கிறிஸ்தவ குடும்பத்தினரும் ஆர்.எஸ்.எஸ்.காரர்களால் தாக்கப்படுகிறார்கள்.

குஜராத்தில் மோடி ஆட்சியை பொற்கால ஆட்சியாக பார்ப்பனர்கள் புகழாரம் சூட்டுகிறார்கள். தொழில் வளர்ச்சி என்ற பெயரில் பட்டேல்களையும் பன்னாட்டு நிறுவனங்களையும் கொழுக்க வைத்துக் கொண்டிருக்கிறது மோடி ஆட்சி. குஜராத் இனப் படுகொலையில் 'மத வெறுப்பாளராக' சர்வதேச அடையாளம் பெற்றுவிட்ட மோடி, இப்போது, 'மதச்சார்பின்மை' காவலராக தன்னை அடையாளம் காட்ட, உண்ணாவிரத நாடகங்களை நடத்தி வருகிறார். உதட்டளவில் ஏமாற்றுப் பேச்சுகளை உதிர்த்து வரும் அவரிடம் செயலில் எந்த மாற்றத்தையும் பார்க்க முடியவில்லை என்பதையே அங்கிருந்து வரும் செய்திகள் உணர்த்துகின்றன.

**(அது பற்றி அடுத்த இதழில்)**

**தகவல்: 'பிரண்ட்லைன்' (பிப்.26, 2012)**

---

முதல் பக்கத் தொடர்ச்சி

விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்பாத கட்டுமான நிறுவனங்கள், பாதித் தொகையை நன்கொடையாக ஏற்கனவே வழங்கிவிட்டன. எஞ்சிய தொகையை மக்களிடம் திரட்டப் போவதாக கூறும் போட்டன், 2013 இல் கட்டுமானப் பணிகளை தொடங்க திட்டமிட்டுள்ளார்.

மற்றொரு நாத்திகரும், 'கடவுள் அதீத கற்பனை' என்ற உலகப் புகழ் பெற்ற நூலை எழுதியவருமான ரிச்சர்ட்டு டாக்கின்ஸ், இந்த முயற்சியை விமர்சிக்கிறார். "நாத்திகர்களுக்கு கோயில் தேவையில்லை. இந்தத் தொகையை வேறு சிறந்த திட்டங்களுக்கு பயன்படுத்தலாம். நாத்திக நெறியை பரப்புவதற்கு செலவிட விரும்பினால், மதச் சார்பற்ற கல்வியை வளர்ப்பதற்கும், மதச்சார்பற்ற பள்ளிகளை உருவாக்குவதற்கும் பயன்படுத்தலாம். இந்தப் பள்ளிகளில் பகுத்தறிவு, மூட நம்பிக்கைகளுக்கு எதிரான விஞ்ஞானக் கல்விகளை பாடமாக்கலாம் என்று கூறுகிறார். மாறாக, மத நம்பிக்கையாளர்கள் கட்டிடக் கலையைப் போற்றுவதற்கு வாய்ப்புகள் இருக்கும்போது, நாத்திகர்கள் மட்டும் அந்த உணர்வுகளை ஏன் இழக்க வேண்டும் என்கிறார் போட்டன். செயின்ட் கில்ஸ் என்ற மிகப் பெரிய 'சர்ச்' சுக்கு அருகே இந்த 'நாத்திக கோயில்' கட்டப்பட இருக்கிறது.

அந்த சர்ச்சின் அருட் சகோதரியாக இருக்கும் கேத்தரின் ரூமன்சிடம், இதுபற்றி கேட்டதற்கு சர்ச்சுக்கு அருகே நாத்திக கோபுரம் கட்டக்கூடாது என்று அவர் எதிர்க்கவில்லை. மாறாக, "கடவுளிடம் எதையாவது எதிர்பார்த்து வேண்டுகோள் வைத்தால்தானே மன அமைதி கிடைக்க முடியும்?" இத்தகைய வேண்டுதலுக்கு வாய்ப்பில்லாத கோபுரத்தால் எப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு அமைதி கிடைக்கும்? என்று வேண்டுதலை நியாயப்படுத்துகிறார். ஆனால் ஜார்ஜ் பிட்சர் என்ற மற்றொரு மூத்த பாதிரியார், இந்த முயற்சியை வரவேற்றுள்ளார். "நாம் மதச்சார்பின்மை கொள்கையாளராக இருந்தாலும் மதவாதியாக இருந்தாலும் எல்லாம் ஒரே வாழ்க்கைக்கான விளையாட்டுதான். நாத்திகம் ஆக்கபூர்வ சிந்தனையாக்கப்படுவதை வரவேற்கிறேன்" என்கிறார்.

இப்படி வழிபாட்டு இடத்துக்கு அருகே நாத்திக கோயில் கட்டினால், நம்ம ஊர் 'தினமலர்'களும், 'ராமகோபாலன்'களும் என்ன செய்திருப்பார்கள்? நாத்திகர்களைக் கைது செய், தடை செய் என்று வானத்துக்கும் பூமிக்குமிடையே தாண்டிக் குதித்திருப்பார்கள். இதுதானே பார்ப்பன மதத்தின் யோக்கியதை!

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

## பிரார்த்தனைக்குத் தடை: பிரிட்டனில் நாத்திகர் தொடர்ந்த வழக்கு வெற்றி

உள்ளூராட்சி மன்ற கூட்டங்களின் ஒரு பகுதியாக பிரார்த்தனைகள் நடத்தப்படுவதை எதிர்த்து பிரிட்டன் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த நாத்திகருக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. மேற்கு இங்கிலாந்தில் இருக்கும் பிட்போர்ட் உள்ளூராட்சி மன்றத்தின் முன்னாள் உறுப்பினர் கிளைவ்போன் என்பவர் இந்த மன்ற கூட்டங்களில் நடத்தப்படும் பிரார்த்தனை கூட்டங்கள் தன்னை சங்கடப்படுத்துவதாகவும் தனக்கு பாதகமாக அமைவதாகவும் கூறி வழக்கு தொடர்ந்திருந்தார்.


உளளூராட்சி மன்ற கூட்டங்களின் ஒரு பகுதியாக பிரார்த்தனை நடத்தும் பழக்கத்தை நடைமுறைப்படுத்தியதன் மூலம், இந்த குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றம் தனது அதிகார எல்லைக்கு அப்பால் சென்று செயற்பட்டிருப்பதாக லண்டனில் இருக்கும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

இந்த குறிப்பிட்ட தீர்ப்பானது பிரிட்டனின் பொது வாழ்க்கையில் கிறித்துவத்தின் பங்கை பெருமளவு பாதிக்கத்தக்கதாக இருக்கும் என்று இந்த உள்ளூராட்சி மன்றத்தின் கிறித்துவ உறுப்பினர் ஒருவர் கருத்து தெரிவித்திருக்கிறார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 16th February 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2043 | பிப். 23, 2012 | புரட்சி 11 | முழக்கம் 06 | விலை: ரூ.2.50

## உலகத் தமிழர்கள் சாதியை ஒழிக்க மலேசியா பகுத்தறிவு மாநாடு அறை கூவல்

# பினாங்கில் பெரியாருக்கு சிலை





மலேசியத் தமிழர் தன்மான இயக்கம் சார்பில் பன்னாட்டுப் பகுத்தறிவு மாநாடு ஜன.27, 28, 29 தேதிகளில் கோலாலம்பூரிலுள்ள 'பேர்ல் இன்டர் நேஷனல்' ஓட்டலில் சிறப்புடன் நடந்தது. மாநாட்டுக் குழுத் தலைவர் முனைவர் பெரு. அ. தமிழ்மணி, செயலாளர் ரெ.சு. முத்தையா உள்ளிட்ட மாநாட்டுக் குழுவினர் மலேசிய அரசு ஆதரவுடன் இந்த மாநாட்டை நடத்தினர். மலேசியாவில் தமிழ் அமைச்சர்கள் டத்தோ ஜி. பழனிவேலு, டத்தோ சுப்ரமணியம், டத்தோ சரவணன், முன்னாள் அமைச்சர் டத்தோ சாமிவேல் சிறப்பு விருந்தினராக மாநாட்டில் பங்கேற்றுப் பேசினர். கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ஜன. 28 ஆம் தேதி 'பெரியார் காட்டிய பகுத்தறிவுப் பாதை' என்ற தலைப்பில் நிறைவுரையாற்றினார்.

மா.பெ.பொ. கட்சி அமைப்பு செயலாளர் தோழர் ஆனைமுத்து, பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தொல். திருமாவளவன், வழக்கறிஞர் இள. புகழேந்தி, இயக்குனர் வேலு பிரபாகரன், ஓவியா, பேராசிரியர் அ. மார்க்ஸ், கவிஞர் ஆதவன் தீட்சன்யா, முனைவர் இளங்கோவன், மருத்துவர் உசேன், நடிகர் வாகை சந்திரசேகர் ஆகியோர் மாநாட்டில் தமிழகப் பிரதிநிதிகளாக பங்கேற்றுப் பேசினர். ஜன.30 ஆம் தேதி மாலை 5 மணியளவில் பினாங்கு மாநிலத்தில் கப்பனா பத்தாங் எனுமிடத்தில் மாநாட்டுக் குழுவால் நிறுவப்பட்டிருந்த பெரியார் சிலையை தோழர் ஆனைமுத்து திறந்து வைத்து உரையாற்றினார். உலகத் தமிழர்கள், சாதியை ஒழித்த தமிழர்களாக மாறவேண்டும் என்றும், பெரியார் ஒருவரே வழிகாட்டும் தலைவர் என்றும் மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெரியார் மலாயா (மலேசியா) சுற்றுப் பயணத்தை மேற்கொள்வதற்காக 15.12.1929 இல் நாகப்பட்டிணம் துறைமுகத்தில் கப்பல் ஏறினார். அவருடன் நாகம்மையார், எஸ். இராமனாதன், அ. பொன்னம்பலனார், சாமி. சிதம்பரனார், சி.நடராசன் ஆகியோர் சென்றனர். 20.12.1929 இல் பினாங்கு துறைமுகம் வந்து இறங்கினர். 50,000-க்கும் மேற்பட்ட தமிழர்கள் பெரியாரை வரவேற்றனர். 29.12.1929 இல் பினாங்கு அருகே உள்ள ஈப்போ என்ற நகரில் தமிழர் சீர்திருத்த மாநாட்டைத் தொடங்கி வைத்து பேசினார்.

மீண்டும் இரண்டாவது முறையாக 1954 ஆம் ஆண்டில் பெரியார் மலாயா நாட்டுக்குப் பயணமானார். பர்மாவில் இரங்கூனில் அம்பேத்கருடன் உலக பவுத்தர் மாநாட்டில் பங்கேற்றுவிட்டு, அங்கிருந்து 'சங்கோலியா' எனும் கப்பலில் புறப்பட்டு 14.12.1954 இல் மீண்டும் பினாங்கு வந்து சேர்ந்தார். 16.12.1954 இல் கோலாப் பிறை செயின்ட் மார்க் பள்ளித் திடலில் உரையாற்றினார். அதே பினாங்கு மாநிலத்தில் இப்போது பெரியார் சிலை திறக்கப்பட்டுள்ளது வரலாற்றுச் சிறப்பாகும்.

சிலை திறப்பு நிகழ்வில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தொல் திருமாவளவன், சுப. வீரபாண்டியன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். அதைத் தொடர்ந்து ஜன.31 அன்று கேடா மாநிலம் சுங்கை பெட்டான் எனும் ஊரில் முன்னாள் அமைச்சர் டாக்டர் டத்தோ எஸ். சுப்பிரமணியன், அவரது துணைவியார் டத்தீன் தாமரைச் செல்வி, 'கெடா' மாநில திராவிடர் கழகத் தலைவர் வடிவேலு ஏற்பாடு செய்த அரங்கு கூட்டத்திலும், பிப்.1 அன்று கூலிங் நகரில் மலேசிய தி.க. தோழர் டாக்டர் முரளி மற்றும் நாரண. திருவிடச் செல்வன் ஏற்பாடு செய்த நிகழ்விலும் 'பெரியார் சுட்டிய தமிழர் பண்பாடு' எனும் தலைப்பில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். மறைந்த கழகப் பரப்புரையாளர் கீசகன் மகனும், கோலாலம்பூரில் பொறியாளராக பணியாற்றி வரும் சேரலாதன், அவரது துணைவியார் பேராசிரியர் ஷாலினி, கீசகன் துணைவியார், கழகப் பொதுச்செயலாளரை கோலாலம்பூரில் அன்புடன் வரவேற்று தங்களது இல்லத்திலேயே தங்க வைத்து வழியனுப்பி வைத்தனர்.

## பெரியார் கருத்து செயல் வடிவம் பெறுகிறது: 'போரா' சமூகத்தின் பொது சமையல் அறைத் திட்டம்

வீட்டுக்கு வீடு சமையலறைகள் வேண்டாம்; பொது சமையலறை உருவாக வேண்டும் என்று கூறியவர், தந்தை பெரியார். அவரது கருத்து இப்போது செயல்படத் தொடங்கியிருக்கிறது. முஸ்லிம் சமூகத்தில் சீர்திருத்தக் கருத்துகளைக் கொண்ட பிரிவு 'தாவூத் போரா' என்ற சமுதாயப் பிரிவாகும். அவர்களின் மதத் தலைவரான டாக்டர் சையதுனா முகம்மது புர்கானுதீன் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு பொதுச் சமையல் அறைத் திட்டத்தை முன் வைத்தார். இதனால் சமையல் அறையில் முடக்கப்படும் பெண்களின் ஆற்றலை வேறு பணிகளில் திருப்பிவிட முடியும் என்றார்.

புதுடில்லியில் ராஜ்காட் பகுதியில் 2200 போரா சமூகக் குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்களில் பாதிக்கும் மேற்பட்ட குடும்பப் பெண்கள் தங்கள் வீடுகளில் சமையலறையை இழுத்துப் பூட்டிவிட்டு, பொது சமையல் கூடத் திட்டத்துக்கு வந்து விட்டனர். நகரத்தில் 5 பொது சமையல் கூடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எல்லா குடும்பத்துக்கும் ஒரே தரத்திலான உணவு, பொது சமையல் கூடத்திலிருந்து வழங்கப்படுகிறது. இதற்கான கட்டணங்கள் குடும்பத்திடமிருந்து பெறப்படுகின்றன. நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட பல குடும்பத்தினர் கூடுதலாக கட்டணம் செலுத்தி வருகிறார்கள். ஏழைகளாக இருப்போருக்கு குறைந்த கட்டணத்தில் உணவு வழங்க வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

ஏழை பணக்காரர் வேறுபாடின்றி தரமான உணவு அனைவருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. புதுடில்லியில் போரா சமூகத்தினர் 13 வெவ்வேறு பகுதிகளில் வாழ்கிறார்கள். இதில் பாதிக்கும் மேற்பட்ட பகுதிகளில் பொது சமையல் திட்டம் வந்து விட்டது குறிப்பிடத்தக்கதாகும். போரா சமூகப் பெண்கள் சமையலறையிலிருந்து விடுதலை பெற்றதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள்.

## சேலம் [மேற்கு] மாவட்டம் வழிகாட்டுகிறது

சேலம் (மேற்கு) மாவட்டக் கழகம், கழக ஏட்டுக்கு 487 சந்தாக்களை முதல் தவணையாக சேர்த்து முகவர்கள் பட்டியலை தோழர் முல்லைவேந்தன் (மாவட்ட தலைவர்) அனுப்பியுள்ளார். முனைப்புடன் கழக ஏட்டுக்கு சந்தாக்கள் சேர்த்த சேலம் (மேற்கு) மாவட்டக் கழகத்தைப் பாராட்டி மகிழ்கிறோம். (ஆர்)

# பன்னாட்டு நிறுவனங்களை கொழுக்க வைக்க தமிழக மக்கள் மீது மின் கட்டணச் சுமையா?

வீடுகள், சிறு வணிக-தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றின் மின் கட்டணத்தை அடுத்த மாதம் முதல் இரண்டு மடங்கிற்கும் அதிகமாகக் கூட்ட அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த 20 வருடங்களில் அரசுக்கு சொந்தமாக புதிய மின் நிலையங்களை உருவாக்குவதற்கான அனுமதி மறுக்கப்பட்டு உற்பத்தி சிறிது சிறிதாகக் குறைக்கப்பட்டது. மின்சார உற்பத்தி தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டது. தனியார் மின் நிலையங்களில் இருந்து கூடுதல் விலைக்கு மின்சாரம் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. நம் மின்சாரத் துறை கடுமையான நட்டத்தை சந்திக்க வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

விரிவாகச் சொல்வதானால் 1994-95 இல் தமிழக அரசின் உற்பத்தி, மொத்த தமிழகத் தேவையில் 65% ஆக இருந்தது. மத்திய அரசு தொகுப்பிலிருந்து மீதமுள்ள 34.5% பெறப்பட்டது. தனியாரிடம் இருந்து வெறும் 0.5% மின்சாரம் வாங்கப்பட்டது. இந்த காலங்களில் வருவாய் மின்சார வாரியத்திற்கு அதிகமாகவும், உபரியாகவும் இருந்தது. இதைக் கொண்டு புதிய மின் உற்பத்தி திட்டங்களைக் கொண்டு வர இயன்றது. மேலும் விவசாயம், குடிசைகள், நலிவடைந்த தொழில்களுக்கு சலுகை யாக அளிக்கவும் முடிந்தது. 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர், அந்த சமயத்தில் மத்தியில் இருந்த காங்கிரசின் மன்மோகன் சிங், மாண்டெக் சிங்கின் புதிய பொருளாதாரக் கொள்கையால் தமிழ்நாடு மின்சார வாரியம் (அனைத்து மாநிலங்களுக்கும் இதே கதி தான்) சுயமாக மின் உற்பத்திச் செய்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டது. மாறாக தனியாரிடம் இருந்து மட்டுமே வாங்க வேண்டும் எனச் சொல்லப்பட்டது. இதன் அடிப்படையில் 1994 இல் 3858 கோடி ரூபாய் இலாபம் ஈட்டிய மின்சார வாரியம், 2001 இல் 4851 கோடி நட்டத்தை சந்தித்தது. மேலும் மின்சாரத் தேவை 1994 இல் (29075 மில்லியன் யூனிட்) இருந்ததை விட 2007 இல் தேவை 100% (66.815 மில்லியன் யூனிட்) உயர்ந்தது (இருமடங்காகியது). மாநில அரசு சுயமாக மின் உற்பத்திச் செய்யப்படுவதை தடுத்த மத்திய அரசு, தான் பங்களிக்கும் மின்சாரத்தை வெறும் 50% மட்டுமே உயர்த்தியது. 1994 இல் வெறும் 0.5% மின்சாரம் (122 மில்லியன் யூனிட்) உற்பத்திச் செய்த தனியார் நிறுவனங்கள், 2007 இல் 50 % ஆக (23,924 மில்லியன் யூனிட்) மின் உற்பத்தியை செய்ய ஆரம்பித்தன.

இதன் மூலம் மாநில மின்சார வாரியம் தனியார் உற்பத்தியைச் சார்ந்து நிற்க மறைமுகமாக கட்டாயப்படுத்தியது. மேலும் மத்திய அரசு தனது கடமையை கைகழுவி, மின் பகிர்மானம் - உற்பத்திக் கட்டுப்பாட்டை தன் கையில் கொண்டு வந்தது. அதாவது மாநில அரசு தனது இறையாண்மையை இழந்தது. இதனடிப்படையிலேயே நாம் கூடங்குளம் - கல்பாக்கம் அணுமின் உற்பத்தியையும் பார்க்க முடியும். இது மத்திய அரசின் உற்பத்தி திட்டம். இதன் மூலம் மத்திய அரசு மேற்குலக நாடுகளுக்கு ஒப்பந்தமிட்டு தனியாரை ஊக்குவிக்கிறது. மேலும் அணு ஒப்பந்தத்தில் பெரும் பணத்தை இலஞ்சமாக பெறவும் வழிவகை செய்கிறது. ஆனால் உற்பத்தியாகும் மின்சாரம் தமிழகத்திற்கோ, அதன் மக்களுக்கோ அளிக்கப்பட போவதில்லை. இது தனியார் நிறுவனங்களுக்கும், பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படப் போகிறது.

இந்த மக்கள் விரோத தனியார் - மின்வாரிய ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த உயர்நீதிமன்றத் தின் வழியாக மக்களோ, ஆர்வலர்களோ, இயக்கங் களோ தலையிடாமல் இருக்க மின்சாரத்திற்கென ஒரு நீதிமன்றம் பாணியிலான (பஞ்சாயத்து) ஒரு மன்றம், “ஒழுங்குமுறை ஆணையம்” என்கிற பெயரில், புதிதாக அமைக்கப்பட்டது. “மின்சார ஒழுங்கு சட்டம்” இயற்றப்பட்டது. இவை அனைத்தும் தனியாரிடம் உற்பத்தியை அளிப்பதும், மாநில அரசுகள் மின் உற்பத்தி செய்வதை தடுத்து, மின்சார கொள்முதல் ஒப்பந்தங்களை தனியாரின் நலனுக் கேற்ப அளிக்கச் செய்வதற்காக மத்திய அரசால் உருவாக்கப்பட்டவையாகும். உலகமயமாக்கலை இந்தியாவில் நடைமுறைக்குக் கொண்டு வந்த காங்கிரஸ் - மன் மோகன் மேற்குலக அரசின் திட்டத்தின்படி இதை செய்தார்கள். இதன் மூலம் மாநில அரசின் கட்டுப் பாட்டில் மின் உற்பத்தியும், மின்சார கொள்முதல் விலை நிர்ணயமும் இருக்காமல் வழிவகை செய்தது மத்திய அரசு. இதனால் மாநில அரசுகள் சலுகை விலையில் மின்சாரம் விவசாயம் - குடிசை போன்றவற்றுக்கு அளிப்பதை தடுக்க இயலும்.

மேலே சொன்ன அனைத்து நட்டத்தையும் சாத்தியப்படுத்துவதற்காக கடமையாற்றியது மின்சார ஒழுங்குமுறை ஆணையம். இந்த ஆணையம் தனியாருக்கும் - மின்சார வாரியத்திற்கும் உண்டான வழக்குகளில் தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு பெரும் தொகையை பெறுவதற்கு ஏதுவாக தீர்ப்பளித்தது. இதன் மூலம் வருடத்தில் 330 நாட்களும் இயங்காமல் செயல்பட்ட தனியார் நிறுவனங்கள்கூட ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபாய் பணத்தை மின்சார வாரியத்திட மிருந்து பெற முடிந்தது. தனியார் காற்றாலைகளுக்கு ஏதுவாக வருடந்தோறும் 600 கோடி ரூபாய் நட்டத்தை மின்சார வாரியத்திற்கு உருவாக்கியது இந்த ஒழுங்குமுறை வாரியம். சாஃப்டுவேர் நிறு வனங்கள் கேட்காதபோதும்கூட, இந்த நிறுவனங் களுக்கு கட்டணச் சலுகையும் அறிவித்தது. இதை விட உச்சகட்டமாக 189 கோடி ரூபாய் கேட்டு மின்சார வாரியத்தின் மீது வழக்கு தொடர்ந்த பிபிஎன். என்கிற நிறுவனத்திற்கு கிட்டதட்ட 1050 கோடி ரூபாய் நட்ட ஈட்டை வழங்கச் சொல்லி உத்தரவிட்டது இந்த ஆணையம். இவ்வாறு இதுவரை கிட்டதட்ட 53,298 கோடி ரூபாய் நட்டத்தை உருவாக்கி இருக்கிறது.

முன்னர் இதேபோல தனியார் நிறுவனங்களுக் கும், பன்னாட்டு கம்பெனிகளுக்கும், சாஃப்டுவேர் நிறுவனங்களுக்கும் சலுகை விலையில் மற்றும் முன்பிருந்த விலையிலிருந்து குறைத்து மின்சாரத் தைக் கொடுத்த காரணத்தால் நம் மின்சாரத் துறைக் குக் கடுமையான கடன் சுமை ஏற்படுத்தப்பட்டது.

பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு மின்சார விலையில் அளித்த சலுகையின் காரணமாகக் கிட்டத்தட்ட ரூ.50 ஆயிரத்து 512 கோடியை நம் மின்சார வாரியம் இழந்துள்ளது அந்த இழப்பினைப் பொது மக்களான நம்மிடம் இருந்து வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தவணையாக ரூ.9741 கோடி ரூபாயை வசூலிக்க முடிவெடுக்கப்பட் டிருக்கிறது. இதன்படி நமது மின்சார கட்டணம் இரண்டு மடங்காக உயரப் போகிறது.

மின்வாரியத்தின் மொத்த இழப்பீட்டில் வெறும் ரூ.9741 கோடி ரூபாயை வசூலிக்கவே நம் மின் கட்டணத்தை இரண்டு மடங்காக உயர்த்தப் போகிறார்கள். மீதமுள்ள ரூ.40,771 ஆயிரம் கோடியை வரும் ஐந்து ஆண்டுகளில் வசூலிக்கப் போவதாக சொல்லி இருக்கிறார்கள். அப்போது, அடுத்து வரும் ஆண்டுகளில் நம் மின் கட்டணம் எத்தனை மடங்கு அதிகரிக்கப் போகிறார்கள் என்பதை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

இவ்வளவுக்கும் காரணம் யார்?

(அடுத்த இதழில்)

### நன்கொடை

4.12.2011 அன்று சேலம் கழகத் தோழர் இரா.வீரமணி - இலட்சுமி இணையரின் மகள் அருள்மொழி-ஸ்ரீதர் ஆகியோரின் வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா, கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்தேறியது. விழா மகிழ்வாக ரூ.10,000/-, ‘புரட்சிப் பெரியார் முழக்க’ வளர்ச்சி நிதியாக வழங்கப்பட்டது.

5.2.2012 அன்று சுவாமி மலையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்த தங்கள் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த விழா மகிழ்வாக ‘புரட்சிப் பெரியார் முழக்க’ வளர்ச்சி நிதியாக கழகத் தோழர் சி.கோடிசுந்தரம்-கனிமொழி (எ) நா. சரசுவதி இணையர் ரூ.10,000/- நன்கொடையாக வழங்கினர்.

### மணவிழா பதிவு

26.1.2012 அன்று கோபியில் கழக அலுவலகத்தில் சொக்கையா - மணிமேகலை வாழ்க்கை ஒப்பந்தப் பதிவு, பதிவாளர் மற்றும் கழகத் தோழர்கள் விசய சங்கர் (ஒன்றிய பொறுப்பாளர்), அர்ச்சுனன் (மாவட்ட ஒருங்கிணைப்பாளர்), செகநாதன் மற்றும் கழகத் தோழர்கள் முன்னிலையில் நடந்தது. கழக ஏட்டுக்கு ரூ.2000 நன்கொடை வழங்கப்பட்டது.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

### மத நம்பிக்கையாளர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் சேரலாமாம்

“மத நம்பிக்கையாளர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்வதற்கு தடையில்லை” என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ்காரத் தெரிவித் துள்ளார் (“Does not bar persons who have religious faith from joining the party”). மார்க்சிஸ்டுகள் நாத்திகர்களாக இருந்தாலும், மதம் தோன்றி யதற்கான காரணம் சமூகத்தில் அதன் செயல்பாடு பற்றிய புரிதல் இருத்தல் வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். கட்சி ஏடுகள் மார்க்சிஸ்டுகள், மதச் சடங்குகளிலிருந்து விலகி நிற்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தாலும், கட்சியின் செயல் பாடுகளில் மாற்றங்கள் வரத் தொடங்கியுள்ளன. கேரளாவின் சி.பி.அய்.(எம்) நாடாளுமன்ற உறுப்பினர் கே.எஸ். மனோஜ், மத வழிபாடுகளில் பங்கேற்றதை கட்சி எதிர்த்ததால், தனது மத நம்பிக்கையை கைவிட முடியாது என்று, 2009 ஆம் ஆண்டு கட்சியிலிருந்து அவர் விலகினார்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு திருவனந்த புரத்தில் நடந்த கட்சியின் மாநில மாநாட்டை யொட்டி நிறுவப்பட்டிருந்த கண்காட்சியில் மார்க்ஸ், லெனின், சேகுவேரா படங்களோடு ஏசுவின் ஓவியமும் இடம் பெற்றிருந்தது. கல்கத்தாவில் கடந்த 16 ஆம் தேதி முதல் மேற்கு வங்க மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாடு தொடங்கியது. மாநாடு வாயில் ஒன்றுக்கு இந்து மதத் தலைவர் விவேகானந்தர் படத்துடன் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

### தொடரும் ‘பால்ய விவாகக்’ கொடுமைகள்

பெண்கள் சிறுமியாக இருக்கும் போதே திருமணம் செய்து விடும் ‘பால்ய விவாகம்’ எனும் சமூகக் கொடுமையை பார்ப்பனியம் ‘இந்து சமூக வாழ்க்கை’ என்ற பெயரில் சமூகத்தில் திணித்தது. பிறகு பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தக் கொடுமை பாரப்பனர் எதிர்ப்பையும் மீறி சட்டத்தால் தடுக்கப்பட்டது. பிறகு பெண்களின் திருமண வயதை 18 ஆக நிர்ணயித்து, இந்தியாவில் சட்டம் கொண்டுவரப்பட்டது. என்றாலும், பார்ப்பனியம் திணித்த இந்த சமூகக் கொடுமை தொடரவே செய்கிறது.

உலகில் நடக்கும் ‘சிறுமிகள்’ திருமணங்களில் இரண்டாவதாக ‘பாரத புண்ணிய’ பூமியான இந்தியா இடம் பெற்றுள்ளது. இந்தியாவில் 47 சதவீத பெண்கள் 18 வயதுக்கு முன்பே திருமணம் செய்யப்படுகிறார்கள். உலகில் இதில் முதலிடம் பெறுவது வங்க தேசம். (66 சதவீதம்) இந்தியாவில் பீகார் முதலிடம் பெற்றுள்ளது. அம்மாநிலத்தில் 60 சதவீதத்துக்கும் அதிகமான பெண்கள் 18 வயதுக்கு முன்பே திருமணம் செய்யப்பட்டு விடுகிறார்கள். இதில் பாதிக்கும் மேற்பட்ட பெண்கள் 15 வயதிலேயே திருமணம் செய்யப்பட்டு விடு கிறார்கள். ‘மூத்தவர்கள்’ (Elders) என்ற பெயரில் செயல்படும் சர்வதேச மனித நேய அமைப்பு ‘சிறுமிகள் – மணமகள் அல்ல’ என்ற முழக்கத் துடன் இந்தக் கொடுமையை நிறுத்தும் விழிப் புணர்வு இயக்கத்தை நடத்தி வருகிறது. நோபல் பரிசு பெற்ற அருட்தந்தை டெஸ்மோன்ட்டுத்து அய்.நா. மனித உரிமை ஆணையத்தின் முன்னாள் தலைவர் மேரி ராபின்சன் உள்ளிட்ட குழுவினர் பீகார் வந்து பாட்னாவில் இளைஞர்களை சந்தித்துப் பேசினர். பெண்கள் இளம் வயதில் திருமணம் செய்யப்படுவதால் சந்திக்க வேண்டிய ஆபத்துகள், உடல்நலக் கேடுகள் பற்றி விரிவாக எடுத் துரைத்தனர்.

80 சமூக அமைப்புகளை உள்ளடக்கிய இந்த நிறுவனம் உலகம் முழுதும் சிறுமிகள் திருமணத் துக்கு எதிரான விழிப்புணர்வு இயக்கத்தை நடத்தி வருகிறது.

### இராமகோபாலன் வெளியிடாத அறிக்கை

கருநாடக சட்டசபையில் மூன்று பா.ஜ.க. அமைச்சர்கள் அலைபேசியில் ஆபாசப்படம் பார்த்துக் கொண்டிருந்தார்களாம். அதற்காக அவர்கள் பதவி இழந்துள்ளனர். அவர்கள் பக்தி பரவசத்தோடு ‘விநாயகன்’, ‘இராமன்’ பிறந்த கதைகளையும், ‘சிவன்’ திருவிளையாடல் களையும் காட்சி வடிவத்தில் பார்த்துக் கொண்டிருப்பார்கள் என்றே கருதுகிறோம். அதற்காக இப்படியா அவர்கள் பதவியை பறிப்பது? இது மத விரோதம்! தெய்வக் குற்றம்!


“புரட்சிப் பெரியார் முழக்கம்”

ஆண்டுக்கட்டணம் ரூ.150/-

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.

✆ 99416 13535

# குஜராத் மோடி நல்லாட்சி நடத்துகிறாரா?

குஜராத்தில் முஸ்லீம்கள் மீதான இனப் படுகொலையை நடத்தி சர்வதேச அளவில் கண்டனத்துக்குள்ளானவர் மோடி. உச்சநீதிமன்றம் அவரை 'நீரோ' மன்னருக்கு இணையானவராக கூறியது. (ரோம் நகரம் தீப்பற்றி எரிந்தபோது, ரோம் மன்னர், அதுபற்றி கிஞ்சித்தும் கவலைப்படாது 'பிடில்' வாத்தியக் கருவியை மீட்டுக் கொண்டிருந்தார் என்று வரலாறு கூறுகிறது)

இப்போது, அவர் 'மதச் சார்பின்மை' வேடம் போடுகிறார். பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் பிரதமர் பதவியை தட்டிப் பறித்துவிட கனவு கண்டு வருவதால் இத்தகைய நாடகங்களை நடத்தி வருகிறார். இப்போது முஸ்லிம் மக்களிடம் "கடந்த காலத்தை மறந்து விடுங்கள். உங்களின் தேவைகளுக்கான கோரிக்கைகளை குறைத்துக் கொண்டு பெரும் பான்மை சமூகத்துடன் (இந்துக்களுடன்) கலந்து விடுங்கள்; மத அடையாளங்களை கை விடுங்கள்; பிறகு குஜராத் முன்னேறுவதை நீங்கள் பார்ப்பீர்கள்" என்று பேசி வருகிறார்.

உதட்டளவில் முஸ்லிம்களிடம் பரிவு காட்டுவதாக அவர் பேசினாலும், அவரது ஆட்சியின் செயல்பாடுகளில் மாற்றம் ஏதும் வந்துவிடவில்லை. குடியிருப்பு பாதுகாப்பு சட்டத்தில் மோடி ஒரு திருத்தம் கொண்டு வந்துள்ளார். இதன்படி குஜராத்தில் கலவரப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட இடங்களில் அசையா சொத்துகளை (வீடு, நிலம்) ஒரு சமூகத்தினர் மற்றொரு சமூகத்தினருக்கு விற்பதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் பெரும்பான்மை இந்துக்கள் வாழும் பகுதிகளில் அச்சத்துடன் வாழ விரும்பாத முஸ்லிம்கள் வீட்டை விற்றுவிட்டு, வேறு பகுதிக்குச் செல்ல முடியாமல் தடுக்கப்பட்டுள்ளார்கள். அச்சத்தினால், தங்கள் வீடுகளை விற்றுவிட்டு, முஸ்லீம்கள் வெளியேற விரும்பும்போது, 'அடிமாட்டு' விலைக்கு விற்கப் படும் சூழ்நிலை உருவாகிறது என்பதும் உண்மைதான். எனவே இது முஸ்லிம்களுக்கு பாதுகாப்பான சட்டம் என்று அரசு தரப்பில் கூறப்பட்டது. ஆனால், மோடி அரசு கொண்டு வந்த மற்றொரு சட்ட திருத்தத்தில் யாருடைய சொத்தை எவருக்கு விற்க வேண்டும் என்பதை அரசு தான் முடிவு செய்யும் என்ற பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. இதன்படி முஸ்லீம் தனது வீட்டை அல்லது நிலத்தை ஒரு முஸ்லீமுக்கு மட்டும் விற்க முடியும். தலித் ஒரு தலித்துக்கு மட்டுமே விற்க முடியும். இந்து மற்றொரு இந்துவுக்கே விற்க முடியும் என்ற நிலையை மோடி அரசு உருவாக்கிவிட்டது. மாறி விற்பதற்கு தடை போடும் அதிகாரத்தை அரசு தன் வசம் வைத்திருக்கிறது. இதனால் சமூகத்தை மீண்டும் மதத்தின் அடிப்படையில் மோடி கூறு போட்டுள்ளார். இந்த விற்பனையில் சட்ட மீறல் நடப்பதாக, அதாவது, மதம் மாறி விற்பதாக ஏதேனும் புகார் வந்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக தலையிட்டு சொத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட முடியும். இந்த சட்டத் திருத்தத்தினால் முஸ்லிம் குடியிருப்பு, இந்து குடியிருப்பு, அதிலும் உயர்சாதி குடியிருப்பு, தலித் குடியிருப்பு என்று குடியிருப்புகள் "அக்கிர காரங்கள்", "சேரி"கள் போல தனித்தனியே சட்ட ரீதியாகவே பிரிக்கப்பட்டுவிட்டன.

பார்ப்பனியம் திணித்திருந்த வர்ணாஸ்ரம பாகுபாடுகளுக்கு மோடி தனது ஆட்சியில் சட்டவடிவம் தந்துள்ளார். அகமதாபாத் நகரத்தில் அகமதாபாத் பல்கலைக்கழகம் இருக்கும் பகுதியில் 5 கிலோ மீட்டர் சுற்றுப் பகுதியில் ஒரு முஸ்லிம் வீடு கூட கிடையாது என்கிறார், அகமதாபாத்தில் தொண்டு நிறுவனம் நடத்தி வரும் சமூக சேவையாளர் அச்யுத் யக்னிக். அகமதாபாத் நகரில் முஸ்லிம்கள் தாங்கள் விரும்பும் பகுதிகளில் குடியிருக்க முடியாது. அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட சில குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே குடியிருக்க முடியும். அகமதாபாத் புற நகர்ப் பகுதியான ஜீகாபுரா பகுதியில் முஸ்லிம்கள் வேறு வழியின்றி குடியேறும் நிலை உருவாகிவிட்டது. ஓரளவு வசதிப் பெற்று முன்னேறி வரும் நடுத்தர 'தலித்' பிரிவினருக்கு 'இந்து'க்கள் வாழும் பகுதியில் வீடுகள் வாங்குவதற்கு தடையிருப்பதால், அகமதாபாத் நகரின் வெகுதூர புறநகர்ப் பகுதியான 'சந்த்கேடா' என்ற பகுதியில் தங்களுக்காக, தனியாக குடியிருப்பு கூட்டுறவு அமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொண்டு தனியாக வீடுகளைக் கட்டியுள்ளனர்.

அகமதாபாத் நகரில் ஓடும் சபர்மதி ஆறு நகரை இரண்டாக பிரிக்கிறது. ஆற்றுக்கு ஒரு புறம் நகர் பழமையானதாக எவ்வித வசதியுமின்றி கிடக்கிறது. இந்தப் பகுதி முழுதும் முஸ்லிம்கள் ஏழ்மையில் மனிதர்கள் வாழவே முடியாத மோசமான சுகாதார மற்ற குடியிருப்புகளில் உழலுகிறார்கள். சபர்மதி ஆற்றின் மறுபுறம் நவீன வசதிகள், மின்சாரம், சாலை வசதிகளுடன் பல்கலைக்கழகங்கள், ஓட்டல்கள், பல அடுக்கு அங்காடிகளுடன் காட்சி அளிக்கிறது. அங்கே வாழ்வோர் 'இந்துக்கள்'. 1991 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பிளவு, 2002 இல் முழுமை பெற்று முஸ்லிம்கள் நவீன வாழ்க்கையிலிருந்து விலக்கப் பட்டுவிட்டனர் என்கிறார், அச்யுட் எக்னிக். கலவரத்தால் பாதிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களை இழந்துள்ள முஸ்லிம் குடும்பங்கள் 'சிட்டிசன் நகர்' என்ற பகுதியில் குடியேற்றப்பட்டார்கள். இந்தப் பகுதிதான் நகரின் குப்பைகள் முழுதும் கொட்டப் படுகிற பகுதியாகின்றன. மலை மலையாக குப்பைகள் குவிந்து கிடக்கும்; பேருந்து வசதி கிடையாது. "எனது 5 வயது மகள் நாள்தோறும் ஒரு மணி நேரம் நடந்து தான் பள்ளிக்கு செல்ல வேண்டியிருக்கிறது. இதுவே எங்கள் வாழ்க்கை" என்கிறார் சிட்டிசன் நகரில் குடியிருக்கும் பாரூனா என்ற பெண், 2002 ஆம் ஆண்டு கலவரத்தில் இவர் தனது தந்தை, சகோதரரை இழந்தவர்.

மத்திய அமைச்சரவையில் பிரதமர் அமைச்சகத்தில் மைனாரிட்டியினருக்கான பிரிவு ஒன்று செயல் பட்டு வருகிறது. கல்விக்கான உதவித் தொகையை இந்த மைனாரிட்டிப் பிரிவு செயலகம் மாநில அரசுகளுக்கு வழங்கி வருகிறது. மத்திய அரசு வழங்கி வரும் கல்வி உதவித் தொகையை மோடி தனது மாநிலத்தில் வழங்க மறுத்துவிட்டார். இந்த கல்வி உதவித் திட்டம் பாகுபாடானது என்றும், இதை தமது அரசு ஏற்கவில்லை என்றும், மோடி கூறி விட்டார்.

மதச் சிறுபான்மையினருக்கு தனிச் சலுகை காட்டப்படுவதை ஏற்க முடியாது என்று, மோடி கூறுகிறார். ஆனால், பார்ப்பனர்கள் தங்களை மைனாரிட்டிகளாக ஒதுக்கிக் கொண்டு தங்களது ஆதிக்கப் பண்பாட்டை 'பாரம்பரியம்', 'கலாச் சாரம்' என்ற போர்வையில் மக்கள் மீது திணித்து, சமூக மேலாதிக்கம் செய்வதை மட்டும் ஏற்றுக் கொள்கிறார்.

ராஜேந்திர சச்சார் குழு மைனாரிட்டிகள் நிலை பற்றி 2008 ஆம் ஆண்டு சமர்ப்பித்த அறிக்கையில் பள்ளிப் படிப்பை பாதியில் விடும் குழந்தைகள் எண்ணிக்கை முஸ்லிம் சமூகத்தில் தாழ்த்தப்பட்ட பழங்குடியினரைவிட அதிகமாக இருப்பதை கண்டறிந்து அறிவித்தது. அதற்குப் பிறகு தான் மத்திய அமைச்சரவை மதச் சிறுபான்மையினருக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தை அறிமுகப் படுத்தியது. மத்திய அரசின் இந்த கல்வி உதவித் தொகை திட்டத்தை எதிர்த்து அரசின் தூண்டுதலோடு குஜராத் உயர்நீதிமன்றத்தில் பொது வழக்கு தொடரப்பட்டது. மத்திய அரசின், இந்த திட்டம், சட்டப்படி சரியானதுதான் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது. ஆனாலும் மோடி, இத் திட்டத்தை அமுல்படுத்த தயாராக இல்லை. இப்படி, மத்திய அரசு அளிக்க வந்த உதவித் தொகை ரூ.10 கோடி. அதை மோடி திருப்பி அனுப்பிவிட்டார். மோடியின் இனப்படுகொலைக்கு எதிராக 'நீதிக்கான குடிமக்கள்' என்ற அமைப்பின் வழியாக தீரத்துடன் போராடி வரும் தீட்சா செதல்வாட், மோடியின் முஸ்லிம் வெறுப்பை கடுமையாக சாடி வருகிறார்.

குஜராத்தில் 4000 பேர் வழக்கறிஞர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். அரசு வழக்கறிஞர் பதவிகளில், இவர்களுக்கு உரிய இடங்கள் வழங்கப்படுவதில்லை. அதேபோல், காவல்துறையிலும் ஆசிரியர் நியமனங்களிலும் முஸ்லிம்கள் திட்டமிட்டு புறக்கணிக்கப் படுகிறார்கள். பள்ளிப் படிப்பில் மெட்ரிக்குலேசன் வரை செல்லக் கூடியவர்கள் முஸ்லிம்களில் 26 சதவீதம் மட்டுமே. மற்றவர்கள் 41 சதவீதம். பள்ளிப் படிப்புக்கு வரக்கூடிய குழந்தைகள் முஸ்லிம்களில் 75 சதவீதம். ஏனையோர் 79 சதவீதம். நகரங்களில் ஏழ்மையில் வாடும் முஸ்லிம்கள், உயர்சாதி இந்துக்களைவிட 800 மடங்கு அதிகம். மாநிலத்தில் வங்கிகளில் கணக்கு வைத்துள்ள முஸ்லிம்கள் 12 சதவீதம். ஆனால் வங்கிக் கடன் பெற்றவர்கள் 2 புள்ளி 6 சதவீதம்தான் என்று புள்ளி விவரங்களை அடுக்குகிறார், செதல்வாட்.

குஜராத் வேகமாக முன்னேறி வருகிறது என்று திட்டமிட்டு நடத்தப்படும் பரப்புரையையும் அவர் மறுக்கிறார். 1999 ஆம் ஆண்டு சோகை நோயிலும், ஊட்டச் சத்து இல்லாமையாலும் பாதிக்கப்பட்ட பெண்கள் 46 புள்ளி 3 சதவீதம். 2004 இல் இது 55 சதவீதமாக அதிகரித்துவிட்டது. தேசிய மனித உரிமை ஆணையம், தேசிய மைனாரிட்டிகள் ஆணையம், தேசிய பெண்கள் ஆணையம் ஆகியவை, குழந்தைகள் பெண்களுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களில் மோடி ஆட்சி மோசமாக உள்ளது என்று, தங்களது அறிக்கைகளில் கூறியுள்ளன.

'துக்ளக்' சோ-க்கள் மோடியை பிரதமராக்கத் துடிப்பது நாட்டை மதவெறிக் காடாக்கி பார்ப்பன மேலாதிக்கத்தை நிலைநிறுத்தி, சூத்திர, பஞ்சம இஸ்லாமிய, கிறித்தவர்களான திராவிடர்களை அடிமைப்படுத்துவதற்குத்தான்.

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்ற நிகழ்வுகள்

**உடன்குடி :** 17.01.2012 மாலை தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் நடைபெற்ற உச்சநீதிமன்ற வழக்கறிஞர் ராஜீவ் ரூஃபஸ்-சோனாபாய் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கழகத் தலைவர் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சீமான் (நாம் தமிழர் கட்சி), பேராசிரியர் ஜக்மோகன் (உலக சீக்கிய செய்திகள்), ம.செந்தமிழன் (திரைப்பட இயக்குனர்), பாமரன் (எழுத்தாளர்), அற்புதம் அம்மாள், பேராசிரியர் அறிவரசன், முனைவர் சுப. உதயகுமார் (அணுசக்திக்கு எதிரான மக்கள் இயக்கம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோவில்பட்டி :** 18.01.2012 மாலை 7 மணியளவில் கோவில்பட்டி கிருஷ்ணன் கோவில் திடலில் நடைபெற்ற ஈழம்-கூடங்குளம்-முல்லைப் பெரியாறு ஆகியவற்றில் இந்திய அரசின் துரோகத்தை விளக்கி, கழகத்தின் சார்பாக பொதுக் கூட்டம் நடைபெற்றது. கோ.அ.குமார் (மாவட்ட செயலாளர்) தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் அம்புரோசு, துணைத் தலைவர் வேபால்ராசு முன்னிலை வகித்தனர். சிற்பிராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சியைத் தொடர்ந்து, பால் பிரபாகரன் உரையாற்றினார். இறுதியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். இந்திய அரசின் துரோகத்தை விளக்கி கழகத் தலைவர் அடுக்கடுக்கான ஆதாரங்களோடு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் இரா. கலைச்செல்வன் (உழைக்கும் மக்கள் மன்றம்), மாரியப்பன் (பா.ம.க. நகர்மன்ற உறுப்பினர்) ஆகியோர் கலந்து கொண்டனர். சிங்கண்ணன் நன்றியுரை கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை தூத்துக்குடி மாவட்ட கழக தோழர்கள் சிறப்பாக செய்தனர்.

**புளியங்குடி :** 19.01.2012 அன்று நெல்லை மாவட்டம் புளியங்குடியில் மாலை 7 மணியளவில் தமிழ் உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக பொதுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு பார்ப்பன இந்தியாவின் துரோகத்தை அம்பலப்படுத்தி உரையாற்றினார். நிகழ்ச்சியில் பசும்பொன் (தமிழ் தேசிய விடுதலை இயக்கம்), பீர்முகமது (ம.தி.மு.க.), அம்மையப்பன் (பு.இ.மு.), தங்கவேல் (நாம் தமிழர்), சத்யராஜ் (தமிழ் உணர்வாளர் கூட்டமைப்பு), சந்திரமோகன் (ஒன்றிய குழு உறுப்பினர்), பால் பிரபாகரன், காசிராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சாத்தங்குடி :** 21.01.2012 அன்று திண்டுகல் சாத்தங்குடி உறவின்முறை திருமண மண்டபத்தில் செம்பட்டி வின்சென்ட்-விஜயலட்சுமி வாழ்க்கை துணை ஏற்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தி.மு.க. முன்னாள் அமைச்சர் அய்.பெரியசாமி தலைமை தாங்கினார். கழகத் தலைவர் வாழ்க்கைத் துணையேற்பு விழாவை நடத்தி வைத்தார். சக்ரபாணி (ஒட்டன்சத்திரம் ச.ம.உ.), சிவகுருசாமி (தி.மு.க.), பால்பிரபாகரன் (பெரியார் தி.க.) ஆகியோர் உரையாற்றினர். கழகப் பொறுப்பாளர்கள் திண்டுக்கல் சம்பத், ரவனா, தாமரைக் கண்ணன், பழநி நல்லம்பி, ஒட்டன் சத்திரம் பெரியார் நம்பி, ஆல்பர்ட், தாராபுரம் குமார், பெரியகுளம் குமரேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சமூக விரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட தேவேந்திர வேளாளர் கூட்டமைப்பு தலைவர் பசுபதி பாண்டியனின் திண்டுக்கல் இல்லத்திற்குச் சென்று கழகத் தலைவர் அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். க.சு.ரவணா, பால். பிரபாகரன், முருகன் (தி.மு.க.) ஆகியோர் உடன் சென்றனர்.

**செய்தி: இராவணன்**

# இராயப்பேட்டையில் எழுச்சியுடன் நடந்த தமிழ்ப் புத்தாண்டு-தமிழர் திருநாள்

சென்னையில் கழகக் கோட்டையான இராயப்பேட்டையில் வழக்கம்போல் தமிழர் திருநாள் பொங்கல் விழா பெரும் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. 13.1.2012 அன்று வி.எம். தெரு பெரியார் சிலை அருகில் எழில் குலுங்க அமைக்கப் பெற்ற மிகப் பெரும் மேடையில் வீரமங்கை செங்கொடி பறையுடன் நிற்கும் படம் அமைக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு இதே பொங்கல் விழா மேடையில் தனது பறை முழக்கத்தை நடத்தியவர் தோழர் செங்கொடி. பகுதியைச் சேர்ந்த குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளோடு உற்சாகமாக விழா தொடங்கிற்று. தொடர்ந்து ஆதித் தமிழர் கலைக் குழுவினர் பறை இசை மற்றும் கிராமியக் கலை நிகழ்ச்சிகளை அரங்கேற்றினர். பெரியார் அம்பேத்கர், பிரபாகரன் கொள்கை போற்றும் எழுச்சிப் பாடல்களைப் பாடினர்.

கலை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடந்த வாழ்த்துரையில் கவிஞர் தமிழச்சி தங்க பாண்டியன், இயக்குனர் கவுதமன், அற்புதம்மாள், கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினர். அன்பு. தனசேகரன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். டிங்கர் க. குமரன் தலைமையேற்க சித்தார்த்தன், கோ. சீனு முன்னிலை வகிக்க, மு. இராசா நன்றி கூறினார்.

தொடர்ந்து ஆடுதுறை அழகு பன்னீர்செல்வம் தலைமையில் திரையிசைப் பாடல்கள் ‘சமுதாயத்தை சீர்திருத்துகிறதா? சீரழிக்கிறதா’ என்ற தலைப்பில் நகைச்சுவை இன்னிசைப் பேருரை, 3 மணி நேரம் நடந்தது. நள்ளிரவு 12.30 மணி வரை நடந்த இந்த சுவையான கருத்துச் செறிவு மிக்க நிகழ்வை நடுங்கும் குளிரிலும் பொது மக்கள் பெருமளவில் திரண்டு கேட்டனர்.

தென்சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழக செயல்வீரர்கள் இரா. உமாபதி, ஆ. தமிழ்ச் செல்வம், டிங்கர் குமரன், சு. ஆனந்தன், பா. செல்வக்குமார், சுகுமார், சரவணன், தம்பிதுரை உள்ளிட்ட தோழர்கள் கடும் உழைப்பை நல்கி விழா வெற்றிக்கு உழைத்தனர்.




















Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 23rd February 2012

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.